# மின்சக்தி அமைச்சு



# முன்னேற்றம் 2021

## நிகழ்ச்சித்திட்டங்கள் 2022

# கௌரவ. அமைச்சரின் செய்தி



இந்த அமைச்சின் "2021 இன் முன்னேற்றம் மற்றும் 2022 இற்கான எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள்" அறிக்கைக்கு மின்சக்தி அமைச்சின் அமைச்சராக இந்தச் செய்தியை வெளியிடக் கிடைத்தமை தொடர்பாக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் பெரும்பகுதி இந்த அமைச்சில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகக் கடமையாற்றிய முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் செயலாளர் மற்றும் அமைச்சு அதிகாரிகள், மற்றும் அமைச்சின் விடயப் பரப்பிற்குள் உள்ளடங்கும் ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகளின்தும் முன்னெப்போதும் இல்லாதவறு பரவிய உலகளாவிய ரீதியிலான தொற்று நோயும் மற்றும் அதன் தாக்கமும், காரணமாக ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடிக்குள் தொற்றுநோயைக் கவனத்தில் கொள்ளாது அயராது தமது கடமைகளை நிறைவேற்றிய சிறப்பான முயற்சிகள் மற்றும் வழிகாட்டல்களுக்காக எனது கௌரவத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, நீண்ட காலமாக அமுலில இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் தொற்று நோய்க்குள்ளும் கூட, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார தனியார் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் முன்னணி அதிகாரிகளின் அயராத முயற்சிகளுக்காக அவர்களின் பணியை நிறைவேற்றுவதற்கும், மின்சாரம் வாடிக்கையாளர்களுக்கு தடையில்லா சேவையை வழங்குவதற்கும், மற்றும் புதிய திட்டங்களை செயல்படுத்துதல் தொடர்பில் அர்ப்பணிப்புடன் மற்றும் செயல்முறையை விரைவுபடுத்துவதற்கான அர்ப்பணிப்புகளுக்கும் நான் மிகுந்த பாராட்டுடனும் மற்றும் மரியாதையுடன் நன்றி செலுத்த வேண்டும்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி என்பன நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் இலங்கையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அத்தியாவசியமான இரண்டு உள்ளீடுகளாகும். கடந்த சில தசாப்தங்களாக, இந்நாட்டின் மின்சக்திக்கான கேள்வி பெரிதும் நீர் மின்னுற்பத்தியிலேயே தங்கியிருந்ததோடு, பின்னர் மின்னுற்பத்திக் கலவையில் அனல் எண்ணெய் சக்தி மூலங்கள் முக்கிய பங்கு வகித்தன. இந்த புதைபடிம எண்ணெய்யைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்வது மிகவும் விலை அதிகமானதாகவும் மற்றும் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்ததனால் நாம் மாற்று வழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்கு ஆரம்பித்தோம். நிலக்கரி தொடர்பான உயர்வான சர்வதேச ஒழுங்குமுறைகளும், மற்றும் மேன்மை தங்கிய ஜனாதிபதி கோட்டாபய இராஜபக்ச அவர்களின் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியில் 70 சதவீத மின்சக்தியைப் பெற்றுக் கொள்ளல் கட்டாய கொள்கை இலக்கின் மீது நாம் COP 26 சம்மேளனத்திற்குள் "புதிய நிலக்கரி வேண்டாம்: உடன்படிக்கையின் சமனான அனுசரனையாளராக மாறியது. எனவே, எமது மின்சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு (LNG), பிரதான / சிறிய அளவிலான நீர்மின்சக்தி, சூரிய , காற்று , மற்றும் உயிர் திணிக்கைகள் கருத்திட்டங்கள் போன்ற தற்போது உள்ள மற்றும் புதிய மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் இவ்விலக்கை அடைவதற்கு நம் அர்ப்பணிப்புக்களுடன் மீளப்புதுப்பிக்கத்தக்க கருத்திட்டங்களுக்கு முன்னுரிமைஅளிப்பதன் மூலம் எமது இலக்குளை அடைய மற்றும் நம்மைத் தயார்படுத்தி வருகிறோம்

இம்முக்கிய இலக்கை அடைவதற்கான நாம் தற்போது சுயாதீனமாக இருக்கும் காற்று, சூரிய வளங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்காக நடுததர கால, நீண்ட கால திட்டமொன்றை திட்டமிட்டுள்ளதோடு, இப்பெறுமதியான எதிர்பார்ப்புடன் தொழில்நுட்ப இலக்கை அடைவதற்கு எம்முடன் கைகோர்த்து நிற்குமாறு முக்கிய முதலீட்டாளர்களுக்கும் மற்றும் பொறியிலாளர் பெறுகை மற்றும் நிர்மாண நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

இந்த அறிக்கையில், சவாலான ஒரு வருடத்தில் எங்கள் நிறுவனங்களின் மிக முக்கியமான சாதனைகள் தொடர்பான தகவல்களை இவ்வறிக்கையின் மூலம் நாம் உமக்கு முன்வைக்கின்றோம். அமைச்சு தமது கிக ளை உங்கள் முன் வைக்கிறோம். அமைச்சானது அதன் நோக்கத்திற்கு ஏற்ப வாழவும், வாடிக்கையாளர்களுக்கு தரமான வேவையை தொடர்ந்து வழங்கவும், அமைச்சின் விடயப்பரப்பிற்குக் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்பை பேணுவதற்கும் அரசாங்க இலக்கை பூர்த்தி செய்வதற்கும் இயன்ற அனைத்தது முயற்சிகளையும் எடுத்துள்ளன. எமது அதிகாரிகளின் அயராத மற்றும் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ஒத்துழைப்பின் மூலம் எம்மால் நல்ல தீர்மானங்களை அடைய முடிந்தமையானது எமக்குக் கிடைத்த ஒரு பெரும் அடைவாகும்.

நாடு பூராவும் 99.9 சதவீத மின்சாரமயமாக்கலை எட்டியுள்ள போதிலும், மின்னிணைப்புக்கான அடிப்படைக் மின்சேவைகள் இணைப்ப் கட்டணங்களைச் சுமக்க முடியாத காரணத்தினால் இதுவரை மின்சார இணைப்புகளைப் பெற முடியாது போன குடும்பங்களின் எண்ணிக்கை 95,297 என அடையாளம் காணப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கான இலவச மின்சார இணைப்பை வழங்குவதற்காக 750 மில்லியன் ரூபாவை ஒதுக்கி வரவு செலவுத் திட்ட முன்மொழிவாக "தெயட எலிய" திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அவர்களுக்கு இலவசமாக மின் இணைப்பை வழங்கும் நோக்குடன் இது வரை , 95,297 குடும்பங்களில் 24,547 குடும்பங்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு. அநேகமான பிரதேசங்களில் வீடுகளின் கூரைகளின் மீது சூரிய மின்சக்தி வசதிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, போகஸ்வெவ பிரதேசத்தில் மின் விநியோக வரிசைகள் இரண்டினை நிர்மாணிப்பதற்கு இவ்வொதுக்கீட்டின் கீழ் ரூபா 22.78 மில்லியனை விடுவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் கெரவலப்பிட்டியிவில் நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் 300 மெ.வோ திரவமயமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி) மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்தல் மற்றும் முதலாவுத பெரிய அளவிலான 100 மெ.வோ காற்று மின்சக்தி பூங்கா மன்னாரில் நிர்மாணித்தல், 2021 இல் அடைந்த மிக முக்கிய சாதனைகளாக கருத முடியும். அதே போல மற்றுமொரு திரவமயமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு கருத்திட்டங்கள் இரண்டு மற்றும் மிதக்கும் களஞ்சியங்களுடனான மீள ஆவியாக்கும் அலகுகளைக் கொண்ட திரவமயமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு முனைவு வசதிகள் கெரவலப்பிடியவின் ஸ்தாபித்தற்கும் எதிர்வரும் ஆண்டுகளில் வர்த்தக செயற்பாடுகளினை ஆரம்பப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இறுதியாக, மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தொடர்ந்து ஆதரவை வழங்கிய எங்களின் அனைத்து முக்கிய வளர்ச்சிப் பங்காளர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ அமைச்சர் காமினி லொகுகே**

மின்சக்தி அமைச்சர்

# செயலாளரின் செய்தி



2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு முழுவதும், அண்மைய வரலாற்றில் நாம் எதிர் நோக்கிய மிகவும் சவாலான ஒரு காலகட்டமாக விளங்குவதோடு, இக்காலகட்டத்தைக் கடந்து கொவிட் -19 தொற்றுநோய் முழுப்புவியினதும்' சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீது கடுமையான முறையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. முன்னெப்போதும் நிகழாத இவ்வவசர கால நிலைமைக்குள் மின்சார அமைச்சும் அதன் கீழ் இயங்கி வரும் ஏனைய நிறுவனங்களும், நாடு முழுவதும் உள்ள நமது சமூகங்களுக்கு அத்தியாவசியமான மின்சார விநியோக சேவையை வழங்குவதில் முக்கிய பங்கை ஆற்றி வருகின்றன. அன்றாட விழாக்களில் கலந்துகொள்வதற்கு மேலாக, இந்தத் தொற்றுநோயால் எதிர்நோக்கப்பட்ட பெரும் சவால்கள் காணப்பட்ட போதிலும், நாங்கள் எங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நிறுத்தவில்லை. அபிவிருத்திக் கருத்திட்டங்களை விரைவாக வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் எம்மால் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையானது ஜனவரி 2021 முதல் செப்தெம்பர் 2021 வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின்சக்தித் துறை அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் 2022 இல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படும் இத்துறையின் முக்கிய கருத்திட்டங்கள் ஆகியவற்றையும் சித்தரிக்கிறது. தொற்றுநோயின் போது நாடு முழுவதும் தடையில்லாமல் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கக் கூடிய ஆற்றலை உறுதி செய்யக் கூடியதாக இருந்தமை மீளாய்வு செய்யக்கூடிய காலப்பகுதியில் நாம் அடைந்த பெரும் வெற்றியாகும். மேலும், 300 மெ.வோ திரவமயப்படுத்தப்பட்ட இயற்கை வாயு மின் நிலையமொன்றை கெரவெலப்பிட்டியவில் நிர்மாணிப்பதற்கு ஆரம்பித்தமை மற்றும் மன்னாரில் உள்ள தம்பபவணி காற்றாலை மின்சக்திப் பூங்காவின் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தமை ஆகியன நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் விஷேட மைல்கல்லாக விளங்குவதோடு, மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் இக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கிடைத்தமை நாம் அடைந்த மிகப்பெரிய வெற்றியாகவும் குறிப்பிடலாம். எமது மின்சக்தித் திட்ட முறைமைக்கு மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அதிக அளவில் உள்வாங்குவதற்கு ஆற்றலை வழங்குவதன் மூலம் புதிய மின்தொகுப்பு உப நிலையங்களை நிர்மாணிப்பது உள்ளிட்ட மின்செலுத்துகை மற்றும் மின் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான விஷேட செயற்பாடுகளை இக்காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்கு எம்மால் முடிந்தது.

இது தேசிய மின்சகதித் திட்ட முறைமைக்கு மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அதிக அளவில் உள்வாங்குவதற்கு வழி வகுத்தது.

தற்போதைய அரசாங்கக் கொள்கையின் படி, 2030 ஆம் ஆண்டுக்குள் மின்சக்தியில்' 70 சதவீதத்தை மீளப்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலமும். மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலக்கை இடைவதற்காக மின்சக்தித் துறையை செயற்படுத்தும் சவாலான செயற்பாட்டை இவ்வமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எமது திட்டங்கள் மூலம் காட்டப்படுவது என்னவென்றால், இதற்காக இது வரை ஸ்தாபிக்கப்பட்ட மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை இரட்டிப்பாக்க வேண்டும் என்பதாகும். எமது தேசிய மின்திட்ட முறைமையை கேந்திரஸ்தானமாக நிர்வகிக்கும் உணர்வு பூர்வமான தனித்துவமான விரைவூக்கமான வலையமைப்பொன்றாக மாற்றுவது அவசியமாகும். தேசிய மின்சக்தி திட்ட முறைமையை பசுமைப்படுத்தலுக்கு உள்ளாக்குவதோடு. இம்முறைமையை பேணுவது மாத்திரமல்லாமல் இத்திட்ட முறைமையின் ஸ்திரத்தன்மையையும் நம்பகத் தன்மையையும், மற்றும் செயற்பாட்டின் வினைத்திறனையும் மிகவும் முக்கியமான வலையமைப்பு கட்டப் பண்புகளை நிலைநிறுத்துவது மட்டுமல்லாமல் முறைமையை மேம்படுத்தும் பணியும் எங்களுக்கு ஒப்படைத்துள்ள பெரும் சவாலாகவே உள்ளது. இந்த நிலையான, நம்பகமான மற்றும் பசுமையான மின்சக்தித் திட்ட முறைமைக்கான எங்களின் பொறியியல் திட்டங்களின் மூலம் தேசிய மின்சக்தி திட்ட முறைமையின் வலையமைப்பு மற்றும் தொடர்புடைய மின்சக்திக் களஞ்சியப்படுத்தல் அலகுகளை சேர்த்தல் மிக முக்கியமாகக் கருதப்படல் வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது.

எமது அமைச்சுக்கும், சூரிய, காற்று, மற்றும் நீர் மின்னுற்பத்தி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் இராஜாங்க அமைச்சுடன் இணைந்து இரண்டு அமைச்சின் கீழ் இயங்கி வரும் நிறுவனங்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் விஷேட திறனைப் பயன்படுத்தி' பசுமை இலக்குகளை அடைய முடியும் என்பதில் எனக்கு எந்த வித சந்தேகமும் இல்லை.

இக்கட்டான இந்த கால கட்டத்திலும், நாட்டின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்த மின்சக்தித் துறை ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி வசந்தா பெரேரா**
செயலாளர்

# முன்னேற்றம் 2021 மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2022

## உள்ளடக்கம்


06 ஸ்ரீ லங்கா எனொர்ஜீஸ் (ப்ரைவட்) லிமிற்றட் 93-94

05 இலங்கை நிலக்கரி கம்பனி பிரைவேட் லிமிடெட் 87-91

04 எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் 71-86

03 லங்கா இலெக்ட்ரிசிற்றி கம்பனி லிமிற்றட் 65-69

02 இலங்கை மின்சார சபை 23-61

01 மின்சக்தி அமைச்சு 01-21

# மின்சக்தி அமைச்சு

**உள்ளடக்கம்**


1. அறிமுகம், தூர நோக்கு, செயற்பணி…………………………………………………………02
2. அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களும், பிரதான தொழிற்பாடுகளும்……………....02
3. அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் வரும் நிறுவனங்கள்…………………………………………...03
   - இலங்கை மின்சார சபை
   - வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி
   - வரையறுக்கப்பட்ட எல்டீஎல் ஹோல்டிங்ஸ் தனியார் கம்பனி
   - வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி தனியார் கம்பனி
   - வரையறுக்கப்பட்ட லங்கா எனர்ஜிஸ் தனியார் கம்பனி
4. மின்சக்தித் துறையின் நிலை – 2021……………………………………………………...03

4.1 மின்சக்தித் துறைக்கான கேள்வியும் மற்றும் மின்சாரப் பாவனையாளர்களின் வளர்ச்சியும்……………………………………………………………………………...04

5. 2021 ஆம் ஆண்டின் மின்சக்தித் துறையின் முன்னேற்றம்…………………………………05

5.1 மின்னுற்பத்தியின் விரிவாக்கம்……………..……………………………………05

(அ) அனல் மின்னுற்பத்தி……………………………………………………………05

(ஆ) மீளப்புதுப்பிக்கத்தக மின்சக்தி உற்பத்தி………………………………………...06

1. நீர்மின் சக்தி……………………………………………………….....06
2. சூரிய மின்சக்தி…………………….........................................................07
3. காற்று மின்சக்தி………………………………………………...…08
4. ஏனையவை………………………………………………………......09

5.2 மின் செலுத்துகை மற்றும் விநியோக அபிவிருத்தி…………………………………………...09

5.3 வரவு செலவுத் திட்டப்பிரேரணைகளின் கீழ் முன் வைக்கப்பட்ட கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றம்………………………12

5.3.1 தெயட்ட எலிய நிகழ்ச்சித்திட்டம்...............................................................................12

5.4 "கம சமங்க பிலிஸந்தரக்" நிகழ்ச்சித் திட்டத்தின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம்…....................................................................................13

5.5 காலநிலை மாற்றம் தொடர்பாக எடுக்கப்பட்ட செயற்பாடுகள் ......................................................14

5.5.1 மின்சக்தித் துறையின் - தேசிய ரீதியில் தீர்மானம் செய்யப்பட்ட பங்களிப்புகள் (NDCs) 14

5.5.2 கொழும்பு பசுமை அபிவிருத்தி கலந்துரையாடல்........................................................................15

6. 2022 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்..................................................................................................15

6.1 மின்னுற்பத்தி……………………………………………………………………...15

6.2 மின் செலுத்துகை மற்றும் விநியோக அபிவிருத்தி…………………………………………19

7. 2021 ஆம் ஆண்டில் முகங்கொடுக்க நேர்ந்த சவால்களும், அத்தகைய சவால்களை வெற்றி கொள்வதற்கான உபாயங்களும்………………………………………………20

## 1. அறிமுகம், தூர நோக்கு மற்றும் செயற்பணி

மின்சக்தியை நவீன சமூகத்தின் ஜீவ நாடி என இனங்காணப்படுவதோடு. அது துரித அபிவிருத்திக்கும் மற்றும் சமூக அபிவிருத்திக்கும் அவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதியொன்றாகவும் கருதப்படுகின்றது. இந்த இன்றியமையாத தேவையை இனங்கண்டு மின்சக்தித் துறையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினால் மின்சக்தி அமைச்சு மற்றும் சூரிய, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்திக் கருத்திட்டங்களின் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு என இரண்டு அமைச்சுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டளவில் நாட்டின் 100% அனுகலையும் மற்றும் 99.9% மின்சாரமயமாக்கலையும் அடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டிலிருந்து அனுபவித்த கொவிட் 19 தொற்று நோயின் தாக்கத்தின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் வலுவூட்டுவதற்கு எதிர்பார்த்திருந்த பிரதான மின்சக்தி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பல பல மாதங்களாக தாமதப்படுத்தப்பட்டன. கொவிட் தொற்று நோய் நிலைமையிலும் கூட, 2021 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான 100 மெ.வோ காற்று மின்சக்தி நிலையம் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டமை, மற்றும் மார்ச் 05 ஆம் திகதி இலங்கையின் முதலாவது 300 மெ.வோ திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு மின்நிலையத்தை நிர்மாணிப்பதை ஆரம்பித்தல் என்பன 2021 ஆம் ஆண்டில் அடையப் பெற்ற பிரதான வெற்றிகளாகும்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்சாரத்திற்கான கேள்வியில் 70 சதவீதத்தினை மீளப்புத்துயிராக்கக் கூடிய மின்சக்தி மூலங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மின்னுற்பத்தி செய்தலும் , 2050 ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலையாக்கத்தை அடைதல் என்பன தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட கொள்கை இலக்குகளாகும். மேலே குறிப்பிடப்பட்ட இலக்குகளுடன் தொடர்பான எதிர்காலத்தில் புதிய நிலக்கரி மின்நிலையங்கள் எதையும் நிர்மாணிக்காமலிருப்பதற்கு அரசாங்கத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. இவ்விலக்குகளை அடைவதற்காக தற்போது நிலவும் மின் செலுத்துகை வலையமைப்பின் நம்பகத் தன்மையையும், நிலையான தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான முதலீட்டுத் தேவைகள் அமைச்சினால் ஏற்கனவே இனங்காணப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் தூர நோக்கை அடைவதற்காக மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்கள் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்படும்.

### தூர நோக்கு

*நிலைபேறான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்ட இலங்கை*

### செயற்பணி

*மின்னுற்பத்தி, மின்செலுத்துகை, விநியோக வழங்கல், மின்நிலையங்களுக்கான நிலக்கரியைப் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மின்சக்தி தொடர்பான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மின்சக்தித் துறைக்கான தலைமைத்துவத்தினை வழங்குதல்.*

## 2. அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களும் பிரதான தொழிற்பாடுகளும்

2020 அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2196/27 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிக்கைக்கு ஏற்ப, மின்சக்தி அமைச்சுக்கு அமைச்சின் விடயப் பரப்பிற்குள் உள்ளடங்கிய விடயங்களும் மற்றும் செயற்பாடுகளின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் விஷேட முன்னுரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

### (அ) விடயங்களும், தொழிற்பாடுகளும்

“சுபீட்சத்திற்கான நோக்கு” எனும் கொள்கைக் கூற்றுக்கு ஏற்ப, அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் ஏனைய தேசிய கொள்கைகளை அடிப்படையாக கொள்கை நிறுவப்பட்டு “ குறைந்த செலவினைக் கொண்ட மின்னுற்பத்தி கலப்பொன்றையும் மற்றும் வினைத்திறனான விநியோகம் ஒன்றையும் உறுதிப்படுத்துவதற்காக” குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சிற்கு கொள்கை ரீதியிலான வழிகாட்டல்களை மேற்கொள்ளல், குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு ஏற்ப, மின்சக்தியோடு தொடர்புடைய விடயங்களுடன் கொள்கைகளை தயாரித்தல், தேசிய வரவு செலவுத்திட்டம் அரச முதலீடு, தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சத்திட்டத்தின் கீழ் உள்ள கருத்திட்டங்களை நடைமுறைப்புடுத்தல் மற்றும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் என்பனவற்றின் விடயங்கள் மற்றும் தொழிற்பாடுகளும் மற்றும் அவற்றுடன் தொடர்படைய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தொழிற்பாடுகளும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் கணிப்பீடு செய்தல்.

### (ஆ) விஷேட முன்னுரிமைகள்

- உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியின் வினைத்திறனையும், மற்றும் அதிக பட்ச பாவனையையும் உறுதிப்படுத்துவதற்காக விரைவூக்கமுள்ள மின்தொகுப்பொன்றை அபிவிருத்தி செய்தல்.
- மீளப்புத்துயிராக்கக் கூடிய மின்சக்தி, அனல் மின்நிலையம், மற்றும் இயற்கை மின்நிலையங்களின் ஊடாக மின்னுற்பத்திக்கு மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளைக் குறைத்தல் மற்றும் மின்னுற்பத்தியின் போது ஏற்படும் நிச்சயமற்ற தன்மையை நீக்குதல்.
- நீண்ட காலத் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- மின்செலுத்துகை மற்றும் விநியோக செயன்முறையை வினைத்திறனுடன் மேற்கொள்ளல்.
- கைத்தொழில் உற்பத்திச் செயற்பாட்டில் சர்வதேச போட்டித் தன்மையுள்ள படி மின்னுற்பத்திச் செலவைக் குறைத்தல்.

## 3. அமைச்சின் விடயப்பரப்பிற்குள் உள்ளடங்கும் நிறுவனங்கள்

இலங்கை மின்சார சபை: 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், அவற்றை செலுத்துவதற்கும், சகல வகுதி நுகர்வோர்களுக்கும் மின்சாரத்தை பகிர்ந்தளிப்பதற்கும், மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்திற்கு அமைய வருமானத்தைச் சேகரித்தல், ஆகியனவற்றிற்கு இலங்கை மின்சார சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனி (LECO): 54.84 சதவீத பங்குரிமையைக் கொண்டுள்ள இலங்கை மின்சார சபையின் துணை நிறுவனங்களுள் ஒன்றாக இக்கம்பனி விளங்குவதோடு, திறைசேரியின் சிறுபான்மை பங்குரிமையையும் (43.56 சதவீதம்), நகர அபிவிருத்தி அதிகார சபையின் 0.79 சதவீத பங்குரிமையையும், மற்றும் உள்ளூராட்சி சபையின் 0.81 சதவீத பங்குரிமையையும் கொண்டுள்ளது.

LTL: இலங்கை மின்சார சபையின் துணை நிறுவனமான எல்டீஎல் நிறுவனத்தில் இலங்கை மின்சார சபை 63 சதவீத பங்குரிமையையும் மற்றும் அதன் ஊழியர்கள் 37 சதவீத சிறுபான்மை பங்குரிமையையும் கொண்டுள்ளது

வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி கம்பனி: இக்கம்பனி 60 சதவீதம் பங்குரிமையுடன் இலங்கை மின்சார சபையின் துணைக் கம்பனியாக விளங்குவதோடு, திறைசேரி 20 சதவீத சிறுபான்மை பங்குரிமையையும், மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் 10 சதவீத பங்குரிமையையும் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை 10 சதவீத பங்குரிமையையும் கொண்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் கம்பனி : இக்கம்பனி 100 சதவீத பங்குரிமையைக் கொண்ட இலங்கை மின்சார சபையின் துணை நிறுவனமாகும்.

## 4. மின்சக்தித் துறையின் நிலை - 2021

தேசிய மின்சக்தி வலையமைப்பின் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுளள கொள்திறன் 4,541 மெ.வோ ஆக உள்ளதோடு, அது 57 சதவீத மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களிலிருந்தும் மற்றும் 43 சதவீதம் புதை படிம எரிபொருளையும் உள்ளடக்கியுள்ளது. புதை படிம எரிபொருளில் 20 சதவீதம் நிலக்கரியிலிருந்து கிடைக்கப் பெறுவதோடு, எஞ்சியவை எரிபொருளை உள்ளடக்குகின்றது. மின் திட்ட முறைமையின் மீளப்புதுப்பிக்கத்தக்க மூலங்களில் பிரதான நீர்மின்சக்தியானது பிரதான மூலமாக விளங்குவதோடு, இதன் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட கொள்திறன் மொத்தக் கொள்திறனில் 31 சதவீதமாகும். ஏனைய மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களில் ஏனைய மூலங்களான காற்று, சூரியன், திண்மக்கழிவு, டென்ட்ரோ மற்றும் உயிர்திணிக்கைகளும் மின்னுற்பத்திச் செயன்முறையில் 26 சதவீத பங்களிப்பைச் செலுத்தியுள்ளன. அனல் மின்னுற்பத்திக்கான மூலங்களாக நிலக்கரி, டீசல் மற்றும் எரிபொருள் பயன்படுத்தப்படுவதோடு, அம்மின்நிலையம் இலங.கை மின்சார சபை மற்றும் தனியார் மின்னுற்பத்தியாளர்களுக்குச் சொந்தமாகும்.

| மூலம் | | கொள்திறன் (மெவோ) | % | மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பிரதான நீர்மின் | | 1,399 | 31% | 17 |
| அனல் | | | | |
| | புதை படிம எண்ணெய் (இலங்கை மின்சார சபை | 604 | 13% | 9 |
| | புதை படிம எண்ணெய் (சுயாதீன) | 457 | 10% | 3 |
| | நிலக்கரி | 900 | 20% | 1 |
| ஏனைய மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலம் | | | | |
| | சிறிய மின்சக்தி | 425 | 18% | 213 |
| | காற்று | 248 | | 18 |
| | சூரிய (நிலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட) | 91 | | 45 |
| | டென்ட்ரோ டென்ட்ரோ மற்றும் உயிர் திணிக்கைகள் | 43 | | 12 |
| | WTE | 10 | | 1 |
| | சூரிய மின்தகடு | 410 | 8% | |
| **மொத்தம்** | | **4,587** | | **319** |




*ஸ்தாபிக்கப்பட்ட மொத்த கொள்திறன்*
*2021 செப்டெம்பர்*

- ### மின்னுற்பத்தி

இவ்வாண்டில், ஜனவரி மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் ஆரம்பம் வரை 11,055 கி.வோ மணியாகும். 41 சதவீதமான மின்சக்தி மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளதோடு, பிரதான நீர்மின்சக்தி மற்றும் 13 சதவீதமான ஏனைய மீளப்புதுப்பிக்கத்தக் மின்சக்தி( காற்று, நிலத்தின் மீது ஏற்றப்படும் சூரிய மின்சக்தி உயிர் திணிக்கைகள் மற்றும் கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்தகடு எனபன ) உள்ளடக்கப்படுகின்றன. மின்னுற்பத்திக் கலவையில் 59 சதவீதம் அனல் மின்சக்தி மூலங்களின் மூலங்களை உள்ளடக்கியுள்ளதோடு, அவை 40 சதவீத நிலக்கரி மற்றும் 19 சதவீதமும் எண்ணெய்யையும் உள்ளடக்குகின்றது.




*மின்னுற்பத்தி*
*(2021 செப்தெம்பர் வரை)*

## 4.1 மின்சக்திக்கான கேள்வியும், மற்றும் மின்பாவனையாளர்களின் வளர்ச்சியும்

நீர்மின்சக்திக்கான கேள்வியானது வருடாந்தம் 5.5 சதவீத பெறுமதியொன்றால் வளர்ச்சியடைவதோடு, உச்சக் கேள்வியானது (Peak Demand), வருடாந்தம் 3.7 சதவீத வளர்ச்சியொன்றைக் காட்டுகின்றது. 2020 ஆம் ஆண்டில், COVID 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக சராசரி நாளாந்த மின்சாரத்திற்கான கேள்வி ஓரளவு குறைவடைந்துள்ளதோடு, அது 40 கிவோ மணியாகும். இருப்பினும், இவ்வாண்டிற்குள், பதிவு செய்யப்பட்ட மின்சாரத்திற்கான சராசரி நாளாந்த கேள்வி 44 கி.வோ மணியாகும்.

2021 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரை பதிவு செய்யப்பட்ட நாளாந்த உச்சக் கேள்வி (Peak Demand) 2.717.46 மெ.வோ அகும். இலங்கை மின்சார சபையின் புதுப்பிக்கப்பட்ட நீண்ட காலத்திட்டம் 2022 – 2046 இற்கு ஏற்ப, 2022 ஆம் ஆண்டிற்கான எதிர்வு கூறப்பட்ட மின்சாரத்திற்கான கேள்வி 16,741

| மின் பாவனையாளர்கள் (2021 ஆகஸ்ட் வரை) | | (%) |
|---|---|---|
| வீடுகள் | 6,434,455 | 86 |
| வணக்கஸ்தளங்கள் | 45,719 | 0.6 |
| பொது நோக்கங்கள் | 907,019 | 12 |
| கைத்தொழில் | 69,914 | 0.9 |
| அரச | 9,423 | 0.01 |
| ஹோட்டல்கள் | 537 | 0.01 |
| விவசாயம் | 1,280 | 0.02 |
| மொத்தம் + வீதி விளக்கு | 3,574 | 0.05 |
| **மொத்தம்** | **7,471,921** | |

கி.வோ.ம ஆக இருந்ததோடு. 5.8 சதவீத வளர்ச்சி வேகமொன்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.2021 ஆம் ஆண்டின் செப்மெப்ர் மாதம் இந்நாட்டின் மொத்த மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை 7,471,921 ஆகும். 2020 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்த மொத்த மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை 7,216,933 ஆக இருந்ததோடு, அதன் படி, 2021 செப்தெம்பர் வரை புதிதாக மின்சக்திக்கான இணைப்புக்கள் 254,988 வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு குழுக்களுக்கு உரிய மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

## 5. 2021 ஆம் ஆண்டின் போது மின்சக்தித் துறையின் முன்னேற்றம்

### 5.1 மின்னுற்பத்தியின் விரிவாக்கம்

இந்நாட்டில் வளர்ந்து வரும் மின்சக்திக்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை மின்சார சபையின் நீண்ட கால மின்னுற்பத்தித் திட்டங்களுக்கு ஏற்ப, புதிய மின்னுற்பத்திக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பின்வரும் மூன்று கொள்கைகள் மூலம் மின்னுற்பத்தியானது நிர்வகிக்கப்படுகின்றன.

- 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்னுற்பத்தியில் 7 சதவீதம் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களின் மூலம் அடைதல்.
- 2050 ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலையாக்கத்தை அடைதல்.
- புதிய நிலக்கரி மின் நிலையங்கள் எதனையும் நிர்மாணிக்காதிருத்தல்.

மேலே கூறப்பட்ட கொள்கைகளைக் கருத்திற் கொண்டு இலங்கை மின்சார சபையினால் புதிய நீண்ட கால மின்னுற்பத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அமைச்சினால் நடைமறைப்படுத்தப்படும் பின்வரும் மின்னுற்பத்திக் கருத்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டின் பல்வேறு நிர்மாணக் கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

#### (அ) அனல் மின்னுற்பத்தி

#### 1. திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு (LNG) மின்நிலையம்

- **300 மெகா வோட் - முதலாவது மின்நிலையம்,**

இம்மின்நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக அடித்தளத்தை இடுவதற்கான நிகழ்ச்சி 2021 மார்ச் மாதம் 05 ஆம் திகதி இதன் கருத்திட்ட அபிவிருத்தியாளரான வரையறுக்கப்பட்ட லக்தனவிக் கம்பனியின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. கருத்திட்டத்துடன் தொடர்புடைய மின்சக்தியை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் கருத்திட்ட அபிவிருத்தியாளருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இம்மின்நிலையத்தின் நிர்மாண வேலைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **300 மெவோ - இரண்டாவது திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு மின்நிலையம், கெரவலப்பிட்டிய**

இக்கருத்திட்டத்துக்குப் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கு 2021 ஜூன் மாதம் 21 ஆம் திகதி இலங்கை மின்சார சபையினால் முன்மொழிவுகள் (RFP) அழைக்கப்பட்டுள்ளதோடு, அது 2021 நவம்பர் மாதம் 13 ஆம் திகதியில் முடிவடைகின்றது. ஏற்கனவே இதற்கான காணியைக் கொள்வனவு செய்வதற்கான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2024 அக்டோபர் மாதத்தில் கருத்திட்டத்தில் வரத்தக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **300 மெவோ - மூன்றாவது திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு மின்நிலையம், கெரவலப்பிட்டிய**

கருத்திட்டத்திற்கு அவசியமான காணியை அபிவிருத்தி செய்வதற்கான சுற்றுச்சூழல் தாக்கங்களின் மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டு பொது மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபை இக்கருத்திட்டத்தின் பங்காளர்களான இந்தியாவின் நெஷனல் தேர்மல் கோப்பரேசன் (NTPC) கம்பியுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் இந்தியாவின் நெஷனல் தேர்மல் கோப்பரேசன் (NTPC) கம்பனிக்கும் இடையிலான கூட்டு முயற்சிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. கூட்டு முயற்சிக் கம்பனியுடன்ான சங்க அமைப்பு விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- **திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு மின்நிலைய (LNG) வழங்கல் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி**

திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயுவை (LNG) இலங்கைக்குப் பெற்றுக் கொள்வதற்கான திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயுவின் முனைய வசதிகளுக்கு மிதக்கும் களஞ்சியத்தைக் கொண்ட

மீள ஆவியாக மாற்றும் அலகினை (FSRU) நிர்மாணித்து ,செயற்படுத்தி உரிமையை மாற்றியமைப்பதன் அடிப்படையிலும் ( BOO) மற்றும் LNG விநியோகிக்கும் குழாய் வழி முறையினை நிர்மாணித்து அபிவிருத்தி செய்வதற்கான போட்டி ரீதியான கொள்முதல் நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. போதிய அளவிலான களஞ்சிய வசதிகளுடன் மீள ஆவியாக்குவதற்கான கொள்திறனுடன் மிதக்கும் களஞ்சியத்தைக் கொண்ட மீள ஆவியாக மாற்றும் அலகினை (FSRU) கெரவலப்பிட்டிய கரைப்பிரதேசத்திலிருந்து 5 கி.மீ தூரத்தில் ஸ்தாபிக்கப்படும். இது தொடர்பான நிதி முன்மொழிவுகள் திறக்கப்பட்டு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கான கேள்வி மனுவை வெகு விரையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு. 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வர்த்தக செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2. வாயு விசையாழி மின்நிலையம் (மெகா வோட் 35X3), களனிதிஸ்ஸ

அவசர மின் முறிவின் போது கொழும்பு நகரத்தின் மின் திட்ட முறைமையினை மீட்பதற்கும், மின்சாரத்திற்கான உயர்ந்த கேள்வி இருக்கும் சந்தர்ப்பங்களில் தேவையான மின்சக்தியை வழங்குவதற்கும் மின்நிலையத்தில் தற்போது இருக்கும் விசையாழிக்குப் பதிலாக புதிய வாயு விசையாழியொன்று பொருத்தப்படும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை ஐஅடொ 90 மில்லியனாகும். வழங்குனர் கடன் திட்டத்தின் கீழ் கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2021 செப்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி கேள்வி மனுவை கோரும் நடவடிக்கைகள் முடிவு செய்யப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் கேள்வி மனுவை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## (ஆ) மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உற்பத்தி

### 1. நீர் மின்சக்தி

- **உமா ஓயா நீர் மின்சக்திக் கருத்திட்டம் - 120 மெவோ**

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டமானது, நீர்ப்பாசன அமைச்சும், மற்றும் மின்சக்தி அமைச்சும் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மின்நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கொள்திறன் 12 மெ.வோ (2x மெ.வோ 60) ஆக உள்ளதோடு, எதிர்பார்க்கப்படும் வருடாந்த மின்னுற்பத்தி 290 மெ.வோ ஆக இருக்கும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை ஐஅடொ 530 மில்லியனாக உள்ளது. கருத்திட்டத்தின் தற்போதைய நிர்மாணத்தின் முன்னேற்றம் 96 சதவீதமாக உள்ளதோடு, 2021 திசெம்பர் மாதம் 25 ஆம் தககியளவில் வலுவூட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **ப்ரோட்லன்ட்ஸ் நீர் மின்நிலையம் 35 மெவோ**

இலங்கையில் தூய அபிவிருத்திப் பொறிமுறையின் கீழ் (Clean Development Mechanism – CDM) பதிவைப் பெற்றுக் கொண்ட முதலாவது பெரிய நீர் மின்னுற்பத்திக் கருத்திட்டம் ப்ரோட்லன்ட்ஸ் கருத்திட்டமாகும். கருத்திட்டத்தின் முதலாவது எதிர்பார்க்கப்பட்ட மின்சக்தி உற்பத்தி 126 கிகா வோட் மணியாகும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை ஐஅடொ 82 ஆகும். கருத்திட்டத்தில் 97 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, 2021 ம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் முற்றாக நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

- **மொரகொல்ல மின்னுற்பத்திக் கருத்திட்டம் - 31.5 மெ.வோ**

இக்கருத்திட்டம் கண்டி மாவட்டத்தின் உலப்பனை சார்ர்ந்து அமைந்துள்ளது. இதற்கான நிதியுதவி ஆசிய அபிலிருத்தி வங்கியால் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ஐஅடொ 114 ஆகும். இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த மின்னுற்பத்தி 100 கிகாவோட் மணியாக உள்ளதோடு, மொத்த ஸ்தாபிக்கப்பட்ட கொள்திறன் 31.5 கிகா வோட் ஆகும். ஏற்கனவே நிர்மாண வேலைகளில் 27 சதவீதம் பூர்த்தி செய்யபபட்டுள்ளன. 2023 நவம்பர் மாதத்தில் கருத்திட்டத்தை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**சீதாவக கங்கை நீர் மின்னுற்பத்தி கருத்திட்டம் - 14 மெகா வோட்**

7 மெகா வோட் கொள்திறனைக் கொண்ட சிறிய அளவிலான இரண்டு மின் நிலையங்களாக இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் துணை நிறுவனமான இலங்கை எனர்ஜிஸ் நிறுவனத்தின் மூலம் இக்கருத்திட்டத்தின் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- **தல்பிடிகல நீர் மின் கருத்திட்டம் - 15 மெகா வோட்**

தல்பிடிகல நீர் மின் கருத்திட்டம் நீர்ப்பாசன அமைச்சு இலங்கை மின்சார சபையுடன் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கான காணியை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, 2024 ஆம் ஆண்டளவில் மின்நிலையத்தை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கின்றது.

## 2. சூரிய மின்சக்தி

- **சூர்ய பல சங்க்ராமய – கூரையில் பொருத்தப்படும் சூரிய மின்னுற்பத்திக் கருத்திட்டம்**

சமூகத்தில் பல்வேறு பிரிவினர் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அடிப்படையாகக் கொண்டு மின்னுற்பத்திக்கு இணைத்துக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் சூரிய பல சங்க்ராமய நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் வழங்கப்பட்ட ஐஅடொ 50 மில்லியன் உதவியின் கீழ் வீடுகள், கைத்தொழிற்சாலைகள், மற்றும் வர்த்தக நிலையங்களின் கூரைகள் மீது 5 கி.வோ வரை சூரிய மினசக்திக் கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கு குறைந்த வட்டி வசதியளிப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தற்போது 44 மெகா வோட் தேசிய மின்சக்தி வலையமைப்புக்கு இணைக்கபட்டுள்ளது. 2021 ஆகஸ்ட் மாதமளவில் சூர்ய மின்சக்தி வலையமைப்புக்கு சேர்க்கப்பட்ட கொள்திறன் 410 மெகா வோட் ஆகும். அதனுடன் சம்பந்தப்பட்ட மின் திட்ட முறைமைகள் 34,219 உள்ளன.

- **நிலத்தின் மீது நிர்மாணிக்கப்படும் சிறிய அளவிலான சூரிய மின்நிலையம் (மெ.வோ 1 X 35 மற்றும் மெ.வோ 1 X 70)**

இவ்விரண்டு கருத்திட்டங்களின் கீழான சம்பூரண கொள்திறன் 105 மெ.வோ ஆக உள்ளதோடு, 1 மெ.வோ மூலமான சூரிய மின் நிலையங்கள் தனியாரின் முதலீட்டினைப் பயன்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. ஏற்கனவே 40 மெ.வோ ஏற்கனவே பூர்த்தி செய்து தேசிய மின்சக்தி முறைமைக்கு இணைக்கப்பட்டுள்ளது. (மெ.வோ 1 X 35 இன் கீழ் 29 மெ.வோ மற்றும் 1 X 70 மெ.வோ இன் கீழ் மெ.வோ 12 ஆக ) 14 மெ.வோ கொள்திறனொன்றுடனான மின் நிலையமொன்று ஏற்கனவே நிர்மாண வேலைகளை ஆரம்பித்துள்ளது.

- **காற்றாழை பயிர்ச்செய்கையுடன் இணைத்து அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் பொலன்னறுவை (கதுறுவலை) 10 மெ.வோ சூரிய மின் நிலையம்**

2020 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதோடு, 2022 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்து செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **10 மெ.வோ வரையிலான சூரிய மின் நிலையம் (1 – 10 மெ.வோ வரையிலான சூரிய மின் நிலையம் (மொத்த 147 மெ.வோ)**

தனியார் முதலீடாக அபிவிருத்தி செய்வதற்காக 1 – 10 மெ.வோ வரையிலான 147 சூரிய மின் நிலையக் கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, 84 மெ.வோ களுக்கான கேள்வி மனுவுக்கு கேள்வி மனு வழங்குவதற்கு மார்ச் மாதம் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதில் 54 மெ.வோ களுக்கு ஏற்கனவே இலங்கை நிலைபெறுதகு அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது. 2022 செப்தெம்பர் மாதமளவில் இக்கருத்திட்டத்தை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **10 X 2 மெ.வோ சூரிய மின் நிலையம் ( வாழைச் சேனை மற்றும் வவுனதீவு)**

கருத்திட்ட அபிவிருத்தியாளர்கள் இலங்கை மின்சார சபையுடன் மேலே கூறப்பட்ட கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளனர். வாழைச்சேனை மின் நிலையத்திற்கு அபிவிருத்தியாளர்கள் புதிய இடமொன்றை முன்மொழிந்துள்ளனர். 2022 செப்தெம்பர் மாதமளவில் வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **நிலத்தின் மீது நிர்மாணிக்கப்படும் கி.வோ 75 X 7,000 சூரிய மின் நிலையம் (கமட்ட பலாகாரயக் - கிராமத்திற்கான நிலையமொன்று)**

2021 ஆம் ஆண்டில் முன் வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன் மொழிவொன்றாக இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2021 – 2023 காலப்பகுதிக்குள் உள்நாட்டு மற்றும் தனியார் முதலீட்டின் மூலம் 525 மெ.வோ கொள்திறனுள்ள தேசிய மின்சக்தி வலையமைப்புக்கு இணைப்பது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்தது 10,000 நேரடி வேலைவாய்ப்புக்களையும் மற்றும் 20,000 மறைமுக வேலை வாய்ப்புக்களையும் உருவாக்க முடியும் என எதிர்ார்க்கப்படுகின்றது. இதன் முதலாவது கட்டத்தின் கீழ் 2021 அக்டோபர் 09 ஆம் திகதி 155 கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு கேள்வி மனு வழங்கலானது மேற்கொள்ளப்பட்டது. 2022 நவம்பர் மாதமளவில் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **இந்தியாவின் கடன் வரிசை வசதியளிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சூரிய மின்சக்திக் கருத்திட்டங்கள் (ஐஅடொ 100 மில்லியன்)**

இக்கடன் வசதியளிப்பின் கீழ் அரசாங்கத்தின் கட்டடங்களின் கூரை மீது நிர்மாணிக்கப்படும் சூரிய மின்சக்திக் கருத்திட்டம் (ஐஅடொ 85 மில்லியன்), வணக்கஸ்தலங்களின் கூரை மீது நிர்மாணிக்கப்படும்

சூரிய மின்சக்திக் கருத்திட்டம் (ஐஅடொ 10 மில்லியன்) மற்றும் சிறிய மிதக்கும் சூரிய மின் நிலையங்கள் இரண்டினை (ஐஅடொ 05 மில்லியன்) நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கருத்திட்டம் தொடர்பான கடன் உடன்படிக்கை 2021 ஜூன் மாதம் 16 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. முழுமையான கருத்திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு உரிய இந்திய ஆலோசகர்களை தெரிவு செய்வதற்கு தெரிவு செய்யும் செயற்பாடு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கை நிலைபெறு தகு அதிகார சபையினால் 2,377 அரசாங்கத்தின் கட்டடங்களின் கருத்திட்ட இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கருத்திட்டத்தின் தொழில்நுட்ப ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் கணிப்பீட்டிற்காக பாதுகாப்பு அமைச்சின் 180 உத்தியோகத்தர்கள் பயிற்சிவிக்கப்பட்டுள்ளனர். இதன் கீழ் 120 மெ.வோ கொள்திறனை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **100 மெ.வோ சியம்பலாண்டுவை சூரிய மின்சக்திப் பூங்கா**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான அனுமதி மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. அக்டோபர் மாத இறுதியில் கருத்திட்டத்திற்கான முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பூங்காவிற்கு அவசியமான காணிகளின் எல்லைகள் குறிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியைப் பெற்றுக் கொண்டு மின்செலுத்துகைக்கு அவசியமான மெதகம – அம்பாறை மின்செலுத்துகை வரிசையை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **150 மெ.வோ பூனேரி சூரிய மின்சக்திப் பூங்கா**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அதற்கு அவசியமான காணிகளைக் கையகப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. காற்று மின்சக்தி

- **100 மெ.வோ - மன்னார் காற்று மின்சக்திப் பூங்கா – “தம்பபவணி”**

இலங்கையின் முதலவாது பெரிய அளவிலான காற்று மின்சக்திப் பூங்கா மன்னார் தீவின் தெற்குக் கரையில் அமைந்துள்ள தம்பபவணி காற்று மின்சக்திப் பூங்காவாக உள்ளதோடு, அது 2021 மே மாதம் 06 ஆம் திகதி மொத்தக் கொள்திறனில் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்காக வலுவூட்டப்பட்டது. இப்பூங்கா 3.45 மெ.வோ கொள்திறனைக் கொண்ட மிக நவீன காற்று மின்னுற்பத்தி இயந்திரம் (விசையாழி) 30 ஐக் கொண்டுள்ளது. இதன் ஸ்தாபிக்கப்பட்ட மொத்த கொள்திறன் 103.5 மெ.வோ களாகும். இக்கருத்திட்டத்தின் மூலம் இலங்கையின் பிரதான மொன்சூன் காற்றுக் காலங்களில் இலங்கைக்குக் கிடைக்கப் பெறுகின்ற காற்றுப் பாய்ச்சலிலிருந்து காற்று மின்சக்தியை பயன்படுத்த முடியும். எற்கனவே ஆகஸ்ட் மாதம் வரை 204 கி.வோ மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.





"தம்பபவணி'' மன்னார் காற்று மின்சக்திப் பூங்காவைத் திறந்து வைத்தல்.

- **20 மெ.வோ - மன்னார் காற்று மின்நிலையம்**

""தம்பபவணி'' கருத்திட்டத்துக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் நிதித் தொகையில் எஞ்சிய தொகையை பயன்படுத்தி மன்னார் பகுதியில் மற்றுமொரு 20 மெ.வோ காற்று மின்சக்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு அது தொடர்பான ஒப்பந்தம் 2022 இன் ஆரம்பத்தில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**1- 10 மெ.வோ இலான சிறிய அளவிலான காற்று மின் நிலையங்கள் (60 மெ.வோ)**

தனிப்பட்ட முதலீட்டாளர்களை அடிப்படையாகக் கொண்டு மன்னார், மாதம்பை, மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங்களில் 60 மெ.வோ மொத்த கொள்திறனான ( மின்னுற்பத்திக் கொள்திறன்) 1 மெ.வோ 10 மெ.வோ வரை) காற்று மின்நிலையங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. திருகோணமலை மற்றும் மன்னார் காற்று மின்நிலையங்களை நிர்மாணிப்பதற்கான கேள்வி மனு வழங்கப்படவுள்ளது. மன்னார் 10 மெ.வோ காற்று மின்நிலையத்தை நிர்மாணிப்பதற்கு பிரதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **100 மெ.வோ - மன்னார் காற்று மின்சக்திப் பூங்கா - இரண்டாம் கட்டம்**

இக்கருத்திட்டத்திற்கான சாத்திய வள ஆய்வு சமூக தாக்க ஆய்வு, பறவைகளின் ஆய்வு என்பன தற்போது நடைபெற்று வருவதோடு, இக்கருத்திட்டம் இலங்கை மின்சார சபை, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை மற்றும் தனியார் துறையின் முதலீட்டின் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படும். இக்கருத்திட்டம் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **100 மெகா வோட் மன்னார் காற்று மின்சக்திப் பூங்கா மூன்றாம் கட்டம் - முல்லிக்குளம் காற்று மின்சக்திப் பூங்கா**

இலங்கை மின்சார சபையினால் இந்த 100 மெ.வோ காற்று மின்சக்திப் பூங்கா அபிவிருத்தி செய்யப்படுவதோடு, அதற்காக இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் மூலம் தற்காலிக அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க ஆய்வினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **240 மெ.வோ பூனேரி காற்று மின்சக்திப் பூங்கா**

இதன் முதலாவது கட்டமாக 100 மெ.வோ காற்று மின்சக்திப் பூங்காவொன்று அபிவிருத்தி செய்யப்படுவதோடு, இதற்கான காணிகளை கையகப்படுத்துவதற்கான செயற்பாடு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவது கட்டம் 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 4. சிறிய அளவிலான மின்சக்திக் கருத்திட்டங்கள்

5 மெ.வோ கொள்திறனிலான ( 3.5 மெகா வோட் மற்றும் 1.4 மெகா வோட் ) இரண்டு சிறிய அளவிலான மின் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வரவதோடு. 2021 முடிவுறுவதற்கு முதலில் வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 13 மெகா வொட் கொள்திறனைக் கொண்ட சிறிய அளவிலான ஆறு மின் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்ட வருவதோடு, 2022 ஆம் ஆண்டில் வலுவூட்டுவத்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5. உயிர் திணிக்கைகள் மற்றும் கழிவுகளினால் மின்னுற்பத்தி செய்யப்படும் மின்நிலையங்கள்

- 2023 ஆம் ஆண்டளவில் உயிர் திணிக்கைகள் மின் நிலையங்களினால் 10 மெ.வோ கொள்திறனொன்ற தேசிய மின் திட்ட முறைமைக்கு சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- முதுராஜவலை, 10 மெ.வோ கழிவுகளிலிருந்து மின்சக்தியை உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் 2021 பெப்ரவரி 18 ஆம் திகதி வலுவூட்டுவதற்கு வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 10 மெ.வோ கரதியான மின் நிலையம் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

### 5.2 மின் செலுத்துகையும் விநியோகங்களின் அபிவிருத்தியும்

இலங்கை மின் செலுத்துகை வலையமைப்பு 799 கி.மீ நீளமான 220 கி.வோ மின் செலுத்துகை வரிசைகளையும் மற்றும் 2,361 கி.மீ நீளமான 132 கி. வோ மின் செலுத்துகை வரிசை வழிகளை உள்ளடக்கியுள்ளதோடு, அதற்கான 134 வலையமைப்பு உப நிலையங்கள் இணைக்கப்படுகின்றன. மின்செலுத்துகை வலைமைப்பின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இலங்கை மின்சார சபையினாலாகும். 2021 ஆம் ஆண்டில் நாவலப்பிட்டிய, ராகல, புதிய வலையமைப்பு உப நிலையங்கள் மற்றும் அவை சார்ந்த மின்செலுத்துகை வரிசை வழிகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு வலுவூட்டப்பட்டன.

இந்நாட்டின் மின் விநியோக வலையமைப்பு 33,138.27 கி.மீ நீளமான வரிசை வழிகளையும் மற்றும் 2,448 கி.மீ நீளமான 11 வரிசை வழிகளையும் மற்றும் 150,169 கிமீ நீளமான குறைந்த அழுத்தம் கொண்ட விநியோக வரிசை வழிகளைக் கொண்ட 33,476 விநியோக உப நிலையங்களையும் கொண்டுள்ளது.

மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை அதிக அளவில் மிகவும் வினைத்திறனான முறையில் மின்சக்தி வலையமைப்புக்கு உள்வாங்கும் குறிக்கோளுடன் சூரிய மற்றும் மின்கல களஞ்சிய வசதிகளுடனான சிறிய அளவிலான விரைவூக்க வலையமைப்பு வசதிகளைக் கொண்ட சிறிய அளவிலான முன்னோடிக் கருத்திட்டங்கள் தற்போது அபவிவிருத்தி செய்யப்பட்டு வருவதோடு, அது 2022 பெப்ரவரி மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபை மற்றும் லங்கா மின்சக்தி தனியார் கம்பனியின் மூலம் பொருத்தப்பட்டுள்ள. சகல மின்சக்தி வலையமைப்பு உபகரணங்களை கண்காணிப்பதற்கு மத்திய செயற்பாட்டு நிலையமாக நடைமுறைப்படுத்துவதற்கு விரைவூக்க அளவீட்டு தரவு நிலையமொன்று ஏற்கனவே நிர்மாணிக்கப்படுவதோடு, 2021 நவம்பர் மாத இறுதியில் பூர்த்தி செய்யப்படும்.

மின்சக்திச் சேவைகளின் பண்புகளை அதிகரிப்பதற்காக விருத்தி செய்யப்பட்ட விநியோக முகாமைத்துவ செயற்பாட்டு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அனைத்து மின் விநியோக சேவைகளும் லங்கா மின்சார சபையினதும் மற்றும் லங்கா மின்சக்தி தனியார் கம்பனியினதும் மின் பாவனையாளர்களுக்கான சேவைகளின் நுழைவு வழியின் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ි

தேசிய மின்சக்தி வலையமைப்பு முறைமைக்கு அதிக அளவில் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களினால் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை சேகரித்துக் கொளவதற்கும் நம்பகமான, தரமான மற்றும் தொடர்ச்சியான மின்செலுத்துகையொன்றினை சான்றுப்படுத்துவதற்கும் மின்செலுத்துகை வலையமைப்பின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வபிருத்தி நடவடிக்கைகளில் அநேகமானவைகள் மேற்கொள்ளப்படுவது ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஜப்பானிய ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவி வசதிகளினை அடிப்படையாகக் கொண்டாகும். துற்போது நிர்மாண நிலையிலுள்ள கருத்திட்டங்களின் மூலம் 20 கி. மீ நீளமுள்ள 400 கி.வோ மின்செலுத்துகை வரிசைகள் 691 கி.மீ நீளமான 220 0 கி.வோ வரிசை வழிகள் மற்றும் 585 கி. மீ நீளமான 132 கி.வோ மின் செலுத்துகை வழிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

ஏற்கனவே, எமது மின்சக்தி வலையமைப்பு முறைமையின் தொழிநுட்ப மற்றும் வர்த்தக ரீதியான இழப்பானது 9 சதவீதத்திலிருந்து 8.35 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்டுள்ள மின் செலுத்துகை மற்றும் விநியோகக் கருத்திட்டங்களுக்குரிய கால எல்லைக்குள் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

| | கருத்திட்டம் | நிதி வழங்குதல் | முன்னேற்றம் | பூர்த்தி செய்யப்படும் திகதி |
|---|---|---|---|---|
| **1** | மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உள்வாங்கல் மின் செலுத்துகை அபிவிருத்திக் கருத்திட்டம் மாலிபொடை. வேவெல்தென்ன, நாவலப்பிட்டிய மற்றும் ராகல புதிய மின் தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல் 132 கி.வோ புதிய மின் செலுத்துகை வழியை நிர்மாணித்தல். | பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 2021 ஜுன் மாதம் 23 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது. | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| **2** | மின் செலுத்துகை உட்கட்டமைப்பு வசதிகளின் கொள்திறனை விரிவடையச் செய்தல்.<br>கப்பல் துறை 220/132 கி.வோ மின் தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தலும் மற்றும் கெரவலப்பிட்டிய, கட்டுநாயக்கா, திருகோணமலை, மின் தொகுப்பு உள்வாங்கல் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 96% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 நவம்பர் 30 |
| | புதிய அனுராதபுரம் மின்தொகுப்பு உப நிலையங்களின் விரிவாக்கம், மற்றும் கெஸ்பேவ, களுத்துறை, மற்றும் பழைய அனுராதபுர மின்தொகுப்பு உப நிலையங்களை நிர்மாணித்தல். | பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 89%பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 நவம்பர் |
| | கப்பல்துறை, களுத்துறை, கெஸ்பேவ மற்றும் பழைய அனுராதபுரம் மின் தொகுப்பு உப நிலையத்துக்கு 132 கி.வோ மின் செலுத்துகை வரிசை வழிகளை நிர்மாணித்தல். | பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 2020.03.15 දින ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| **3** | அம்பாந்தோட்டை 220 கி.வோ மின்தொகுப்பு உப நிலையங்களின் அபிவிருத்தி | ஆசிய அபிவிருத்தி வங்கி | 92% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 நவம்பர் 30 |
| | புதிய பொல்பிடிய – அம்பாந்தோட்டை – அம்பாந்தோட்டை 150 கி.மீ 220 கி. வோ மின் செலுத்துகை வழியை நிர்மாணித்தல் | | 75% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 மே 20 |
| **4** | நடு குடா 220/33 கி.வோ மின்தொகுப்பு உப நிலையத்தினை நிர்மாணித்தல், மன்னார் 220/33 மின்தொகுப்பு உப நிலையத்தினை விரிவாக்கல் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2021ஏப்ரில் 15 ஆம் திகதி வலுவூட்டப்பட்டது. மின்சக்தி வழங்கப்பட்டது. | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| | மன்னார் - நடு குடா 30 கி.மீ 220 கி.வோ மின் செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல். | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2020.08.17 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

| | கருத்திட்டம் | நிதி வழங்குதல் | முன்னேற்றம் | பூர்த்தி செய்யப்படும் திகதி |
|---|---|---|---|---|
| | பாதுக்கை – ஹொரண 25 கி.மீ 132 கி.வோ மின் செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல். | பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 18% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 ஏப்ரில் 20 |
| | ஹபரணை வாழைச்சேனை 132 கி.வோ மின் செலுத்துகை வரிசையின் இரண்டாவது தடத்தினை வலுவூட்டுதல். | பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 78% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 நவம்பர் 30 |
| 5 | கொழும்பு B மின்தொகுப்பு உப நிலையத்தினை நிர்மாணித்தல்.<br>கொழும்பு C – கொலொன்னாவை மின்தொகுப்பு உப நிலையம் வரை 132 கி,வோ 800mm2 தனிப்பட்ட உள் மற்றும் வெளி வரிசை இணைப்பு<br>கொழும்பு C மற்றும் கொலொன்னாவை மின்தொகுப்பு உப நிலையத்தின் விரிவாக்கம். | பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 71% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 ஜனவரி 31 |
| 6 | கொடுகொடை மின்தொகுப்பு உப நிலையத்தின் விரிவாக்கம்<br>கொலொன்னாவை ஸ்டென்லி மின்தொகுப்பு உப நிலையத்தின் விரிவாக்கம்<br>பாதுக்கை நிலை மாற்றும் நிலையம், ஹொரணை மின்தொகுப்பு உப நிலைய விரிவாக்கம்<br>தெஹிவளை மின்தொகுப்பு உப நிலைய விரிவாக்கம்<br>மாதம்பை மின்தொகுப்பு உப நிலைய விரிவாக்கம் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 85% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 திசெம்பர் 31 |
| 7 | பியகமை 220/33 கி.வோ உப நிலையத்தை நிர்மாணித்தல்.<br>பியகமை மின்தொகுப்பு விரிவாக்கம் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 93% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 திசெம்பர் 31 |
| 8 | பன்னிபிட்டிய மின்தொகுப்பு உப நிலையம் 100Mvar BSC நிர்மாணித்தல். | ஆசிய அபிவிருத்தி வங்கி | 63% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 ஜனவரி 31 |
| | பியகமை மின்தொகுப்பு உப நிலையம் SVC (Static Var System) நிர்மாணித்தல். | | 19% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 அக்டோபர் 07 |
| | கொழும்பு நகர வலையமைப்பு உப நிலையத்தின் மின்தேங்கிக் கரைகளை ஸ்தாபித்தல் மற்றும் துல்ஹிரிய மின்தொகுப்பு உப நிலையத்தில் வலையமைப்பு மின்தேங்கிக் கரைகளை மீண்டும் மாற்றுதல். | | நிதிக் கணிப்பீடு மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.<br>2021 திசெம்பர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| 9 | 300 kVA நுண்மின் தொகுப்பு (Micro Grid) முன்னோடி கருத்திட்டம் - (லங்கா மின்சக்தி தனியார் கம்பனியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது) | ஆசிய அபிவிருத்தி வங்கி | 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 நவம்பர் 30 |
| 10 | கெரவலப்பிட்டிய 220 கி.வோ மின்மாற்றி இடத்தை நிர்மாணித்தல். | ஆசிய அபிவிருத்தி வங்கி | 12% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 ஆகஸ்ட் 16 |
| 11 | ஹபரணை வேயங்கொடை220 கி.வோ மின் செலுத்துகை வரிசை<br>புதிய ஹபரணை 220/132/33 கி.வோ உப நிலையத்தை நிர்மாணித்தல். | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 99% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 நவம்பர் 30 |
| | புதிய ஹபரணை வேயங்கொடை 220 கி.வோ மின் செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல்.<br>இரட்டை சுற்று வரிசை<br>நான்கு சுற்று வரிசை | | இரட்டை சுற்று<br>(2021 மே 31 பூர்த்தி செய்யப்பட்டுள்ளது)<br>95% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | நான்கு சுற்று வரிசை (2022 மார்ச் 05) |

| | கருத்திட்டம் | நிதி வழங்குதல் | முன்னேற்றம் | பூர்த்தி செய்யப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 12 | தேசிய மின் செலுத்துகை மற்றும் விநியோகம் வலையமைப்புஅபிவிருத்தி மற்றும் வினைத்திறனை விருத்தி செய்வதற்கான கருத்திட்டம். 400 கி.வோ, 220 கி.வோ 132 கி.வோ மின் செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல் | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 36% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 ஜுலை 30 |
| | மின்தொகுப்பு உப நிலையங்களை நிர்மாணித்தல். | | 65% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2021 திசெம்பர் 31 |
| | 220 கி.வோ மற்றும் 132 கி.வோ மின் செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல். | | 37% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 ஜுன் 14 |
| | லொட் ஏ: தெஹிவளை, கல்கிஸ்ஸை, மற்றும் பத்தரமுல்லை ஆரம்ப உப நிலையங்களை விநியோக உப நிலையங்கள் மற்றும் மின் கம்பிகளை நிர்மாணித்தல் | | 23% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 செப்தெம்பர் 15 |
| 13 | 33 கி.வோ விநியோக கோபுர வரிசை மற்றும் கென்ட்ரிகளை நிர்மாணித்தல். பழைய அனுராதபுர மின் தொகுப்பு உப நிலையத்திலிருந்து மகா இலுப்பல்லமை கென்ட்ரி வரை , 2 கி.மீ எத்காலை கென்ட்ரியிலிருந்து ஸ்டோர்பீல்ட் கென்ட்ரி வரை, 4 கி.மீ கப்பல்துறை மின் தொகுப்பு உப நிலையத்திலிருந்து வைனாபே கென்ட்ரி வரை – 8 கி.மீ எம்பிலிபிட்டிய மின்தொகுப்பு உப நிலையங்கள் மின்தொகுப்பு மின்நிலையத்திலிருந்து வெனி வெலர – கி.மீ 10.5 மதுகமை மின்தொகுப்பு உப நிலையத்திலிருந்து பெந்தோட்டை ஆரம்ப உப நிலையம் வரை - .11.5 கி. மீ | பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் | 75% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 ஜுன் 07 |
| | எதுல் கோட்டை மற்றும் பெலிகஹ பிரதேசத்தில் தற்போது இருக்கும் 33/11 கி.வோ 02 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஆரம்ப உப நிலையத்தின் விரிவாக்கம் ரத்தனபிட்டியின் ஆரம்ப உப நிலையத்தினை நிர்மாணித்தல் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 37% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 செப்தெம்பர் 22 |
| 14 | மின்சக்தி முறைமையின் நம்பகமான வலுவூட்டும் கருத்திட்டம் 300 கி. மீ நீளமான 33 கி.வோ மின் கோபுர 33 கி.வோ 13 கென்ட்ரிகளை நிர்மாணித்தல். | ஆசிய அபிவிருத்தி வங்கி | 38% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 2022 மார்ச் |
| 15 | கிராமிய மின்சாரமயமாக்கல் வலையமைப்பை நீடித்தல் மற்றும் விநியோக செயலாற்றுகையினை கண்காணித்தல் என்பனவற்றிற்கான மூலப்பொருட்களை வழங்கலும் மற்றும் விநியோகித்தலும். | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2020 திசெம்பர் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது |
| 16 | வட மாகாணத்தின் மூன்று தீவுகளில் நைனா தீவு, அனலை தீவு, டெல்ப்ட்) காற்று, சூரிய மற்றும் டீசல் இரட்டை கலவை மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திநிலையத்தை நிர்மாணித்தல் | ஆசிய அபிவிருத்தி வங்கி | பெறுகை நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகள் வெற்றிகரமாக முடிவுறுத்தி ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஒப்பந்தத்தை வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியை எதிர்பார்த்திருக்கின்றோம். இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப அறிக்கை தொடர்பாக நிதி அமைச்சின் அவதானிப்பை எதிர்பார்த்திருக்கின்றோம். | |

## 5.3 வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் கீழ் முன் வைக்கப்பட்ட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

### 5.3.1 தெயட்ட எலிய நிகழ்ச்சித்திட்டம்

தேசிய விநியோகங்களுக்கான வலையமைப்பு அநேகமான கிராமிய பிரதேசங்கள் வரை பரவியிருந்தாலும் கூட, குறிப்பிடத்தக்க அளவிலான வீட்டு அலகுகள் விஷேடமாக குறைந்த வருமானம்

உழைக்கும் பல குடும்பங்கள் மின்சக்தி இணைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு பெறமுடியாமைக்கான காரணம் அதற்காகச் செலுத்த வேண்டிய ஆரம்பச் செலவை செலுத்த முடியாமையேயாகும். அத்தகைய குடுபங்களுக்கு இலவசமாக மின்சார சேவைகளுக்கான இணைப்பை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதன் படி, 2021 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 750 மில்லியன் தொகையை இக்கருத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கான பயனாளிகள் இலங்கை மின்சார சபை, லங்கா மின்சக்தி தனியார் கம்பனி, மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி அதிகார சபை என்பன ஒனறிணைந்து தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்ச்சித்திட்டம் 2021 மார்ச் மாதம் 06 ஆம் திகதி குருநாகலை, கிரிபாவை கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2021 அக்டோபர் மாதம் 22 ஆம் திகதி அளவில் இதன் மூலம் 24,547 வீடுகளுக்கு மின்சார சேவைக்கான இணைப்பை இலவசமாக வழங்கக் கூடியதாக இருந்தது.

| | மாவட்டம் | பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்டுள்ள இணைப்புக்களின் எண்ணிக்கை | செலவு (ரூபா . மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | அம்பாறை | 4,330 | 1,519 | 34.18 |
| 2 | அனுராதபுரம் | 6,565 | 2,317 | 52.13 |
| 3 | பதுளை | 4,281 | 1,231 | 27.70 |
| 4 | மட்டக்களப்பு | 5,033 | 1,494 | 33.62 |
| 5 | கொழும்பு | 2,363 | 404 | 9.09 |
| 6 | காலி | 3,319 | 1,333 | 29.99 |
| 7 | கம்பஹா | 4,923 | 842 | 18.95 |
| 8 | அம்பாந்தோட்டை | 6,088 | 1,200 | 27.00 |
| 9 | யாழ்ப்பாணம் | 2,753 | 1,740 | 39.15 |
| 10 | களுத்துறை | 2,242 | 299 | 6.73 |
| 11 | கண்டி | 3,802 | 893 | 20.09 |
| 12 | கேகாலை | 2,681 | 501 | 11.27 |
| 13 | கிளிநொச்சி | 1,505 | 1669 | 37.55 |
| 14 | முல்லைத்தீவு | 1,810 | | |
| 15 | குருநாகலை | 6,443 | 1,131 | 25.45 |
| 16 | மாத்தளை | 2,157 | 216 | 4.86 |
| 17 | மாத்தறை | 3,209 | 789 | 17.75 |
| 18 | மொனராகலை | 5,582 | 672 | 15.12 |
| 19 | நுவரெலியா | 3,449 | 486 | 10.94 |
| 20 | பொலன்னறுவை | 2,442 | 635 | 14.29 |
| 21 | புத்தளம் | 4,196 | 772 | 17.37 |
| 22 | இரத்தினபுரி | 8,779 | 1,415 | 31.84 |
| 23 | திருகோணமலை | 4,174 | 1,605 | 36.11 |
| 24 | வவுனியா | 1,486 | 1,360 | 30.60 |
| 25 | மன்னார் | 1,680 | | |
| | மொத்தம் | **95,292** | **24,547** | **552.31** |

- கண்டி மீமுரே பிரதேசத்தில் தனியாக அமைந்துள்ள மூன்று கிராமங்களுக்கு (உடகல்தெபொக்கை, மெதகெலெ, மற்றும் கலமுதுன) இவ்வருட இறுதியில் சூரிய மின்சக்தி தொழில்நுட்பத்தின் ஊடாக மின்சக்தியை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.4 "கம சமக பிலிசந்தரக்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இணக்கம் தெரிவிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

#### 1. பதுளை மாவட்டம், ஹல்துமுல்லை (2021 செப்தெம்பர் 23)

- பின்வரும் கிராமங்களுக்கான மின் வழங்கலைப் பெற்றுக் கொடுத்தலானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- குமாரதென்ன கிராமம்
- கலுவல – அக்தகர 100 கிராமம்
- வெலன்விட கிராமம்
- கலுகெலே கிராமம்

### 2. அம்பாறை மாவட்டம், உகன, லாதுகலை (2021 ஜனவரி 09)

- லாதுகலை கிரமத்தின் 18 வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 3. காலி மாவட்டம், மாதம்பை கிராமம், மற்றும் கலகொட கிராமம் (2021 மார்ச் 13)

- சிறு துண்டுகளாக்கப்பட்ட காணிகளுக்கு மின்சக்தி வழங்குமாறு வகேட்கப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

### 4. கண்டி மாவட்டம், மீமுரே (2021 பெப்ரவரி 13)

- உடகல்தெபொக்கை, மெதகெலே, மற்றும் கல முதுன, கிராமங்களுக்கு வலையமைப்புக்கு வெளியே (சூரிய மின்சக்தி தொழில்நுட்பம், வழங்கும் நடவடிக்கையானது நடைபெற்று வருகின்றது. இதற்காக தெயட்ட எலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 43.9 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு முடிவுறுவதற்கு முன்னர் இக்கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- மூன்று கிராமங்களின் பொது இடங்களில் சூரிய மின்சக்தியினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி இலாம்புகளை பொருத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- கல முதுன மற்றும் உடுகல் தெபொக்க கிராமங்களுக்கு மின்கலங்களுக்கு மின்னேற்றும் நிலையங்களை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- கல முதுன கிராமத்தில் நுண் நீர் மின் நிலையங்கள் இரண்டின் புனரமைப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

### 6. கேகாலை மாவட்டம், தெரனியகல, திக்எல்ல கந்த (2021 பெப்ரவரி 06)

- சீதாவக கங்கை நீர் மின் நிலையத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பர்க்கப்படுகின்றது.

### 6. பொலன்னறுவை மாவட்டம், தெரிகிரிய, வெடிகச்சிய (2021 ஜனவரி 16)

- மெதிரிகிரிய பிரதேசத்தில் அடிக்கடி ஏற்பட்ட மின்முறிவுகளை பரிசோதித்து சரி செய்யப்பட்டுள்ளன.
- எகமுதுகம கிராமத்துக்கு மின் வழங்குவதானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- தர்சனபுர, தகம் வெவ மற்றும் வெடிகச்சிய கிராமங்களில் குறைந்த வருமானம் உழைப்போருக்கு மின்னிணைப்பு வழங்கலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏற்கனவே 95 சதவீதமானவர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, எஞ்சியவற்றை 2021 ஆண்டு முடிவடைவதற்கு முதலில் பூர்த்தி செய்வதற்கு முதலில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 7. வவுனியா மாவட்டம், போகஸ்வெவ (2021 ஏப்ரில் 03)

- சபுமல்கஸ்மல்கட ரஜ மகா விகாரைக்கு சூர்ய மின்சக்தி தொழில்நுட்பத்தின் மூலம் மின்சக்தியை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக தெயட்ட எலிய நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து ரூபா 4.95 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கிரி இப்பன்வெவ இராணுவ பாதுகாப்பு காவலரணிற்கு அருகாமையிலிருந்து ஹெலப வாவி பிரதான வீதியிலிருந்து மயான பூமி வரை மின்தொகுப்புடன் இணைக்கப்பட்ட மின்சக்தி வழங்கும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தெயட்ட எலிய நிகழ்ச்சித் திட்டத்திலிருந்துது இதற்காக ரூபா 17.59 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மகாவலி எல் வலயத்தின் பழைய சாகுபடி நிலத்திலிருந்து டென்சில் கொப்பேகடுவை வீதி வரை பயிர்ச்செய்கை நிலங்களுக்கு மின்சாரம் வழங்குவது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தெயட்ட எலிய நிகழ்ச்சித் திட்டதின் கீழ் இதற்காக ரூபா 5.19 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.5 காலநிலை மாற்றத்திற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

### 5.5.1 மின்சக்தித் துறையில் - தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கள் (NDCs)

மின்சக்தித் துறையில் தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்களுக்காக (NDCs) பின்வரும் கொள்கை இலக்குகள் அரசாங்கத்தினால் கால நிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சட்டக சம்மேளனத்திற்கு வெளியிட்டுள்ளது.

- 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மின்சக்திக்கான கேள்வியில் 70 சதவீதத்தினை மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியின் மூலம் அடைதல்.
- 2050 ஆம் ஆண்டளவில் காபன் நடுநிலையாக்கத்தை அடைதல்
- புதிய நிலக்கரி மின்நிலையம் எதனையும் ஸ்தாபிக்காமிருத்தல்.

2021 அம் ஆண்டில் மின்சக்தித் துறையில் தேசிய ரீதியில் தேசிய தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கள் (NDCs) புதுப்பிக்கப்பட்டதோடு, அதன் படி, சாதாரணமான சூழ்நிலையின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு 25 சதவீதமாகும். ( நிபந்தனைகளற்ற 5 சதவீத மற்றும் நிபந்தனைகளுடனான 20 சதவித ) 2021 – 2030 காலப்பகுதிக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட பசுமை வாயு வெளியீட்டினைக் குறைத்தல் நிபந்தனைகளற்று 9,819,000 மெட்ரிக் தொன்கள் மற்றும் நிபந்தனைகளுடன் 39,274,000 மெட்ரிக் தொன்களுடனுமாகும். (காபன்டயொக்சைட்டின் மொத்தப் பெறுமதி 49,093,000 மெட்ரிக் தொன்).

### 5.5.2 கொழும்பு பசுமை அபிவிருத்தி கலந்துரையாடல்

தேசிய பசுமை அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு பங்களிப்புச் செலுத்துவதற்கும் மற்றும் பசுமை அபிவிருத்தி தொடர்பாக தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டமொன்றை மேம்படுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய பல்வேறு பங்கேற்பாளர்களின் பங்கேற்புடனான தளமொன்றை நிறுவுவதற்குகு ஆதரவை அளிக்கும் நோக்குடன் 2021ஆம் ஆண்டில் சுற்றாடல் அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய பங்கேற்பாளர்களுடன் இணைந்து அமைச்சினால் கொள்கை ரிதியான கலந்துரையாடல் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

## 6. 2022 ஆம் ஆண்டிடிற்கான திட்டங்கள்

### 6.1 மின்னுற்பத்தி

#### (i) நீர் மின்னுற்பத்தி

- 14 மெ.வோ சீதாவக கங்கை நீர்மின் நிலையம் - 2022 ஆம் ஆண்டில் இதன் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது..

#### (ii) சூரிய மின்னுற்பத்தி

- 100 மெ.வோ சியம்பலாண்டுவை சூரிய மின்சக்திப் பூங்கா - இப்பூங்காவை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஒப்பந்தத்தை 2022 வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- 150 மெ.வோ பூனேரி சூரிய மின்சக்திப் பூங்கா - சூரிய மின்சக்திப் பூங்காவை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழிகளை கோருதல் மற்றும் சுற்றுச்சூழல், சமூக தாக்க ஆய்வினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- 75 X 7,000 கி.வோ நிலத்தின் மீது நிர்மாணிக்கப்படும் சூரிய மின்சக்தி நிலையம் (கிராமத்துக்கு ஒரு மின் நிலையம்)
- முதலாவது கட்டத்தின் கீழ் நிலத்தின் மீது நிர்மாணிக்கப்படும் 155 சூரிய மின்நிலையங்கள் 2022 ஆம் ஆண்டில் நடைமறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, இரண்டாவது கட்டத்துக்கான கேள்வி மனுக்களை நிர்மாணத்துக்காக வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 147 மெ.வோ சிறிய அளவிலான சூரிய மின்சக்தி நிலையங்கள் - இதன் கீழ் 82 மெ.வோ கொள்திறனைக் கொண்ட மின் நிலையங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- 100 ஐஅடொ மில்லியன் இந்திய கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சூரிய மின்சக்தி நிலையம் - இதற்கான மின்நிலையங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, 2023 ஆம் ஆண்டில் 120 கொள்திறனை தேசிய வலையமைப்புக்கு சேர்த்துக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

#### (iii) காற்று மின்னுற்பத்தி நிலையம்

- 20/50 மெ.வோ மன்னார் காற்று மின் சக்தி நிலையம் - 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- 100 மெ.வோ மன்னார் காற்று மின் சக்திப் பூங்கா - 2 ஆம் கட்டம் - இப்பூங்காவை அபிவிருத்தி செய்வதற்குரிய முன்மொழிவுகளைக் கோரும் நடவடிக்கையினை 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கும் மற்றும் 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 100 மெ.வோ மன்னார் - முல்லி குளம் காற்று மின் சக்திப் பூங்கா - 3 ஆம் கட்டம் - இப்பூங்காவை அபிவிருத்தி செய்வதற்குரிய சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீட்டு ஆய்வினை 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்து நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதிபார்க்கப்படுகின்றது.
- 100 மெ.வா பூனேரி காற்று மின் சக்திப் பூங்கா - 1 ஆம் கட்டம் - இப்பூங்காவை அபிவிருத்தி செய்வதற்குரிய காணிகளை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகளைக் கோருவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

- 5 மற்றும் 10 மெ.வோ மன்னார் காற்று மின் சக்தி நிலையங்கள் - இம்மின் நிலையங்களின் நிர்மாண வேலைகள் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.
- 10 மெகா வோட் காற்று மின் சக்தி நிலையங்கள் - திருகோணமலை - இம்மின் நிலையங்களின் நிர்மாண வேலைகள் 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

காற்று, சூரிய, மற்றும் நீர் மின்னுற்பத்திக் கருத்திட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சினால் தனியார் முதலீட்டாளர்களின் கொள்திறன் 50 மெ.வோ ஐ விட அதிகமான மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக நிர்மாணித்தல், உடமையாக்கல், செயற்படுத்தல் (BOO) முறைமையின் கீழ் அக்கறையை வெளிப்படுத்துதல் 2021 செப்தெம்பர் மாதத்தில் கோரப்படும். 2022 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### (iv) சிறிய அளவிலான நீர் மின்னுற்பத்தி

2022 ஆம் ஆண்டிற்கான கொள்திறனை சேர்த்துக் கொள்ளல் பின்வருமாறாகும்.

| | இடம் | கொள்திறன் (மெகா.வோட) | பூர்த்தியாகும் ஆண்டு | மொத்தக் கொள்திறன் (மெ.வோ.) |
|---|---|---|---|---|
| 01 | மாகல் கங்கை | 2.8 | 2022 | 13 |
| 02 | திக்கல | 4.4 | | |
| 03 | கடாரன் ஓயா | 0.5 | | |
| 04 | எல்ல முல்லை | 1.5 | | |
| 05 | ஹத்மல எல்ல | 2.0 | | |
| 06 | தும்புளு ஓயா நீர்த்தேக்கம் | 1.6 | | |

### (V) திரவமயமாக்கப்பட்ட இற்கை வாயு (LNG) உற்பத்தி

- **300 மெ.வோ - முதலாவது LNGமின் நிலையம், கெரவலப்பிட்டிய** - "சொபதனவி கருத்திட்டத்தின் பிரதான நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து 2023 ஆண்டு நடுப்பகுதியில் பூர்த்தி செய்வவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- **300 மெ.வோ - இரண்டாவது LNG மின் நிலையம், கெரவலப்பிட்டிய** -இக்கருத்திட்டத்தின் அபிவிருத்தி செய்வது தொடர்பான ஒப்பந்தத்தை 2022 ஆம் ஆண்டில் பொருத்தமான முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- **LNG வழங்கல் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி** - - LNG முனைய வசதிகளைக் கொண்ட FSRU அலகை நிர்மாணித்து , உடமையாக்கி செயற்படுத்தும் (BOO) அடிப்படையிலும் LNG குழாய் முறைமையை நிமாணித்து, உடமையாக்கி, செயற்படுத்தி, உரிமையை ஒப்படைக்கும் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்படவுள்ளதோடு, 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**Vi) 130 மெ.வோ - வாயு விசையாழி மின் நிலையம் - களனி திஸ்ஸ - இக்கருத்திட்டத்துக்குரிய கேள்வி மனுவை வெகு விரைவில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றறது.**

**2030 ஆம் ஆண்டளவில் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் மின்சக்திக்கான கேள்வியில் 70 சதவீதத்தினை உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள்**

மின்சக்தி அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சின் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் அரசாங்கக் கொள்கைகள், இலக்குகளை அடைவதுடன் தொடர்புடைய திட்டங்களைத் தயாரிப்பதோடு, பின்வரும் திட்டங்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

| மின்னுற்பத்திக் கொள்திறன் திட்டம் (2020 -2030) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஸ்தாபிக் கப்பட்ட கொள்திற ன் (மெகா வோட்)- 2020 | மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் நோக்கிற்கு ஏற்ப மின்னுற்பத்தி உருவாக்கக் கொள்திறனை சேர்த்துக் கொள்ளல் ((மெ.வோ) | | | | | | | | | |
| | | 2021 | 2022 | 2023 | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 | 2029 | 2030 |
| தூய எரிசக்தி | | | | | | | | | | | |
| மீளப்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 2,430 (52%) | 2,980 | 3,367 | 3,883 | 4,478 | 4,906 | 6,028 | 7,178 | 8,443 | 9,523 | 11,148 (82%) |
| பிரதான நீர்மின்சக்தி | | | | | | | | | | | |
| லக்சபான | 354 | 354 | 354 | 354 | 354 | 354 | 354 | 354 | 354 | 354 | 354 |
| மகாவலி | 817 | 817 | 817 | 817 | 817 | 817 | 817 | 817 | 817 | 817 | 817 |
| சமனல | 212 | 212 | 212 | 212 | 212 | 212 | 212 | 212 | 212 | 212 | 212 |
| மொரகொல்ல | | | | 32 | 32 | 32 | 32 | 32 | 32 | 32 | 32 |
| ப்ரோட்லன்ட்ஸ் | | 35 | 35 | 35 | 35 | 35 | 35 | 35 | 35 | 35 | 35 |
| உமா ஓயா | | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 120 |
| சீதாவக கங்கை | | | | 14 | 14 | 14 | 14 | 14 | 14 | 14 | 14 |
| தல்பிட்டிகலை | | | | | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 |
| | | | | | | | | | | | |
| சிறிய அளவிலான நீர் மின்சக்தி | 423 | 427 | 440 | 455 | 485 | 520 | 617 | 700 | 700 | 700 | 700 |
| | | | | | | | | | | | |
| காற்று | | | | | | | | | | | |
| மன்னார் | 30 | 100 | 100 | 100 | 250 | 250 | 250 | 250 | 250 | 250 | 250 |
| பூனேரி | | | | | 100 | 233 | 233 | 233 | 233 | 233 | 233 |
| ஏனைய | 149 | 149 | 149 | 204 | 204 | 204 | 204 | 211 | 411 | 711 | 1,011 |
| (Off Shore) | | | | | | | 500 | 1,000 | 1,500 | 1,500 | 2,000 |
| | | | | | | | | | | | |
| சூரிய | | | | | | | | | | | |
| சியம்பலாண்டுவ | | | | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி | 337 | 474 | 564 | 654 | 744 | 844 | 944 | 1,044 | 1,144 | 1,244 | 1,344 |
| ஏனையவை | 70 | 225 | 495 | 695 | 895 | 1,025 | 1,360 | 1,600 | 1,840 | 2,090 | 2,370 |
| | | | | | | | | | | | |
| ஏனைய மீளப்புதுப்பிக்கத்தக்க மூலங்கள் | | | | | | | | | | | |
| உயிர் திணிக்கைகள் மூலமான மின்சக்தி | 38 | 67 | 81 | 91 | 101 | 111 | 121 | 141 | 161 | 181 | 201 |
| பொம்பாஹூர மின்சக்தி | | | | | | | | | | 200 | 400 |
| மின்கல களஞ்சிய வசதிகள் | | | | | | 20 | 100 | 300 | 500 | 700 | 900 |
| கடலலை | | | | | | | | | 5 | 5 | 10 |
| புவி வெப்பம் | | | | | | | | | | 10 | 30 |
| | | | | | | | | | | | |
| திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு | | | | 310 (5%) | 660 | 977 | 977 | 977 | 977 | 977 | 977 (7%) |
| கெரவலப்பிட்டிய | | | | 310 | 660 | 977 | 977 | 977 | 977 | 977 | 977 |
| தூயதல்லாத மின்சக்தி | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| நிலக்கரி | 900 (19%) | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 (7%) |
| நுரைச்சோலை | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 | 900 |
| | | | | | | | | | | | |
| டீசல் | 536 (11%) | 536 | 536 | 646 | 592 | 275 | 275 | 275 | 275 | 275 | 275 (2%) |
| களனி திஸ்ஸ | 115 | 115 | 115 | 225 | 225 | 225 | 225 | 225 | 225 | 225 | 225 |
| களனி(18*3)** | 54 | 54 | 54 | 54 | | | | | | | |
| Sojitz | 163 | 163 | 163 | 163 | 163 | | | | | | |
| ஒன்றிணைக்கப்பட்ட சக்கரம் | 154 | 154 | 154 | 154 | 154 | | | | | | |
| தல்பிட்டிய, கொலன்னாலை, மதுகமை (1*50) | 50 | 50 | 50 | 50 | 50 | 50 | 50 | 50 | 50 | 50 | 50 |
| புதைபடிம எண்ணெய் | 839 (18%) | 508 | 508 | 508 | 208 | 208 | 208 | 208 | 208 | 208 | 208 (2%) |
| சபுகஸ்கந்த (18*4) | 52 | 52 | 52 | 52 | 52 | 52 | 52 | 52 | 52 | 52 | 52 |
| சபுகஸ்கந்த (9*8) | 72 | 72 | 72 | 72 | 72 | 72 | 72 | 72 | 72 | 72 | 72 |
| பத்தல மின் நிலையம் | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 60 |
| வட ஸனனி | 24 | 24 | 24 | 24 | 24 | 24 | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேற்குக்கரை | 300 | 300 | 300 | 300 | | | | | | | |
| ACE எம்பிலிபிட்டிய | 100 | | | | | | | | | | |
| ACE மாத்தறை | 20 | | | | | | | | | | |
| AES | 163 | | | | | | | | | | |
| ஏசியா பவர் | 48 | | | | | | | | | | |
| மோத்தம் | 4,705 | 4,924 | 5,311 | 6,247 | 6,838 | 7,266 | 8,388 | 9,538 | 10,803 | 11,883 | 13,508 |

| மின்னுற்பத்தித் திட்டம் 2022-2030 | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் நோக்கிற்கு ஏற்ப மின்னுற்பத்தி ((மெகா வோட்) | | | | | | | | |
| | **2022** | **2023** | **2024** | **2025** | **2026** | **2027** | **2028** | **2029** | **2030** |
| தூய மின்சக்தி | | | | | | | | | |
| மீளப்புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி (கி.வோ.ம) | **9,594** | **10,739** | **11,393** | **13,021** | **14,133** | **15,116** | **16,218** | **18,419** | **19,825** |
| மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மின்சாரத்திற்கான கேள்வியின் (%) ஆக | **52.7%** | **55.8%** | **56.0%** | **60.4%** | **61.9%** | **62.6%** | **63.8%** | **68.8%** | **70.3%** |
| பிரதான நீர்மின்சக்தி | **5,078** | **5,507** | **5,417** | **6,035** | **5,838** | **5,585** | **5,541** | **6,118** | **5,759** |
| லக்சபான | 1,558 | 1,601 | 1,438 | 1,596 | 1,592 | 1,448 | 1,535 | 1,477 | 1,550 |
| மகாவலி | 2,386 | 2,804 | 2,653 | 3,135 | 2,767 | 2,566 | 2,806 | 3,172 | 2,643 |
| சமனல | 762 | 679 | 660 | 721 | 875 | 818 | 583 | 889 | 740 |
| மொரகொல்ல | | | 135 | 130 | 154 | 161 | 151 | 143 | 157 |
| ப்ரோட்லன்ட்ஸ் | 164 | 174 | 159 | 197 | 209 | 183 | 186 | 184 | 186 |
| உமா ஓயா | 207 | 249 | 372 | 255 | 240 | 408 | 281 | 253 | 484 |
| சிறிய அளவிலான நீர்மின்சக்தி | **1,456** | **1,519** | **1,582** | **1,645** | **1,692** | **1,739** | **1,786** | **1,833** | **1,880** |
| காற்று | **733** | **833** | **957** | **1,279** | **1,899** | **2,316** | **2,645** | **3,469** | **4,364** |
| மன்னார் | 322 | 370 | 434 | 756 | 1,077 | 1,077 | 1,077 | 1,077 | 1,077 |
| பூனேரி | | | | | 298 | 716 | 716 | 716 | 716 |
| ஏனைய | 412 | 463 | 523 | 523 | 188 | 188 | 852 | 1,676 | 2,571 |
| சூரிய | **1,758** | **2,242** | **2,729** | **3,285** | **3,857** | **4,487** | **5,118** | **5,731** | **6,413** |
| உயிர் திணிக்கை மின்சக்தி | **568** | **638** | **708** | **778** | **848** | **988** | **1,128** | **1,268** | **1,409** |
| களஞ்சிய வசதிகள் | | | | * | * | * | * | * | * |
| விசைக்குழாயிடப்பட்ட நீர்மின் சக்திக்களங்சியம் | | | | | | | | * | * |
| மின்கல களஞ்சியம் | | | | * | * | * | * | * | * |
| | | | | | | | | | |
| திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு | | | **2,502** | **2,757** | **3,479** | **3,748** | **3,830** | **2,838** | **3,632** |
| புதிய ஒன்றிணைக்கப்பட்ட சக்கரம் | | | 1,574 | 2,460 | 2,807 | 2,516 | 2,497 | 2,158 | 2,600 |
| களனி திஸ்ஸ புதிய GTs | | | 0 | 0 | 3 | 0 | 0 | 0 | 0 |
| மாற்றப்பட்ட West Coast | | | 288 | 69 | 138 | 263 | 365 | 236 | 296 |
| மாற்றப்பட்ட களனி திஸ்ஸ ஒன்றிணைக்கப்பட்ட சக்கரம் | | | 278 | 167 | 205 | 450 | 350 | 185 | 366 |
| மாற்றப்பட்ட Sojitz களனி திஸ்ஸ | | | 362 | 60 | 209 | 362 | 341 | 178 | 257 |
| நிலையான மின்சக்திக்கான உயர்கேள்வி | | | | | 118 | 157 | 276 | 82 | 113 |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| நிலக்கரி | **5,439** | **5,534** | **5,568** | **5,175** | **5,170** | **5,235** | **5,300** | **5,474** | **4,668** |
| நுரைச்சோலை | 5,439 | 5,534 | 5,568 | 5,175 | 5,170 | 5,235 | 5,300 | 5,474 | 4,668 |
| **டீசல்/நெப்தா** | **1,117** | **1,103** | **8** | **3** | **0** | **0** | **0** | **0** | **0** |
| களனி திஸ்ஸ GTs | 2 | 3 | | | | | | | |
| களனி திஸ்ஸ GT 7 | 61 | 5 | 8 | 3 | | | | | |
| களனி திஸ்ஸ ஒன்றிணைக்கப்பட்ட சக்கரம் | 521 | 315 | | | | | | | |
| Sojitz களனி திஸ்ஸ | 504 | 626 | | | | | | | |
| குறை நிரப்பு | 29 | 2 | | | | | | | |
| புதிய ஒன்றிணைக்கப்பட்ட சக்கரம் (திறந்த சக்கர செயற்பாடு | | 151 | | | | | | | |
| புதை படிம எண்ணெய் | **2,068** | **1,869** | **875** | **600** | **39** | **60** | **55** | **50** | **71** |
| சபுகஸ்கந்த A | 333 | 316 | 205 | 190 | | | | | |
| சபுகஸ்கந்த B | 454 | 415 | 351 | 341 | | | | | |
| பத்தல மின் நிலையம் | 407 | 357 | 255 | | | | | | |
| வடக்கு ஜனனி | 123 | 120 | 64 | 69 | 39 | 60 | 55 | 50 | 71 |
| மேற்கு ஜனனி | 752 | 662 | | | | | | | |
| | | | | | | | | | |
| மொத்த மின்சாரத்திற்கான கேள்வி (கி.வோ.ம) | **18,218** | **19,252** | **20,346** | **21,556** | **22,822** | **24,160** | **25,404** | **26,780** | **28,195** |

### 6.2 மின்செலுத்துகை மற்றும் விநியோக அபிவிருத்தி

தற்போது இருக்கும் மின் செலுத்துகை முறைமையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலம் அதிக அளவில் மீளப்புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தித் திட்ட முறைமைக்கு உள்வாங்கிக் கொள்வதற்காக மின் செலுத்துகை மற்றும் விநியோக முறைமையை வலுப்படுத்துவதற்கும் மற்றும் விரிவாக்குவதற்கும் திட்டமிடப்படுகின்றது.

- 2021 ஆண்டின் முடிவடைவதற்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஐஅடொ 250 மில்லியன் கடன் உடன்படிக்கையொன்றை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, அதன் மூலம் பின்வரும் மின் செலுத்துகை மற்றும் விநியோகங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கபபடுகின்றது.

| | கருத்திட்டத்தின் பெயர் | சம்பூரண மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா . மில்லியன்) |
|---|---|---|
| 1 | மின்சக்தித் திட்ட முறைமையின் நம்பகத் தன்மையை வலுப்படுத்துவதற்கான கருத்திட்டம் (PSRSP) | |
| 1.1 | கலவானை மற்றும் நீர் கொழும்பு 132 கிலோ மின்தொகுப்பு உப நிலையங்களை நிர்மாணித்தல்.<br>மீரிகமை 220 கி.வோ 220 மின்தொகுப்பு உப நிலையமொன்றுடன் மின்மாற்றி நிலையமொன்றை நிர்மாணித்தல் 132 மாத்தறை மின்தொகுப்பு நிலையமொன்றை விரிவாக்கல். | 7,982 |
| 1.2 | மாத்தறை – அம்பாந்தோட்டை 132 கிலோ வோல்ட் மின்செலுத்துகை வரிசை யை நிர்மாணித்தல். அம்பாந்தோட்டை- திஸ்ஸமகாராமை 132 கி.வோ மின்செலுத்துகை வரிசை, ஹோமாகமை மின்தொகுப்பு உப நிலையத்திலிருந்து ஹொரணை – பாதுக்கை மின்தொகுப்பு 132 கி.வோ வரிசை வரை, 132 கி.வோ வரிசை பத்தேகமை மின் தொகுப்பு உப நிலையத்திலிருந்து காலி – அம்பலாங்கொடை 132 வரிசை வரை 132 கி.வோ நிலத்தின் மீது ஏற்றப்பட்ட வரிசை, களனி மின்கம்பி கெண்ட்ரியிலிருந்து பேலியகொடை மின்தொகுப்பு உப நிலையம் வரை | 5,015 |
| 1.3 | திஸ்ஸ மகாராமை, பத்தேகமை, ஹோமாகமை, மற்றும் பேலியகொடை 132 கி.வோ மின்தொகுப்பு உபநிலையங்களை நிர்மாணித்தல். | 6,572 |
| 1.4 | புதிய அனுராதபுரம் - புதிய ஹபரணை 220 கி.வோ மின்செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல். குருலே – கலவானை 132 கி.வோ மற்றும் ஹபரணை – வேயங்கொடை 220 கி.வோ மின் செலுத்துகை வரிசைக்கு மீரிகமை வலையமைப்பு உப நிலையத்திலிருந்து 132 கி.வோ மின்கம்பி வரிசையின் ஒரு பகுதியை நிர்மாணித்தல். | 2,991 |
| 2 | விநியோக முறைமையின் நம்பகத்தன்மையை வலுவூட்டுவதற்கான கருத்திட்டம் (லங்கா மின்சக்தி தனியார் கம்பனி) | 10,000 |

- சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தினால் (USAID) இலங்கை மின்சார சபையினால் இனங்காணப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப உதவியின் கீழ் ஐஅடொ 4.23 மில்லியன் உதவியொன்றை அவர்களின் நிதி உதவியின் மூலம் வழங்கவுள்ளது. அதன் மூலம் 2022 ஆம் ஆண்டின் நீண்ட கால மின்னுற்பத்தி மற்றும் மின்செலுத்துகை திட்டங்களின் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் பின்வரும் முன்னுரிமைக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சு ஏற்கனவே நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

| | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவு (USDM) |
|---|---|---|
| 1 | 132/33 கி.வோ பியகமை வலயத்தின் மின்தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல். | 16.36 |
| 2 | ஏகல 220/33 கி.வோ உப நிலையத்தை நிர்மாணித்தல் | 20.01 |
| 3 | கொழும்பு ஜீ (கிருலப்பனை) 220/132 கி.வோ உப நிலையம் மற்றும் கொழும்பு K (வெள்ளவத்தை) 132/11 கி.வோ மின்தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல். | 107.66 |
| 4 | 132/11 கி.வோ, உப P (நாரஹேன்பிட) மின்தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல். | 28.61 |
| 5 | 132/11 கி.வோ, உப Q (நகர சபை – டவுன் ஹோல்) மின்தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல். | 12.60 |
| 6 | 132/11 கி.வோ, கண்டி நகரத்தின் மின்தொகுப்பு . உப நிலையத்தை நிர்மாணித்தல். | 27.06 |
| 7 | 220/33 கி.வோ, கொட்ட தெனியாவ மின்தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல். | 17.23 |

| | கருத்திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவு (USDM) |
|---|---|---|
| 8 | 132/33 கி.வோ, வாரிய பொலை கொடுமா உப நிலையம் மற்றும் 220/132 கி.வோ வாரிய பொலை தெற்கு இணைப்பு இடத்தை நிர்மாணித்தல். | 39.38 |
| 9 | 220 கி.வோ வவுனியா கொடுமா உப நிலைய அபிவிருத்தி. | 18.18 |
| 10 | புதிய ஹபரணை – கப்பல் துறை 220 கி.வோ மின் செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல். | 28.87 |
| 11 | சுமனல வெவ – எம்பிலிபிட்டிய - 132 கி.வோ மின் செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல். | 9.33 |
| 12 | 132/33 கி.வோ வெலிமடை மின்தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல். | 26.09 |
| 13 | 132/33 கி.வோ, கீரியன்கல்லி மின்தொகுப்பு உப நிலையத்தை நிர்மாணித்தல். | 29.93 |
| 14 | கெரவலப்பிட்டி – துறைமுகம் 220 கி.வோ இரண்டாவது நிலத்தில் ஏற்றப்பட்ட மின்செலுத்துகை வரிசையை நிர்மாணித்தல். | 46.90 |

## 7. 2021 ஆம் ஆண்டில் முகங்கொடுக்க நேர்ந்த சவால்களும், அத்தகைய சவால்களை வெற்றி கொள்வதற்கான உபாயங்களும்

| | சவால் | வெற்றி கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உபாயம் |
|---|---|---|
| 1 | அபிவிருத்திக் கருத்திட்டத்தினால் எதிர்கொள்ளப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமைகளின் தாக்கம். | ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கல்.<br>நீண்ட நேர காவல் சேவையை அறிமுகப்படுத்தல்.<br>பிரதான அத்தியாவசிய கருத்திட்டங்களை நெருக்கமாக அவதானித்தல்.<br>கருத்திட்டப் பணிப்பாளர்களுடன் அடிக்கடி கலந்துரையாடி பிரச்சினைகளை இனங்கண்டு உரிய தரப்பினர்களுடன் ஒன்றிணைந்து அவற்றைத் தீர்த்தல். |
| 2 | **மின்னுற்பத்தி மற்றும் மின் செலுத்துகை கருத்திட்டங்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகள்** | |
| | காணிகளைக் கையகப்படுத்துவதிலுள்ள தாமதம் | காணி அமைச்சின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக இவ்வமைச்சின் கீழ் காணிகளின் செயலாற்றுகைப் படையொன்றை நியமித்தல். |
| | கருத்திட்டங்களினால் பாதிக்கப்பட்ட காணிகளுக்குச் சொந்தமான மக்களை மீள குடியேற்றுவதில் உள்ள நெருக்கடி | நட்டஈடு வழங்கலானது மிகவும் கவரச்சிகரமாக இருக்கும் வகையில் LARC மற்றும் Super LARC இன் கீழ் நட்டஈட்டை வழங்குவதற்கு அவசியமான கருத்திட்டங்களை வர்த்தமானியில் பிரசுரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. |
| | மின்னுற்பத்திக் கருத்திட்டங்களுக்காக இனங்காணப்பட்டுள்ள மகாவலி காணிகள் / நீர்த்தேக்கங்களுக்கான அரச கட்டணமொன்றை அறவிடல். | நீர்ப்பாசன அமைச்சுடன் கலந்துரையாடி சாதகமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளல். |
| 3 | இலங்கை மின்சார சபையின் நிதித் தடங்கல்களும் மற்றும் மின்செலுத்துகைக் கட்டணங்கள் வரையறுக்கப்பட்டதாக இருப்பதனால் மின் தொகுப்பின் அபிவிருத்தியை மேற்கொள்ள நிதி போதாமையினால் குறிப்பிடத்தக்க அளவிலான முதலீடுகள் தேவைப்படல். | கடன்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக முடிந்த போதெல்லாம் முதலீட்டை மேம்படுத்தல் (மின்னுற்பத்திக் கருத்திட்டங்களுக்கான முதலீட்டாளர்களைக் கவர்தல் மற்றும் முதலீட்டாளர்களைக் கவர முடியாத மின் செலுத்துகை மற்றும் விநியோக வரிசைகளை நிர்மாணிப்பதற்கு இரு தரப்பு மற்றும் பல் தரப்பு நிதியை தேடுதல். |
| 4 | கைத்தொழில் உற்பத்திச் செயன்முறையில் சர்வதேச போட்டித் தன்மையைப் பேணும் பொருட்டு மின்சக்தி உற்பத்திக்கான செலவைக் குறைத்தல். | மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியின் பங்களிப்பை அதிகரித்தல், திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயுவை அறிமுகப்படுத்தல், மற்றும் மின்சக்திக் கலப்பைப் பல்வகைப்படுத்தல் |
| 5 | **மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சகதிக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள்** | |
| | சிக்கலான அனுமதி வழங்கும் செயன்முறைகளுக்கு பல நிறுவனங்களின் அனுமதி தேவைப்படுத்தல். (மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வளப்பாதுகாப்புத் திணைக்களம், வனவிலங்குகளின் திணைக்களம், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம், இலங்கை மகாவலி | அனைத்து நிறுவனங்களுக்கும் பதிலளிப்பதற்கு போதிய காலப்பிரிவொன்றை வழங்குதல்.<br><br>பெரிய அளவிலான மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத்திட்டங்களுக்கு (பிரதானமாக மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திப் பூங்கா மற்றும் மிதக்கும் சூரிய மின்சக்திக் கருத்திட்டங்களுக்கு) |

| | | |
|---|---|---|
| | அதிகாரசபை, MASL, GSMB, NBRO , கமநல அபிவிருதித் திணைக்களம், காணி காணி ஆணையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் | இராஜாங்க அமைச்சின் மூலம் தேவையான அனைத்து அனுமதிகளுடன் கருத்திட்ட நிலத்தை விடுவித்தலும், மற்றும் கேள்வி மனுக்களை முன் வைப்போர் வருவதற்கான இடங்கள் / நீர்த்தேக்கங்கள் தயாரித்தல், (அவ்வனுமதிகளை வழங்குவதற்காக ஏற்கப்பட்ட செலவு என்ன? அச்செலவினை தெரிவு செய்யும் அபிவிருத்தியாளரினால் ஏற்கப்பட வேண்டுமென்பதற்கான நிபந்தனையொன்றை கேள்வி மனு ஆவணத்துடன் உள்ளடக்குதல்). |
| | மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத்திட்டங்களின் போக்கு மந்த நிலையை அடைதல். | இலங்கை மின்சார சபையினால் வலையமைப்பின் பயன்பாட்டு அடிக்கடி பகிரங்கப்படுத்தல். இலங்கை மின்சார சபையினால் அடிக்கடி மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத்திட்டத்திற்கான கேள்வி மனுவை நடைமுறைப்படுத்தல். முற்றும் அடுத்த கேள்வி மனு வெளியிடும் வரை பொருத்தமான சந்தர்ப்பங்களில் (feed in tariff) அறிமுகப்படுத்தல். |
| | சூரிய மின்சக்தி உற்பத்தியில் இடைப்பட்ட தன்மையை குறைத்தல். | மின்கலத்தை அறிமுகப்படுத்தல். இலங்கை நெனோ தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா மின்சக்தி தனியார் கம்பனியினால் ஏற்க முடியுமான விலையொன்றுக்கு மின்கலத்தை உற்பத்தி செய்தலுடன் தொடர்பான முன்னோடிக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சூரிய மின்சக்தி கருத்திட்டங்களில் மின்கலங்களின் பாவனையை மேம்படுத்துவதற்கு விஷேட கட்டண முறைமொன்றை அறிமுகப்படுத்தல். |

# இலங்கை மின்சார சபை

## அறிமுகம்

இலங்கை மின்சார சபை (இ.மி.ச.) 1969 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம் 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ள 1969 நவெம்பர் 1 ஆந் திகதியிடப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனமாகும். 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டமானது இ.மி.ச. இனை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) ஒழுங்குமுறை வரம்பிற்குள் கொண்டுவந்தது. இ.மி.ச. ஆனது சகல வகை நுகர்வோருக்காகவும் மின்சக்தியைப் பிறப்பாக்கம் செய்வதற்கும் பரிமாற்றம் செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும், சபையின் மொத்த வருமானம் அதன் அனைத்து நடவடிக்கைகளுக்கும் போதுமானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக PUCSL இனால் ஒப்புதலளிக்கப்பட்ட கிரயப் பிரதிபலிப்பு இறுதிப் பயனர் விதிப்பனவு ஒன்றின்படி வருமானத்தைச் சேகரிப்பதற்கும், PUCSL இனால் வழங்கப்பட்ட உரிமங்களுக்கு இணங்கவும் அதன் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதன்படியும் அதனது தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

## நோக்கு

வளமான வாழ்விற்கு மின்சாரம்

## செயற்பணி

எமது அடிப்படை விழுமியங்களான தரம், தேசத்திற்கான சேவை, வினைத்திறனும், விளைதிறனும், அர்ப்பணிப்பு, பாதுகாப்பு, தொழில்வாண்மை மற்றும் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கின்ற அதே வேளை முழு இலங்கைக்கும் மின்சார வழங்கலில் செயற்றிறனானதும் ஒருங்கிணைக்கப்பட்டதும் சிக்கனமானதுமான முறைமை ஒன்றினை விருத்தி செய்தலும் பேணுதலும்.

## இலக்குகள்

ஐக்கிய நாடுகளால் விநியோகிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் (SDG) அதிக கவனத்தைச் செலுத்துவதன் மூலம் நிறுவனத் திட்டம் 2019 – 2023 இற்கான எட்டு இலக்குகளை இ.மி.ச. ஏற்பிசைவு செய்திருந்தது. நிறுவனத்தின் நீண்ட கால நோக்கு மற்றும் செயற்பணியை ஏற்பிசைவு செய்யும் பொருட்டு அமைக்கப்பட்ட எட்டு *இலக்குகளும்* கீழே தரப்பட்டுள்ளன.

- இ.மி.ச. இனை நிதிசார் ரீதியில் வலிமையாக்குதல்
- குறைந்த கிரயத்தைக் கொண்ட சக்திப் பிறப்பாக்கத்தை அதிகரித்தல்
- முழு நாட்டிற்கும் மலிவான விலையில் மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்துதல்
- வாடிக்கையாளர்களுக்கான உயர் தரமான மின்சார வழங்கலும் சேவைகளும்
- வெளிவாரி நாட்டதாரர்களுடன் வலிமையான உறவு
- மேம்படுத்தப்பட்ட ஊழியர் ஈடுபாடு
- இன்றைய நவீன தொழில்நுட்பத்துடனான செயற்பாட்டுச் சிறப்பு
- பசுமை சக்தியின் ஒருங்கிணைப்பை உத்ததமாக்குதல்

## சுற்றுச்சூழல் நிலைபேற்றுத்தன்மை

வருங்காலச் சந்ததியினருக்காக நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதே வேளை, இலங்கையில் புத்தாக்கம்மிக்க ஒரு நிறுவனமாக இருப்பதற்கு எங்களை அர்ப்பணித்துள்ளோம். இ.மி.ச. இன் செயற்பாடுகளில் சமூகத்தின் நம்பிக்கையையும் பற்றுறுதியையும் கட்டியெழுப்பும்போது, தொடர்புடைய சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் ஒழுங்குமுறை நியமங்களுடன் அதன் முழுமையான இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக இ.மி.ச. முழுவதும் சிறந்த சுற்றுச்சூழல் முகாமை நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. நீண்ட கால ஓட்டத்தில் சமூகத்திற்கு உத்தமமான நன்மைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக, எங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் சகல நிலைகளிலும் சமூகம் மற்றும் ஏனைய நாட்டதாரர்களை உள்ளடக்கிய பங்கேற்பு அணுகுமுறை ஒன்றின் ஊடாக எங்களது வணிகத்தை நடத்துகின்றோம்.

### 1. மின்சார வழங்கல் பற்றிய கண்ணோட்டம்

கடந்த பதினைந்து ஆண்டுகளில் நாட்டின் மின்சாரத் தேவையானது ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 5.5% என்ற சராசரி வீதத்தில் வளர்ச்சி அடைந்திருந்த அதே வேளை உச்சப் பாவனை நேரத்தில் மின்சாரத்திற்கான தேவை ஆண்டொன்றிற்கு 3.7% என்ற வீதத்தில் வளர்ச்சி அடைந்திருந்தது. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டின் நிகர மின் பிறப்பாக்கம் 15,714 GWh ஆகப் பதிவு

செய்யப்பட்டிருந்தது. இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.3% இனால் வீழ்ச்சியடைந்த ஒரு தொகையாகும். இதற்கு கோவிட் 19 நோய்ப் பரவலும் தாக்கம் செலுத்தியிருந்தது.

மின் பிறப்பாக்கம் மீதான இ.மி.ச. இன் வருடாந்தச் செலவினம் இ.மி.ச. மற்றும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் (IPP) ஆகியோரின் அனல் மின்வலு ஆலைகளிலிருந்து பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவுடன் கணிசமானளவுக்கு மாறுபடுகிறது. நிலக்கரி மற்றும் திரவ எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வது அனல் மின்வலு நிலையங்களின் செயற்பாட்டில் நேரடித் தாக்கத்தைக் கொண்டிருப்பதுடன் இ.மி.ச. இன் நிதியை முகாமை செய்வதற்கும் மிக முக்கியமானதாகும்.

பொருளாதார நடவடிக்கைகளின் விரிவாக்கம் காரணமாக மின்சாரத்திற்கு ஏற்படுகின்ற அதிகரித்த கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காகவும் புதிய நுகர்வோர் காரணமாக மின்சாரத்திற்கு ஏற்படும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காகவும் இ.மி.ச. இன் தற்போதைய மின் வலையமைப்பை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, அதன் மின் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு இ.மி.ச. இற்கு குறிப்பிடத்தக்களவு முதலீடுகள் தேவையாக உள்ளன. கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் கிராமப் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவும் கிராமிய மின்னூட்டல் திட்டங்களும் சகலருக்கும் மின்சாரம் என்ற நிகழ்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்கள் வர்த்தக ரீதியில் சாத்தியமற்றதாக வரும்போது, முதலீடு அல்லது செயற்பாட்டு ஆதரவு ஊடாக இலங்கை அரசாங்கம் இ.மி.ச. இற்கு தொடர்ந்தும் இழப்பீட்டை வழங்க வேண்டும்.

இலங்கை முழுவதையும் மின்மயப்படுத்துகின்ற இ.மி.ச. இன் நிரற்படுத்தப்பட்ட முடிவுடன், நுகர்வோரின் இதயங்களையும் மனங்களையும் வெல்வதற்காக இ.மி.ச. இனால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதன் மீது இ.மி.ச. அதன் கவனத்தைத் திருப்பியுள்ளது. இ.மி.ச. இனை அதிக நுகர்வோர் நேய நிறுவனமாக மாற்றுவதை ஊக்குவிக்க, புதிய வாடிக்கையாளர் சேவை முயற்சிகளின் பட்டியல் அடையாளங் காணப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ள மற்றும் பணிமிகுதியால் நெமின்மையைக் கொண்டுள்ள (பிஸியான) நவீன நுகர்வோரை இலக்காகக் கொண்டு பல கையடக்கத் தொலைபேசி மற்றும் இணைய அடிப்படையிலான சேவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் சேவையில் இ.மி.ச. இன் பிரதான வாடிக்கையாளர் இடைமுக ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இ.மி.ச. ஒரு பெரிய பயிற்சி இயக்கத்தையும் தொடங்கியுள்ளது.

## 1.1 புதிய வாடிக்கையாளர் சேவை முயற்சிகள்

**சேவைக் கோரிக்கையும் முறைப்பாட்டைக் கையாளலும் :**

- இ.மி.ச. அலுவலகங்களுக்குச் செல்லாது, வாடிக்கையாளர்கள் நிகழ்நிலையில் (ஒன்லைனில்) தமது சேவைத் தேவைகளை பெற்றுக்கொள்ள உதவும் வகையில் புதிய முழுமையான அம்சங்கள் அடங்கிய *CEBCare* என்ற *இணைய வழிமுறையொன்று* அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் புதிய இணைய வழிமுறை ஊடாக வாடிக்கையாளர்கள் புதிய மின் இணைப்புக்காக விண்ணப்பித்தல், சேவை மாற்றங்களுக்காக கோரிக்கை செய்தல், கட்டணப் பட்டியல் விபரங்களைப் பரிசீலித்தல், நிகழ்நிலையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், மின் தடை பற்றிய முறைப்பாடுகளைச் செய்தல் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மின் தடங்கல்களின் விவரங்களை நிகழ்நிலையில் பரிசோதித்தல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும்.
- *CEBAssist மின் தடங்கல் திட்டமிடல் முறைமை* ஆனது வெவ்வேறு மின் விநியோகக் கிளைகள் சம்பந்தப்பட்டுள்ள பராமரிப்பு மற்றும் மின் தடங்கல் திட்டமிடல் செயற்பாடுகளை டிஜிடல் மயப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மின் தடங்கலின் அளவு மற்றும் கால எல்லையை உத்தமமாக்குவதை இயலச் செய்வதற்கும் அதனால் பாதிப்புக்குள்ளாகும் வாடிக்கையாளர்களுக்கு அது பற்றி முன்கூட்டியே குறுஞ்செய்தி மற்றும் ஏனைய *CEBCare* தொடுநிலைகள் (touchpoints) ஊடாக அறிவிப்பதற்கும் இ.மி.ச. இற்கு உதவுகிறது.
- வளப் பயன்பாட்டை உத்தமமாக்குவதற்காகவும் சேவைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் மெய்நிகர் அழைப்பு நிலையமொன்றுடன் சகல 13 மாகாண அழைப்பு நிலையங்களையும் ஒன்றிணைப்பதற்காக *ஒன்றிணைந்த அழைப்பு நிலையத் தீர்வு (Unified Call Center Solution)* அறிமுகப்படுத்தப்பட்டது. மரபார்ந்த முகவர் பதிலளிப்புத் தெரிவுக்கு மேலதிகமாக, தன்னியக்க குரல் பதிலளிப்பு (AVR), ஊடாடும் குரல் பதிலளிப்பு (IVR) மற்றும் தன்னியக்க முறைப்பாடு பதிவுசெய்யும் வசதி ஆகியவற்றை வழங்குவதற்காக ஒன்றிணைந்த அழைப்பு நிலையத் தீர்வானது CEBAssist தீர்வுகளுடன் தடையின்றி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்றிணைக்கப்பட்ட தீர்வானது 16 செக்கன் என்ற சராசரி காத்திருப்பு நேரத்துடனும் 45 செக்கன் என்ற உச்சப் பாவனை நேர காத்திருப்பு நேரத்துடனும் நாளொன்றுக்கு சராசரியாக 25,000 அழைப்புகளைக் கையாளும் இயலுமையை இ.மி.ச. இற்கு வழங்குகிறது.

- தொலைத்தொடர்பு சேவை வழங்குநர் மின்வலு கண்காணிப்பு முறைமைகளை CEBAssist தீர்வுடன் ஒன்றிணைப்பதற்கு *CEBAssist நிறுவன மின் தடங்கல் வழிமுறை (CEBAssist Corporate Electricity Interruption Portal)* அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வழிமுறை ஆனது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு மின்சாரத் தடங்கல்கள் பற்றிய முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ள மின் தடங்கல்கள் பற்றிய அட்டவணையைப் பெற்றுக் கொள்வதற்கும் API வழியாக CEBAssist தீர்வுடன் தொடர்பு கொள்ள உதவுகிறது.

**மானியிடலும் கட்டணப் பட்டியலிடலும் :**

- மானி வாசிப்பாளர்கள் களத்தில் மானி வாசிப்புகளைச் சேகரித்து அங்கிருந்தபடியே நிகழ்நிலையில் மானி வாசிப்புகளை இற்றைப்படுத்துவதற்காக *MeterAssist* என்ற கையடக்கத் தொலைபேசிச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இது மத்திய கட்டணப் பட்டியலிடல் முறைமைக்கு வாசிப்புகளை இற்றைப்படுத்துவதற்கு எடுக்கின்ற முந்துறு நேரத்தைக் குறைப்பதையும் வாடிக்கையாளர்களுக்கு துல்லியமான கட்டணப் பட்டியல் தகவல்களை வழங்குவதையும் நோக்காகக் கொண்டதாகும்.
- நுழைவுவழி பூட்டப்பட்டிருத்தல் மற்றும் மதிப்பீடு செய்த வாசிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் குறுஞ்செய்தி மற்றும் CEBCare செயலி ஆகியவற்றின் ஊடாக வாடிக்கையாளர்களை விழிப்படையச் செய்ய *CEBAssist நிகழ்நிலை வாசிப்பு முறைமை (CEBAssist Online Meter Reading system) இ.மி.ச. இற்கு உதவுகிறது.* அத்துடன், ஆகக்குறைந்த மானி வாசிப்பு மற்றும் கட்டணப் பட்டியலின் பெறுமதி ஆகியன பற்றி வாடிக்கையாளர்களுக்கு விழிப்பூட்டுவதற்கும் இது வசதியளிக்கிறது.
- பிரதேச அலுவலகங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களில் தொழிலாளர்களைக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற கைமுறையான கட்டணப் பட்டியலிடல் செயன்முறையை முழுமையாக டிஜிடல்மயப்படுத்துவதற்காக CEBAssist நிகழ்நிலை கட்டணப் பட்டியலிடல் முறைமை *(CEBAssist Online Billing System)* அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமையானது வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்ற கட்டணப் பட்டியல் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் தொடர்புடைய கணக்குச் சீராக்கங்களுக்கு மிகக் குறைந்த நேரத்திலேயே தீர்வு காண்பதற்கும் அது நிகழும் நேரத்திலேயே கணக்குகளை இற்றைப்படுத்துவதற்கும் இ.மி.ச. இற்கு உதவுகிறது.
- வருமான முகாமை மற்றும் மின் துண்டிப்பு / மீளிணைப்புச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக *CEBAssist - DisconnectionAssist* முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமை, துல்லியமான இயல்புநிலைப் பகுப்பாய்வு மற்றும் தொந்தரவில்லாத மின் துண்டிப்பு / மீளிணைப்பு செயற்பாட்டை நிகழ் நேர கொடுப்பனவுத் தகவல்களுடன் உறுதிப்படுத்துவதற்கு உதவுகிறது.
- வாடிக்கையாளர்கள் மின்மானி வாசிப்புகளை டிஜிடல் முறையில் வாசிக்கவும் இலத்திரனியல் கட்டணப் பட்டியலை (eBill) மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி ஊடாக அனுப்புவதற்கும் மேல் மாகாணத்தில் *CEBAssist – திறன் மானி வாசிப்பு முறைமை (CEBAssist - Smart Meter Reading System)* அறிமுகப்படுத்தப்பட்டது.
- வாடிக்கையாளர்களின் பிந்தைய கணக்கு மீதிகள் பற்றி வங்கிகளுக்குத் தெரிவிப்பதற்காக *தன்னியக்க கட்டணப் பட்டியல் தீர்ப்பனவு (Automatic Bill Settlement)* வசதி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இதற்குப் பதிலாக, வங்கிகள் நிலையியற் கட்டளை ஏற்பாடுகள் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு கட்டணப் பட்டியல் தீர்ப்பனவுகளுக்கு வசதியளிக்கின்றன.

**கொடுப்பனவு:**

- உள்நுழைவு இல்லாத உடனடிக் கொடுப்பனவுத் தெரிவுகளுடன்கூடிய பல்தேவைக் கொடுப்பனவு வழிமுறைகளை அறிமுகப்படுத்தும் நிகழ்நிலைக் கொடுப்பனவு முறைமை *(Online Payment System)* புதுப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, *CEBCare* கையடக்கத் தொலைபேசிச் செயலிக்கான நிகழ்நிலை கொடுப்பனவு வசதியும் விரிவாக்கப்பட்டது.
- பல வங்கிகளும் சிறப்பங்காடிகளும் மூன்றாம் தரப்பு மூலம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுச் சேகரிப்பு முறைமையினுள் *(Third-Party Payment Collection System)* உள்வாங்கப்பட்டன. அத்துடன், மூன்றாம் தரப்பு மூலம் சேகரிக்கப்படும் கொடுப்பனவுகளை, நிகழ் நேரத்திலேயே இற்றைப்படுத்திக்கொள்வதற்கு இடமளிக்குமுகமாக மூன்றாம் தரப்பு கொடுப்பனவுச் சேகரிப்பு முறைமை புதுப்பிக்கப்பட்டது.
- வாடிக்கையாளர்கள் தற்போது இலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பிரதான கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவுத் தளங்களைப் பயன்படுத்தி தமது மின்சாரப் பட்டியல் கொடுப்பனவுகளைச் செய்துகொள்ள முடியும். வாடிக்கையாளரின் சௌகரியத்திற்கு ஏற்றாற்போல

*CEBCare* என்ற செயலியின் ஊடாகவும் கொடுப்பனவுகளைச் செய்துகொள்ள முடியும். சகல பிரதான கைடக்கத்தொலைபேசி கொடுப்பனவுத் தளங்களும் தற்போது ஒருங்கிணைந்த வாடிக்கையாளர் சரிபார்ப்பு மற்றும் இ.மி.ச. வாடிக்கையாளர்களின் கட்டணப் பட்டியலைத் தீர்ப்பனவு செய்யும் வசதி ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றன. இது இ.மி.ச. அலுவலகங்களுக்குச் செல்லாது தமது கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு மிகப் பெரிய டிஜிடல் தொடு நிலைகளை வழங்குகிறது.

- மக்கள் வங்கியின் எந்தவொரு கிளை மூலமும் PIV கொடுப்பனவுகளை ஏற்றுக் கொண்டு, ஏற்றுக் கொள்ளும் நேரத்திலேயே அதனை மத்திய முறைமையில் நிகழ்நிலைப்படுத்துவதற்காக *கொடுப்பனவுச் சேகரிப்பு விநியோக முறைமை (Payment Collection Distribution System)* மற்றும் *PIV முறைமை (PIV System)* என்பன புதுப்பிக்கப்பட்டன. இந்தப் புதுப்பிக்கப்பட்ட முறைமைகள், இ.மி.ச. அலுவலகங்களுக்கு வருகை தராது SMS ஊடாக PIV தொகையைப் பெற்றுக் கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட PIV கொடுப்பனவை எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகச் செலுத்துவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு வசதியளிக்கிறது.

### 1.2 மின்சாரத்திற்கான கேள்வி

2021 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில், மின்சாரத்திற்கான கேள்வி 7.10% இனால் அதிகரித்திருந்த அதே வேளை இந்தக் காலப் பகுதியில் பதிவான உயர்ந்தபட்ச கேள்வியாக 2,801.62 MW இருந்தது. இது கடந்த ஆண்டில் 2,717.46 MW ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த 6 மாத காலப்பகுதியில் 8,120 GWh பிறப்பாக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் 7,443 GWh விற்பனை செய்யப்பட்டிருந்தது.

ஆண்டின் முதல் பாதி காலப்பகுதியில் பிறப்பாக்கம் செய்யப்பட்ட மொத்த சக்தி (8,120 GWh) இல், 33% ஆனவை நீர்மின் பிறப்பாக்கத்தில் (சிறியளவு நீர்மின் உட்பட) இருந்து கிடைத்திருந்தது. நிலக்கரி மூலமான மின் பிறப்பாக்கம் 38% ஆகக் காணப்பட்டது. அனல் எண்ணெய்யானது மொத்த சக்திப் பிறப்பாக்கத்தில் 22% பங்களிப்பை வழங்கியிருந்தது. ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்கள் (சிறியளவு நீர்மின் தவிர்ந்த) 7% பங்கினைக் கொண்டிருந்தன. ஒப்பீட்டு ரீதியில், 2020 மே மாத இறுதியில் நீர்மின் பிறப்பாக்கத்திலிருந்தான பங்களிப்பு 26% ஆக இருந்தது.

### 1.3 2022 ஆம் ஆண்டிற்குத் தேவையான மின்சாரத்திற்கான எதிர்வுகூறல்

வரைவு செய்யப்பட்ட இ.மி.ச. நீண்ட கால மின் பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2022 - 2046 இன் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்காக எதிர்வுகூறப்பட்ட மின்சாரத்திற்கான கேள்வி பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

| ஆண்டு | கேள்வி | | மின் பிறப்பாக்கம் | | உச்சப் பாவனை |
|---|---|---|---|---|---|
| | (GWh) | வளர்ச்சி வீதம் (%) | (GWh) | வளர்ச்சி வீதம் (%) | (MW) |
| **2022** | 16,741 | 5.8% | 18,203 | 5.7% | 2,967 |

### 1.4 மின்வலுப் பிறப்பாக்கம்

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான அனல் மற்றும் நீர் மின்வலு ஆலைகளை இயக்கிப் பராமரிப்பதற்கு இலங்கை மின்சார சபையின் மின் பிறப்பாக்கல் பிரிவு பொறுப்பானதாகும். 1,383 MW மொத்தக் கொள்ளளவைக் கொண்டு நிறுவப்பட்ட 17 பெரிய நீர் மின்வலு ஆலைகளும், 900 MW கொள்ளளவைக் கொண்ட ஒரு (01) நிலக்கரி எரிப்பு மின்வலு ஆலையும் மொத்தமாக 604 MW கொண்ட ஏழு பெரியளவான எண்ணெய் எரிப்பு மின்வலு ஆலைகள் மற்றும் ஒவ்வொன்றும் 1 MW கொண்ட 50 MW எண்ணெய் எரிப்பு மின்வலு ஆலைகளையும் உள்ளடக்கி நிறுவப்பட்ட கொள்ளளவு 654 MW இனைக் கொண்ட அனல் மின்வலு ஆலைகளும் 31.05 MW கொண்ட மன்னார் காற்றாலைப் பூங்காவும் மின் பிறப்பாக்கல் சொத்துக்களில் உள்ளடங்குகின்றன.

இ.மி.ச. யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சூழவுள்ள தீவுகளில் தனிமைப்படுத்தப்பட்ட வலையமைப்புகளில் ஒரு சில மின்வலு ஆலைகளையும் இயக்குகிறது. எனவே 2021 யூன் 30 இல் இ.மி.ச. இற்குச் சொந்தமான மின்வலு ஆலைகளில் நிறுவப்பட்டுள்ள மொத்தக் கொள்ளளவு 2,968 MW ஆக இருந்தது.

2021 யூன் 30 ஆந் திகதியில் இ.மி.ச. மற்றும் தனியார் மின்வலு உற்பத்தியாளர்களின் மின் பிறப்பாக்கம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2021 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த 06 மாதங்களுக்கு; மொத்த மின் பிறப்பாக்கம் 8,120GWh, இதில் 26% ஆனவை பெரியளவான நீர்மின் பிறப்பாக்கத்திலிருந்து வந்திருந்த அதே வேளை நிலக்கரி மின்வலுப் பிறப்பாக்கத்தின் பங்கு 38% ஆக இருந்தது. அனல் எண்ணெய்யானது மொத்த சக்திப் பிறப்பாக்கத்தில் 22% பங்களிப்பை வழங்கியிருந்தது. ஏனைய மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்கள் 14% பங்கினைக் கொண்டிருந்தன. ஒப்பீட்டு ரீதியில், 2020 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெரியளவான நீர்மின் பிறப்பாக்கத்தின் பங்களிப்பு 21% ஆக இருந்தது.

| விபரம் | மின் பிறப்பாக்கம் (GWh) |
|---|---|
| **இ.மி.ச.** நீர்மின் | 2,151 |
| அனல்மின் - நிலக்கரி | 3,091 |
| அனல்மின் - எண்ணெய் | 700 |
| காற்றாலை | 100 |
| **IPP** NCRE (சிறியளவு நீர்மின்) | 576 |
| அனல் | 1,056 |
| காற்றாலை | 120 |
| சூரியகலம் (மின்தொகுப்புக்கு இணைக்கப்பட்ட) | 68 |
| சூரியகலம் (மேற்கூரை) | 179 |
| தாவரமூலம், உயிர்த் திணிவு, மாநகரக் கழிவு | 79 |
| **மொத்தம்** | **8,120** |

### 1.5 மின் பிறப்பாக்கல் கொள்ளளவை விரிவாக்குதல்

புதிய மின் பிறப்பாக்கல் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலானது இ.மி.ச. இன் அங்கீகரிக்கப்பட்ட நீண்ட கால மின் பிறப்பாக்க விரிவாக்கத் திட்டத்தில் (2018 – 2037) எதிர்வு கூறப்பட்டதைப் போன்று முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

மின் பிறப்பாக்க விரிவாக்கச் செயற்றிட்டங்களின் தற்போதைய நிலை பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு

## 2. அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் முன்னேற்றம்

### 2.1 நீர் மின்வலு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

#### உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்



புகுல்பொல அணையின் வான்வழித் தோற்றம்

உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திச் செயற்றிட்டமானது மின்வலு மற்றும் சக்தி அமைச்சுடன் இணைந்து நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மின்வலு ஆலையின் மதிப்பிடப்பட்ட கொள்ளளவு 120 MW (2 x 60 MW) என்பதுடன் எதிர்பார்க்கப்படும் வருடாந்த சக்தி உற்பத்தி 290 GWh ஆகும்.

- ஆலைக் கொள்ளளவு : 120 MW
- மொத்த செயற்றிட்டக் கிரயம் : 530 மில்லியன் அமெரிக்க டொலர்
- எதிர்பார்க்கப்படும் வருடாந்த சக்தி வெளியீடு : 290 GWh
- பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2021 செப்ரெம்பர்
- தற்போதைய முன்னேற்றம் : மொத்த பௌதிக முன்னேற்றம் – 96.16%

### விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம்



விரிநில மின்வலு இல்லம்

விரிநில நீர் மின்வலுச் செயற்றிட்டம் என்பது தற்போதிருக்கின்ற பொல்பிட்டிய மின்வலு நிலையத்தில் நீரோட்டத்தில் உள்ள நீர்மின் ஆற்றலை அறுவடை செய்வதை நோக்காகக் கொண்டு களனி ஆற்றில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஒரு நீரோட்ட வகைச் செயற்றிட்டமாகும். இந்தச் செயற்றிட்டம் 35 MW நிறுவப்பட்ட கொள்ளளவை கொண்டிருக்கும் என்பதுடன் வருடாந்தம் 126 GWh மின் சக்தியைப் பிறப்பாக்கம் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

விரிநில மின்வலுச் செயற்றிட்டமானது இலங்கையில் தூய அபிவிருத்திப் பொறிமுறைப் (CDM) பதிவினைப் பெற்றுக் கொண்டுள்ள முதலாவது பெரிய அளவிலான நீர் மின்வலு ஆலை ஆகும்.

- ஆலைக் கொள்ளளவு : 35 MW
- மொத்த செயற்றிட்டக் கிரயம் : சீன கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி (ICBC) 69.724 மில்லியன் அமெரிக்க டொலர் (85%)
  : ஹட்டன் நஷனல் வங்கி, இலங்கை (HNB) 12.304 மில்லியன் அமெரிக்க டொலர் (15%)
- எதிர்பார்க்கப்படும் வருடாந்த சக்தி வெளியீடு : 126 GWh
- பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2021 செப்ரெம்பர்
- தற்போதைய முன்னேற்றம் : மொத்த பௌதிக முன்னேற்றம் – 90%
  மொத்த நிதிசார் முன்னேற்றம் – 71%

### மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டம்

மொரகொல்ல நீர் மின்வலுச் செயற்றிட்டத்தின் நிருமாணத்திற்காக கடன் இல. 3146 (SF)/ 3147 SRI – "பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (கட்டம் 1) இன் கீழ் இந்தச் செயற்றிட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 125 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியிருந்தது.

- ஆலைக் கொள்ளளவு : 30.5 MW
- மொத்த செயற்றிட்டக் கிரயம் : வெளிநாட்டு நிதியுதவி 113.86 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் உள்நாட்டு நிதியுதவி (இ.மி.ச.) 3,958 மில்லியன் ரூபா
- பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2023 செப்ரெம்பர் 15
- தற்போதைய முன்னேற்றம் : ஒட்டுமொத்த முன்னேற்றம் 16.5%

## 2.2 இ.மி.ச. அனல் மின்வலு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

### திரவநிலை இயற்கை எரிவாயுச் செயற்றிட்டம் (LNGP)

கொழும்பைத் தளமாகக் கொண்ட மின்வலு ஆலைகளுக்கு இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துவதற்கான அரச - தனியார் பங்குடமைச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2024 பெப்ரவரி
தற்போதைய முன்னேற்றம் : 26%

### 130 MW எரிவாயு விசையாழி மின்வலு ஆலை, களனிதிஸ்ஸ

இந்த களனிதிஸ்ஸ புதிய எரிவாயு விசையாழிச் செயற்றிட்ட அலகின் நோக்கமானது கொழும்பு நகருக்கு அவசரகால நிலைமைகளிலும் உச்சப் பாவனை நேரங்களிலும் மின்சார வழங்கலை மீளமைப்பதற்காக களனிதிஸ்ஸ மின்வலு நிலையத்தில் தற்போதிருக்கின்ற Frame V எரிவாயு விசையாழிகளை புதிய எரிவாயு விசையாழிகளைக் கொண்டு மாற்றீடு செய்வதாகும். எவ்வாறாயினும், செயற்றிட்ட முகாமைத்துவ அலகானது மின் பிறப்பாக்கல் பிரிவின் கீழ் மீள்கட்டமைக்கப்பட்டுள்ளது.

- ஆலைக் கொள்ளளவு : 130 MW (3 அல்லது 4 அலகுகள்)
- மொத்த செயற்றிட்டக் கிரயம் : 90 மில்லியன் அமெரிக்க டொலர்
- பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2023
- நிதியுதவி : வழங்குநர்கள் கடன் வசதி
- தற்போதைய முன்னேற்றம் : 2021 ஏப்ரலில் விலைமனு மிதக்க விடப்பட்டதுடன் அது 2021 செப்ரெம்பரில் மூடப்படும்.

## 2.3 தனியார் துறையினர் மூலமான அனல் மின்வலு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

### குறைநிரப்பு மின்வலு ஆலைகள்

வாழைச்சேனையிலுள்ள 24 MW மின்வலு ஆலை (V பவர் ஹோல்டிங் லிமிட்.) 2021 அக்டோபர் வரையான 6 மாத காலப்பகுதிக்கு இயங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### முதலாவது 300 MW இயற்கை எரிவாயு எரிப்பு இணைந்த சுற்றோட்ட மின்வலு ஆலை – கெரவலப்பிட்டிய

- ஆலைக் கொள்ளளவு : 300 MW
- பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2024 ஏப்ரல்
- தற்போதைய முன்னேற்றம் : 2021-07-19 இல் PPA கைச்சாத்திடப்பட்டது.

### இரண்டாவது 300 MW LNG இணைந்த சுற்றோட்ட மின்வலு ஆலை – கெரவலப்பிட்டிய

- ஆலைக் கொள்ளளவு : 300 MW
- பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2024 அக்டோபர்
- தற்போதைய முன்னேற்றம் : RFP இற்கு 2021-06-21 இல் அழைப்பு விடுக்கப்பட்டதுடன் அதனை 2021-09-13 உடன் மூடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. காணியைப் பெறுவதற்கான செயன்முறை நடைபெறுகிறது.

### மூன்றாவது 300 MW LNG இணைந்த சுற்றோட்ட மின்வலு ஆலை – முத்துராஜவெல

- ஆலைக் கொள்ளளவு : 300 MW
- பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி : 2026
- தற்போதைய முன்னேற்றம் : காணியை அபிவிருத்தி செய்வதற்கான EIA பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பொது மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக EIA அறிக்கை திறக்கப்பட்டுள்ளது. காணியை அபிவிருத்தி செய்யும் பணிகள் அடுத்த இரு ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளப்படும்.
  இ.மி.ச. இற்கும் NTPC இற்குமிடையிலான JV உடன்படிக்கை ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளது. JV கம்பனியின் அமைப்பக விதிகள் இறுதிசெய்யப்பட்டு வருகிறது.

## 2.4 தனியார் துறையினர் மூலமான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

சிறியளவான நீர்மின், காற்றாலை, சூரியகலம், உயிர்த்திணிவு போன்ற மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் {மரபுசாரா மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE)} புதிய மூலங்களிலிருந்து பிறப்பிக்கப்படும் மின்சாரம், நியமப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகள் ஊடாக மின்தொகுப்பிற்கு உள்வாங்கப்படுகிறது. இத்தகைய NCRE செயற்றிட்டங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

### NCRE துறையின் செயலாற்றுகை (2021 யூன் 30 வரை)

2021 யூன் 30 இல் உள்ளவாறு இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட NCRE மின்வலுச் செயற்றிட்டங்களின் விபரங்கள் கீழ்வருமாறு :

| செயற்றிட்ட வகை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
|---|---|---|
| சிறியளவு நீர் மின்வலு | 212 | **414** |
| காற்றாலை மின்வலு | 17 | **148** |
| உயிர்த்திணிவு – விவசாய மற்றும் கைத்தொழில் கழிவு மின்வலு | 04 | **13** |
| உயிர்த்திணிவு – தாவரமூல மின்வலு | 09 | **27** |
| மாநகரக் கழிவு மின்வலு | 01 | **10** |
| சூரியகல PV | 45 | **88** |
| **மொத்தம்** | **288** | **700** |

**NCRE துறைக்கான நிகழ்ச்சித் திட்டங்கள்**

2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இயக்குவதற்கான அதிகாரமளிக்க எதிர்பார்க்கப்படும் NCRE செயற்றிட்டங்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

| செயற்றிட்ட வகை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | கொள்ளளவு (MW) |
|---|---|---|
| சிறிய நீர் மின்வலு | 44 | **74** |
| உயிர்த்திணிவு – விவசாய மற்றும் கைத்தொழில் கழிவு மின்வலு | 01 | **02** |
| உயிர்த்திணிவு – தாவரமூல மின்வலு | 10 | **56** |
| உயிர்த்திணிவு – மாநகர திடக் கழிவு மின்வலு | 03 | **20** |
| சூரியகல PV | 55 | **73** |
| சூரியகல அனல் மின்வலு | 00 | **0** |
| காற்றாலை மின்வலு | 02 | **36** |
| மொத்தம் | 115 | 261 |

## 2.5 இ.மி.ச. மூலமான மின் பிறப்பாக்க அபிவிருத்திகள் பற்றிய சாத்தியவள ஆய்வுகள்

| உருப்படி இல. | செயற்றிட்ட விபரம் | நிதியுதவி அளிக்கும் முகவராண்மை | கிரயம் | பூர்த்தி | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| **01** | முதலாவது உந்தப்பட்ட சேமிப்பு நீர் மின்வலுச் செயற்றிட்டத்திற்கான (PSHP) முன் சாத்தியவள மற்றும் விபரமான சாத்தியவள ஆய்வுகள் | வெளிநாடு (ADB) + உள்நாடு | 385 மில்லியன் ரூபா | 2023 | 2021.08.03 ஆந் திகதி EOI (ஆர்வத்தை வெளிப்படுத்தல்) விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. |

## 2.6 நீர்ப்பாசன அமைச்சினால் விருத்தி செய்யப்பட்ட நீர் மின்வலுச் செயற்றிட்டங்கள்

### தல்பிட்டிகல நீர் மின்வலுச் செயற்றிட்டம்

- ஆலைக் கொள்ளளவு : 15 MW
- எதிர்பார்க்கப்படும் சராசரி வருடாந்த சக்தி : 52.4 GWh
- நிறைவடையுமென எதிர்பார்க்கப்படும் திகதி: 2024

### ஜின் கங்கை நீர் மின்வலுச் செயற்றிட்டம்

- ஆலைக் கொள்ளளவு : 20 MW
- எதிர்பார்க்கப்படும் சராசரி வருடாந்த சக்தி : 66 GWh
- நிறைவடையுமென எதிர்பார்க்கப்படும் திகதி: 2022

## 2.7 இ.மி.ச. மூலமான மின் பிறப்பாக்க புனரமைப்புச் செயற்றிட்டங்கள்

| 26 | சப்ரகமுவ | 2022 | ருவான்வெல்ல | குருகல்ல சந்தி DDLO தொடக்கம் டைகல (N004) வரை மறுசீரமைப்பு | S/C, Raccoon | 4.5km |
| 27 | சப்ரகமுவ | 2022 | ருவான்வெல்ல | மொரலிய (N003) தொடக்கம் ருவன்வெல்ல தோட்டம் (A056) வரை இடையிணைப்பு மார்க்கம் | S/C, Raccoon | 2.8km |
| 28 | சப்ரகமுவ | 2022 | ருவான்வெல்ல | வேரக பஸ்னாகொட (N025) தொடக்கம் மல்வனகந்த (N054) வரை இடையிணைப்பு மார்க்கம் | S/C, Raccoon | 3.2km |
| 29 | சப்ரகமுவ | 2022 | ருவான்வெல்ல | தற்போதிருக்கின்ற எபலபிட்டிய தாங்குசட்டத்தை 2 வெளிச்செல்லும் மின்னூட்டிகளுடன் மேம்படுத்தல் | 4-Pole Gantry | - |
| 30 | சப்ரகமுவ | 2022 | ருவான்வெல்ல | கொட்டியாகும்புற தாங்குசட்டத்தின் நிருமாணம் | 2SSBB | - |
| 31 | ஊவா | 2022 | மொணராகலை | தற்போதிருக்கின்ற Weasel மார்க்கத்தை Racoon மார்க்கமாக மாற்றுதல் (மஹாகொடயாய தொடக்கம் மாளிகாவில வரை) | - | 13.75km |
| 32 | ஊவா | 2022 | தியத்தலாவ | தற்போதிருக்கின்ற Weasel மின் மார்க்கத்தை Racoon மின் மார்க்கமாக மாற்றுதல் (ஹப்புத்தளை தொடக்கம் | - | 14.0km |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | கிளனோர் - ரத்கரவ்வ வரை) | | |
| 33 | ஊவா | 2022 | தியத்தலாவ | தற்போதிருக்கின்ற Weasel மின் மார்க்கத்தை Racoon மின் மார்க்கமாக மாற்றுதல் (லுணுவத்த MR gap தொடக்கம் பம்பரபன வரை) | - | 9.0km |
| 34 | ஊவா | 2022 | தியத்தலாவ | தற்போதிருக்கின்ற Weasel மின் மார்க்கத்தை Racoon மின் மார்க்கமாக மாற்றி, மறுவழியமைத்தல் (வெலிமடை தொடக்கம் போரலந்த வரை) | - | 10.0km |
| 35 | ஊவா | 2022 | மொணராகலை | வெல்லவாய தாங்குசட்டத்திற்கு மின்னூட்டிகளை இணைப்பதற்காக MV மின் மார்க்கத்தை மீள்-ஒழுங்குபடுத்தல் | - | 7km |
| 36 | ஊவா | 2022 | மொணராகலை | பிபில தாங்குசட்டத்திற்கு மின்னூட்டிகளை இணைப்பதற்காக MV மின் மார்க்கத்தை மீள்-ஒழுங்குபடுத்தல் | - | 5km |
| 37 | ஊவா | 2022 | பதுளை | பதுளை நகர மின்னூட்டியின் ஒரு பகுதியை MV ABC இற்கு மாற்றுதல் | - | 3.5km |
| 38 | ஊவா | 2022 | தியத்தலாவ | ஹப்புத்தளை தாங்குசட்டத்தின் மேம்படுத்தல் – 4ARs, 1LBS | - | - |
| 39 | WPS II | 2022 | அவிசாவளை | PD027 தொடக்கம் PD034 வரையான Racoon மார்க்கத்தை இணைத்தல் | - | - |
| 40 | WPS II | 2022 | அவிசாவளை | HN027 தொடக்கம் HN029 வரை தற்போதிருக்கின்ற 33 kV weasel மின்கம்ப மார்க்கத்தை சகல வழிப்பாதைகளுடனும் Racoon மின்கம்ப மார்க்கமாக மாற்றுதல் | - | - |
| 41 | WPS II | 2022 | அவிசாவளை | 46AVI010 தொடக்கம் 46AVD009 வரையான HT மார்க்கத்தை மறுசீரமைப்புச் செய்தல் | - | - |
| 42 | WPS II | 2022 | அவிசாவளை | 46HND006 அருகிலுள்ள பகத்கமவுக்கான முனமலே தாங்குசட்டம் - ரோயல் பீப்பாய்களுக்கான CR பணிகளுடன் | - | - |
| 43 | WPS II | 2022 | அவிசாவளை | PD030 தொடக்கம் மீகொட மின்னூட்டி வரையான இணைப்பு மின் மார்க்கத்தின் நிருமாணம் | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 44 | WPS II | 2022 | அவிசாவளை | 33 kV Racoon மின் கம்ப மார்க்கத்தின் இடமாற்றம் (AVSM380) | - | - |
| 45 | WPS II | 2022 | அவிசாவளை | AV128 தொடக்கம் HN005 வரையான இணைப்பு மின் மார்க்கத்தின் நிருமாணம் | - | - |
| 46 | WPS II | 2022 | அவிசாவளை | PD025 தொடக்கம் PD026 வரை தற்போதிருக்கின்ற Weasel மின்மார்க்கத்தை Racoon மின் மார்க்கமாக மாற்றுதல் | - | - |
| 47 | WPS II | 2022 | அவிசாவளை | ரோயல் பீப்பாய்கள் வடிப்பகங்கள் வரை விரிவாக்குவதற்காக KOS F01, Kos F6 இன் ஆளியிடல் ஒழுங்கமைப்பு மாற்றம் | - | - |
| 48 | WPS II | 2022 | பண்டாரகம | ரைகம தாங்குசட்டம் தொடக்கம் மில்லானியா வரை 33 kV S/C மின்கம்ப மார்க்கத்தின் நிருமாணம் | - | - |
| 49 | WPS II | 2022 | பண்டாரகம | எலமோதரவிற்கு அருகிலுள்ள WPS1 மின்மாற்றிகளை உள்ளீர்ப்பதற்கான SYA முன்மொழிவுகளை தொடர்புபடுத்தல் | - | - |
| 50 | WPS II | 2022 | பண்டாரகம | BG035 தொடக்கம் 65BGL007 வரை தற்போதுள்ள Racoon மின் மார்க்கத்தை Lynx ஆக மாற்றுதல் | - | - |
| 51 | WPS II | 2022 | ஹோமாகம | வளவ்வ DDLO தொடக்கம் ஹபன்ஹெனவத்த, HM - 125, புகையிரதக் கடவை வரை தற்போதுள்ள மின் மார்க்கங்களை இடமாற்றுதல், புனரமைப்புச் செய்தல் மற்றும் மறுசீரமைத்தல் | - | - |
| 52 | WPS II | 2022 | ஹோமாகம | மத்தேகொட வீதி தொடக்கம் மாகும்புற ABS வரை தற்போதுள்ள Racoon மின் மார்க்கத்தை Lynx ஆக மாற்றுதல் | - | - |
| 53 | WPS II | 2022 | ஹோமாகம | ஹோமாகம சந்தி தொடக்கம் தயானந்த DDLO வரையுள்ள Racoon மார்க்கத்தை Lynx ஆக மாற்றுதல் | - | - |
| 54 | WPS II | 2022 | ஹோமாகம | மாகும்புற தாங்குசட்டம் தொடக்கம் 41HML001 வரை தற்போதுள்ள Racoon மின் மார்க்கத்தை Lynx மார்க்கமாக மாற்றுதல் | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 55 | WPS II | 2022 | ஹோமாகம | PN139 தொடக்கம் PN066 வரை புதிய 33 kV Racoon இணைப்பு மின்கம்ப மார்க்கத்தை நிருமாணித்தல் - முன்மொழிவின் திருத்தம் | - | - |
| 56 | WPS II | 2022 | ஹொரணை | சப்ரகமுவவுக்கு ஏராளமான மின்கோபுர மார்க்கங்களைப் பயன்படுத்தல் மற்றும் இங்கிரிய CSC (கற்பனை) இற்குச் சொந்தமான உபமின் நிலையங்களை இணைத்தல் | - | - |
| 57 | WPS II | 2022 | ஹொரணை | HR059 தொடக்கம் HR130 வரை தற்போதுள்ள Weasel மார்க்கத்தை Racoon ஆக மாற்றுதல் | - | - |
| 58 | WPS II | 2022 | ஹொரணை | Hor. F2, Hor. F5 மற்றும் Hor. F7 இன் மீள் ஒழுங்குபடுத்தல் | - | - |
| 59 | WPS II | 2022 | ஹொரணை | HR051 தொடக்கம் HR131 வரையான புதிய 33 kV இணைப்பு மார்க்கத்தின் நிருமாணம் | - | - |
| 60 | WPS II | 2022 | ஹொரணை | HR163 தொடக்கம் பாணந்துறை வீதி வரையான இணைப்பு மார்க்கத்தின் நிருமாணம் | - | - |
| 61 | WPS II | 2022 | ஹொரணை | HR189 தொடக்கம் HR011 வரையான இணைப்பு மார்க்கத்தின் நிருமாணம் | - | - |
| 62 | WPS II | 2022 | ஹொரணை | ரைகம தொடக்கம் நர்துபான வரையான 33 kV Lynx மார்க்கத்தின் நிருமாணம் | - | - |
| 63 | WPS II | 2022 | ஹொரணை | HR215 தொடக்கம் HR056, HR014 வரையுள்ள Weasel இனை Racoon ஆக மாற்றுதல் | - | - |
| 64 | WPS II | 2022 | ஹொரணை | HR029 தொடக்கம் HR078, HR103, 102, HR160 வரையுள்ள Weasel இனை Racoon ஆக மாற்றுதல் | - | - |
| 65 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | புதிய பெலவத்த PSS இற்கான கிடைமட்ட தடைநீக்கத்தைப் பராமரிப்பதற்காக SJP F1, SJP F2 ஆகியவற்றை இடமாற்றுதல் | - | - |
| 66 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | பாலந்துன தொடக்கம் அக்கோனவெல தாங்குசட்டம் வரை Racoon மார்க்கத்தை Lynx ஆக மாற்றுதல் | - | - |
| 67 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | சுபூதிபுர வீதியிலுள்ள 33 kV OH மார்க்கத்தை 11 kV OH மார்க்கமாக மாற்றுதல் (S/Ss உள்ளடங்கலாக) | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 68 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | உடுமுல்ல வீதியிலுள்ள 33 kV OH மார்க்கத்தை 11 kV OH மார்க்கமாக மாற்றுதல் (S/Ss உள்ளடங்கலாக) | - | - |
| 69 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | உடுமுல்ல வீதிக்கும் சுபூதிபுர வீதிக்குமிடையில் 11 kV இடையிணைப்பை நிருமாணித்தல் | - | - |
| 70 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | பெலவத்த சந்தியிலிருந்து தலவத்துக்கொட பக்கமாக உள்ள 11 kV உபமின் நிலையங்களை 33 kV உபமின் நிலையங்களாக மாற்றுதல் | - | - |
| 71 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | வல்பொல சந்தியிலிருந்து மந்தாவில நோக்கிய முல்லேரியா வைத்தியசாலையில் உட்பக்கமாக அமைந்துள்ள 33 kV HT மின் மார்க்கத்தை வேறிடத்திற்கு மாற்றுதல் - 0.516 km | - | - |
| 72 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | UGB முன்மொழிவான சுகுறுபாய தொடக்கம் செத்சிறிபாய (UG + OH) வரையான 33 kV மார்க்கத்தின் நிருமாணம் | - | - |
| 73 | WPS II | 2022 | ஹொரணை | தற்போதுள்ள மின்கோபுர மார்க்கம் + தற்போதுள்ள சாத்தியமான வீதிகளுடன் சேர்த்து ஹந்துபெல்பொல தொடக்கம் பேறுகெட்டிய வரை தற்போதுள்ள Racoon SC மின்கோபுர மார்க்கத்தை Lynx மார்க்கமாக மாற்றுதல் | - | - |
| 74 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | அம்பத்தல தாங்குசட்டம் தொடக்கம் 42WLA009 வரையுள்ள Racoon மார்க்கத்தை Lynx ஆக மாற்றுதல் | - | - |
| 75 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 42MBR003 தொடக்கம் 42MBD043 வரையுள்ள Racoon மார்க்கத்தை Lynx ஆக மாற்றுதல் | - | - |
| 76 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | கிம்புலாவெலவில் புதிய தாங்குசட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் இரண்டு 33kV/3C/XLPE/240 sqmm UG கம்பி வடங்களின் பதிப்பு | 33kV/3C/XLPE/240 sqmm UG | 0.5 km |
| 77 | WPS II | 2022 | பண்டாரகம | பலட்டன் GSS தொடக்கம் ரைகம – கலபாத்த வரை 33 kV Lynx DC மின்கோபுர மார்க்கத்தை நிருமாணித்தல் | 33kV Double Cct Lynx Tower | 13km |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Line | |
| 78 | WPS II | 2022 | பண்டாரகம | ரைகம கைத்தொழில் வலயத்தில் 3SSBB தாங்குசட்டம் | 3SSBB | - |
| 79 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | முன்மொழியப்பட்ட மாலபே GSS தொடக்கம் முன்மொழியப்பட்ட சந்திரிகா குமாரதுங்க மாவத்தைக்கு அருகிலுள்ள தாங்குசட்டம் வரை 33 kV இரட்டை cct Lynx மின்கம்ப மார்க்கத்தை நிருமாணித்தல் | 33kV Double CCt Lynx Tower Line | 0.5km |
| 80 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் 2SSBB தாங்குசட்டத்தைச் செயற்படுத்தல் | 2SSBB | - |
| 81 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | முன்மொழியப்பட்ட மாலபே GSS தொடக்கம் கொஸ்வத்தை PSS இனை நோக்கி புதிய 33 kV Lynx மார்க்கத்தை நிருமாணித்தல் | 33kV Single Cct Lynx Pole Line | 4.7 km |
| 82 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | மாலபே GSS தொடக்கம் மாலபே நகர் வரை புதிய மின்னூட்டியின் நிருமாணம் | 33kV Single Cct Lynx Tower Line | 1 km |
| 83 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | மாலபே GSS தொடக்கம் அத்துருகிரிய F2 வரை ஒரு மாற்று வழியாக புதிய இணைப்பை நிருமாணித்தல் | 33kV Single Cct Lynx Tower Line | 1 km |
| 84 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | US செயற்றிட்டம் காரணமாக 11 kV வலையமைப்பில் இருந்து செறிவான Lynx மார்க்கத்தைப் பயன்படுத்தி SJP GSS இலிருந்து கொஸ்வத்த PSS வரை மின்வலு வழங்கலை ஒழுங்குபடுத்தல் | 33kV Single Cct Lynx Pole Line | 1.5 km |
| 85 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் முன்மொழியப்பட்டுள்ள தாங்குசட்டத்தில் இருந்து IT பூங்கா வரை 33 kV இரட்டை cct Lynx மின்கம்ப மார்க்கத்தை நிருமாணித்தல் | 33kV Double Cct Lynx Tower Line | 0.8 km |
| 86 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் முன்மொழியப்பட்டுள்ள தாங்குசட்டத்தில் இருந்து அம்பத்தலே தாங்குசட்டம் மற்றும் அரங்கல தாங்குசட்டம் வரை புதிய | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மின்னூட்டியை ஒழுங்கமைத்தல் | | |
| 87 | WPS II | 2022 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | மாலபே GSS தொடக்கம் அத்துருகிரிய F6 வரை புதிய மின்னூட்டி | Single Cct Lynx Tower Line | 3km |

### 5.3.4 விநியோகப் பிரிவு 4

| தொடர்பு இல. | மாகாணம் | ஆண்டு | விபரம் | வகை | நீளம் (km) | மதிப்பிடப்பட்ட கிரயம் (இல. ரூபா மில்.) |
|---|---|---|---|---|---|---|
| ST/SP/38 | SP 2 | 2022 | திஸ்ஸ தொடக்கம் யோதகந்திய வரையான ELM இற்கான 33 kV Racoon மார்க்கத்தின் மறுசீரமைப்பு – 3km | Raccoon to ELM | 3 | 7.5 |
| | SP 2 | 2022 | Co-op mill (HA 162) தொடக்கம் பேரகம வைத்தியசாலை உப மின் நிலையம் (HA 092) வரை 33 kV Racoon மின்கம்ப மார்க்கத்தின் இடையிணைப்பு - 1km | S/C, Raccoon | 1 | 3 |
| | SP 2 | 2022 | பெரலிகெல 3 ஆம் கொலனி (HK 020) தொடக்கம் முதியம்மல்கம (HT 311) வரை 33 kV Racoon மின்கம்ப மார்க்கத்தின் இடையிணைப்பு – 2.1km | S/C, Raccoon | 2.1 | 6.3 |
| | SP 2 | 2022 | மதுனகல அரன்ய (HA 152) தொடக்கம் அலுவலகம் மற்றும் இருப்பிடம் (HS 191) sub வரையான 33 kV Racoon மின்கம்ப மார்க்கத்தின் இடைத் தொடர்பு – 3.5 km | S/C, Raccoon | 3.5 | 10.5 |
| | SP 1 | 2022 | ரகதஹேன தொடக்கம் பொல்ஹகவெல வரையுள்ள 33 kV Weasal மின்கம்ப மார்க்கத்தை Racoon ஆக மறுசீரமைத்தல் – 10 km | Weasal to Racoon | 10 | 20 |
| | SP 1 | 2022 | கங்கபட DDLO தொடக்கம் மஹாலப்பிட்டிய DDLO வரையுள்ள 33 kV Weasal மின்கம்ப மார்க்கத்தை Racoon ஆக மறுசீரமைத்தல் - 5 km | Weasal to Racoon | 5 | 10 |
| | SP 1 | 2022 | விஜயா குறூப் (BW 290) தொடக்கம் உணன்விட்டிய DDLO வரையுள்ள 33 kV Weasal மின்கம்ப மார்க்கத்தை Racoon ஆக மறுசீரமைத்தல் - 6 km | Weasal to Racoon | 6 | 12 |
| | SP 2 | 2022 | ஹொட்டியயாப்பே (MH 355) தொடக்கம் வலஸ்முல்ல (TW 356) வரையுள்ள 33 kV Racoon மின்கம்ப மார்க்கத்தை மறுசீரமைத்தல் – 2.5 km | S/C, Raccoon | 2.5 | 7.5 |

மேலுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக, 75 kW சூரிய கல PV நிகழ்ச்சித் திட்டமும் மேலே உருப்படி 4.5 இல் குறிப்பிடப்பட்டதைப் போன்று 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடரப்படும்.

## 6. 2021 ஆம் ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகை

மின்சார வழங்கல் ஒரு அத்தியாவசிய சேவையாக இருப்பதால், கோவிட் 19 நோய்ப் பரவலின் பின்னர் பல சவால்களை எதிர்கொண்ட போதிலும், இ.மி.ச. அதன் பிரதான செயற்பாடுகளான மின் பிறப்பாக்கம், பரிமாற்றம் மற்றும் விநியோகத்தை தங்குதடையின்றி நாடு பூராகவும் முன்னெடுப்பதை தொடர்ந்து மேற்கொண்டிருந்தது.

நிதியாண்டு 2021 ஆனது இ.மி.ச. இற்கு மற்றுமொரு முக்கியமான ஆண்டாகத் திகழ்ந்தது. கிரயத்தைப் பிரதிபலிக்காத விதிப்பனவுகள் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள குறைந்த கிரயத்தில் மேற்கொள்ளக்கூடிய மின்வலுப் பிறப்பாக்கல் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தாமதம் ஆகியன காரணமாக முக்கியமாக ரூபா 80 பில்லியன் பாதிடப்பட்ட நிகர நட்டத்தை இ.மி.ச. அடைந்திருந்தது. நாட்டில் காணப்படும் நோய்ப் பரவல் சூழ்நிலையில், இ.மி.ச. அதன் வருமான நீரோட்டத்தின் கடுமையான வறட்சி நிலைக்கு உள்ளாகியுள்ளது.

இ.மி.ச. ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான சக்தி விற்பனையாக 15,798 GWh இனை மதிப்பிட்டிருந்தது. இது 2020 ஆம் ஆண்டிற்கான அலகுகளிலான விற்பனையுடன் ஒப்பிடுகையில் 11% வளர்ச்சி ஆகும். வளர்ச்சியடைகின்ற சக்திக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இ.மி.ச. 2021 ஆம் ஆண்டின் அதன் நேரடி மின் பிறப்பாக்கல் கிரயத்தில் 13% (ரூபா 24 பில்லியன்) உயர்வை எதிர்பார்த்தது. கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் குறைவடைந்திருந்த மின்சாரத்திற்கான கேள்வியுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் சக்திக்கான கேள்வி, சற்று அதிகரித்திருந்தது. வீட்டு மின் நுகர்வுக்கான விதிப்பனவு வகையில் கேள்வியில் அதிகரிப்பு காணப்பட்டிருந்த போதிலும், பிரதானமாக தொழில்துறை, பொது நோக்கு மற்றும் ஹோட்டல் விதிப்பனவு வகைகளில் முன்னைய ஆண்டில் வீழ்ச்சி பதிவாகியிருந்தது. தொகையளவு வழங்கல் விதிப்பனவு வகைகளில் சக்திக்கான கேள்வி அதிகரித்த காரணத்தால் பெரும்பாலும் நோய்த் தொற்றுப் பரவலின் மூன்றாவது அலைக்கு மத்தியிலும் 2020 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் காணப்பட்ட நிகர மின் பிறப்பாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிகர மின் பிறப்பாக்கம் 6% இனால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், அலகுகளிலான விற்பனை வளர்ச்சி 2021 ஆம் ஆண்டிற்காக எதிர்வுகூறப்பட்ட விற்பனையைவிட குறைவானதாக இருந்தது. இது உயர்ந்த கிரயம் கொண்ட சக்தி மூலங்களில் இருந்து சக்தியைக் கொள்வனவு செய்யும் அவசியத்தை ஏற்படுத்தியது.

செயற்பாட்டு நட்டங்கள் தொடர்ச்சியாகப் பதிவு செய்யப்பட்டன. இது அனல் எண்ணெய் மூலங்களை அதிகளவில் நம்பியிருப்பதன் காரணமாக ஏற்பட்டதாகும். எனினும், 2021 யூன் 30 ஆந் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்கு ரூபா 4.5 பில்லியன் நட்டம் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், இது 2020 யூன் மாத நட்டத்துடன் ஒப்பிடுகையில் 79% இனால் குறைவடைந்த தொகையாகும். குறைந்த நாளாந்த மின்சார நுகர்வு அதே போன்று இ.மி.ச. நீர்மின், இ.மி.ச. நிலக்கரி மற்றும் இ.மி.ச. காற்றாலை ஆகியவற்றிலிருந்து கிடைத்த அதிகரித்த பிறப்பாக்கம் என்பன காரணமாக மின் பிறப்பாக்கல் கலவையில் ஏற்பட்ட சாதகமான மாற்றம், தகுதி அடிப்படையில் மின்சாரத்தை அனுப்பீடு செய்யும் அதிக செலவு கொண்ட மின்வலு ஆலைகளை இயக்குவதிலிருந்து இ.மி.ச. ஐ விடுவித்தது. இதுவே மேற்கூறப்பட்ட நட்டக் குறைப்பில் தாக்கம் செலுத்திய பிரதான காரணமாக அமைந்திருந்தது. 2021 ஏப்ரல், மே மற்றும் யூன் மாதங்களில் இ.மி.ச. நீர்மின்னிலிருந்து கிடைக்கப்பெற்ற மின் பிறப்பாக்கமானது நாட்டில் பதிவு செய்யப்பட்ட இயல்பாக நிலைக்கும் அதிகமான மழைவீழ்ச்சி காரணமாக முன்னைய ஆண்டுகளை விட கணிசமான அளவு அதிகரித்திருந்தது. அதற்கிணங்க, உயர் கிரயம் கொண்ட அனல் மின்வலு மூலங்களில் இருந்து பெரியளவில் பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்ளாது ஆண்டின் முதல் பாதி காலப்பகுதியில் சக்திக்கான கேள்வியைப் பூர்த்தி செய்ய இ.மி.ச. இனால் முடிந்திருந்தது.

எவ்வாறாயினும், கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக விதிக்கப்பட்ட நாடளாவிய ரீதியிலான சுகாதாரக் கட்டுப்பாடுகளின் அதிகரிப்பானது ஆண்டின் இரண்டாவது பாதியில் மின்சார நுகர்வுக்கான கேள்வியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, நாளாந்தக் கேள்வியை நிறைவேற்றும் பொருட்டு உயர் கிரயம் கொண்ட சக்தி மூலங்களில் இருந்தான சக்திப் பிறப்பாக்கத்தின் வளர்ச்சியுடன் நேரடிப் பிறப்பாக்கல் கிரயம் (செலவு) அதிகரிக்கும்.

பிரதானமாக 2021 மே மற்றும் யூன் மாதங்களில் நாட்டில் நிலவிய அதிகரித்த மழைவீழ்ச்சி நிலைமையானது சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்தான (அனல் மின்வலு) மின்வலுக் கொள்வனவு போன்ற அதிக கிரயம் கொண்ட அனல்மின் சக்தி மூலங்களிலிருந்தான மின் பிறப்பாக்கத்தின் தேவையைக் குறைத்திருக்கிறது. மேற்சொல்லப்பட்ட மாதங்களில் பெரும்பாலான நீர்த் தேக்கங்களில் அறிக்கையிடப்பட்டிருந்த சராசரிக்கும் அதிகமான மழைவீழ்ச்சியானது இ.மி.ச. நீர்மின் பிறப்பாக்கத்தை உயர்த்தியதுடன் 2021 யூன் மாதத்தின் நிகரப் பிறப்பாக்கத்தில் 51% பங்களிப்பினையும் வழங்கியிருந்தது. இலங்கையின் மிகப் பெரிய காற்று மின்வலு ஆலையான இ.மி.ச. இன் தம்பபவனி காற்று மின்வலு ஆலையானது ஆண்டின் முதல் பாதியில் 100 GWh இனைப் பிறப்பாக்கம் செய்து, இலங்கையின் மின்வலுப் பிறப்பாக்கத்தில் வரலாற்று ரீதியான மைல்கல் ஒன்றை உருவாக்கியுள்ளது.

மின் பிறப்பாக்கல் கலவையில் (மொத்த நிகரப் பிறப்பாக்கத்தில் 66%) உள்ள இ.மி.ச. நீர்மின், இ.மி.ச. நிலக்கரி மற்றும் இ.மி.ச. காற்றாலை இலிருந்தான பங்களிப்பின் அதிகரிப்பானது முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் ரீதியில் சாதகமான தாக்கமொன்றை ஏற்படுத்தியது. 2020 யூன் மாதத்துடன் ஒப்பிடும்போது, சலுகை அடிப்படையிலான உலை எண்ணெய் எரிபொருள் விலையினால் (2020.03.19 ஆந் திகதி முதல்), அனல்மின் ஆலைகளின் சக்திக்கான கிரயத்தை 22% (ரூபா 4 பில்லியன்) இனால் குறைக்க இ.மி.ச. ஆல் முடிந்திருந்தது. இதே வேளை, சலுகை விலையிலான IPP – அனல் மின்னிற்கான உலை எண்ணெய் விநியோகத்துடன், கொள்வனவு செய்யப்படும் அனல் மின்வலு மீது சார்ந்திருப்பது 29% இனால் வீழ்ச்சியடைந்தமையானது, தொடர்புடைய சக்திக் கட்டணங்களை 2020 யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 35% (ரூபா 14.7 பில்லியன்) இனால் குறைப்பதற்கு வழிவகுத்தது. நேரடி பிறப்பாக்கல் கிரயத்தில் ஏற்பட்ட மேற்சொன்ன குறைப்பானது 2021 யூன் மாதம் 30 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கான நிகர நட்டத்தை குறைப்பதை நோக்கிய நேர்மறையான பங்களிப்பினை நல்கியிருந்தது. எவ்வாறாயினும், மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக் கொள்வனவுக்காகச் செலவு செய்யப்படும் கிரயம் ரூபா 7.8 பில்லியனால் அதிகரித்திருந்தது. இது பிரதானமாக மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்தான சக்திப் பிறப்பாக்கத்தின் அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டதாகும். இதற்கு மேலதிகமாக, கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக இ.மி.ச. எதிர்கொண்டுள்ள காசுப்பாய்வுச் சிக்கல்களைக் கையாளும் பொருட்டு ஒரு தணிப்பு நடவடிக்கையாக மேந்தலைச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை ஆலோசனை வழங்கியிருந்தது.

எவ்வாறாயினும், இன்றைய நிலவரப்படி, இ.மி.ச. இன் நிதி நிலைமையானது நிதி நிலைக் கூற்றில் எதிர்மறையான கைக்கொள் இலாப மீதியினைக் கொண்டிருக்கும் அளவுக்கு குறிப்பிடத்தக்களவு பாதிப்பினைக் கொண்டிருக்கிறது. உயர் கிரயம் கொண்ட அனல் எண்ணெய் மின்வலுப் பிறப்பாக்க மூலங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பின் மீது அதிகளவில் தங்கியிருப்பதன் காரணமாக கிரயம் அதிகரிக்கின்ற அதே வேளை பிறப்பாக்கல் கிரயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மின்சார (கட்டணங்களில்) விலைகளில் எவ்வித அதிகரிப்பும் கடந்த ஏழு ஆண்டுகளில் (2013 ஆம் ஆண்டு தொடக்கம்) செய்யப்பட்டிருக்கில்லை.

பாரிய பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடும் ஒரு பொதுத்துறை நிறுவனமாக இருக்கின்ற இ.மி.ச. ஆனது மலிவான விலையில் இறுதி நுகர்வோருக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. எனவே, வீட்டு மின் நுகர்வு வகையில் உள்ள குறைந்தளவில் மின் நுகரும் இறுதி நுகர்வோர்கள் அதே போன்று தொழில்துறை, ஹோட்டல் துறை, சமயத்தலம் மற்றும் அரச துறை வகைகளிலுள்ள நுகர்வோருக்கும் உற்பத்திக் கிரயத்தையும்விட கணிசமானளவு குறைந்த விலையில் இ.மி.ச. மின்சாரத்தை வழங்குவதன் மூலம் அதிகளவில் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இது இ.மி.ச. இன் நிதிசார் நம்பகத்தன்மையை சிக்கலுக்கு உள்ளாக்குகிறது. 2021 யூன் 30 ஆந் திகதியில், அரசாங்கக் கொள்கை மூலமான மொத்த நட்டம் (மானியம்) ரூபா 23.8 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது. இங்கு உயர்ந்தளவில் மின் நுகரும் இறுதி நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட மிகை (உபரித் தொகை) ரூபா 15.4 பில்லியன் ஆகும். இதற்கிணங்க, 2021 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதியில் இ.மி.ச. இற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 8.4 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், ஏனைய வருமானத்தை எதிரீடு செய்ததன் பின்னர், சொல்லப்பட்ட காலப்பகுதிக்கான நிகர நட்டமாக ரூபா 4.5 பில்லியன் பதிவு செய்யப்பட்டது.

### கடன் பெறுகைகளும் பிரதான கடன் வழங்குநர்களும்

கிரயத்தைப் பிரதிபலிக்கக்கூடிய விதிப்பனவு இன்மை மற்றும் சேகரிப்புச் செயன்முறையில் காணப்படும் தொடர்ச்சியான முட்டுக்கட்டைகள் என்பன காரணமாக, இ.மி.ச. இன் தொழிற்படு மூலதனமானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்கள் (IPP) மற்றும் நிலக்கரியைப் பெற்றுக்கொள்ள நிதியுதவி அளிப்போர் உள்ளிட்ட பிரதான வழங்குநர்களுக்கு கொடுப்பனவைச் செய்வதில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசுக்குச் சொந்தமான பயன்பாட்டு நிறுவனம் என்ற வகையில், இ.மி.ச. ஆனது அதன் முதலாவது நகர்வாக, ஐந்து (5) ஆண்டு கால முதிர்ச்சியுடன்கூடிய ரூபா 20 பில்லியன் பெறுமதியான சிரேட்ட, தளர்வான, நிரற்படுத்தப்பட்ட, மீட்கப்படத்தக்க, மதிப்பீடு செய்யப்பட்ட தனிச்சங்களை 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி விநியோகித்திருந்தது. இதன் விளைவாக, தனிச்சங்களின் விநியோகம் தொடங்கிய நாளிலேயே அது மிகையைப் பதிவு செய்திருந்தது. பெறப்பட்ட நிதியானது சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 14 பில்லியன் பகுதிக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையில் ரூபா 6 பில்லியன் பகுதிக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.

தனிச்சங்களின் விநியோகம் ஊடாகப் பெறப்பட்ட நிதியிலிருந்து IPP இற்கான கணிசமானளவு கொடுப்பனவு மற்றும் மாதாந்தப் பகுதியளவான கொடுப்பனவுகள் ஆகியவற்றுடன், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவைத் தொகையான ரூபா 61.5 பில்லியன் ஆனது 2021 யூன் மாத இறுதியில் ரூபா 51.6 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. அதே சமயத்தில், சாதகமான

காலநிலை நிலைமைகள் மற்றும் கோவிட் 19 நோய்த் தொற்றுப் பரவலால் மின்சாரத்திற்கான கேள்வியில் ஏற்பட்ட குறைவு ஆகியவற்றின் காரணமாக அனல் மின்னை உற்பத்தி செய்யும் சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்களிடமிருந்து மின்வலுவைக் கொள்வனவு செய்வது குறைவடைந்தமை, சொல்லப்பட்ட பொறுப்புக்களின் குறைவில் நேர்மறையான தாக்கத்தைச் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், நிலுவைத் தொகைகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு போதுமானளவு காசுப்பாய்வு இல்லாத காரணத்தால் 2020 டிசெம்பர் 31 இல் ரூபா 72 பில்லியனாகக் காணப்பட்டிருந்த CPC இற்கான நிலுவைத் தொகை 2021.06.30 இல் ரூபா 78 பில்லியன் வரை அதிகரித்திருந்தது.

மேலும், 2021 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், பிரதானமாக நிலக்கரியைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 13 பில்லியனை இ.மி.ச. கடனாகப் பெற்றிருந்தது. 2021 யூன் 30 இல், தொழிற்படு மூலதன தேவைகளுக்கு நிதியளிப்பதற்காக மேலதிகப்பற்று உள்ளிட்ட மொத்த வங்கிக் கடன் பெறுகை ரூபா 114 பில்லியனாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, 2021 யூன் 30 இல் மொத்தச் செயற்றிட்டக் கடன் பெறுகையாக ரூபா 270.5 பில்லியன் காணப்பட்டது.

குறைந்த செலவு நிதியிடல் மூலம் (ஆதாரம்) ஒன்றாக முன்மொழியப்பட்டுள்ள மீள்புதுப்பிக்கத்தக்க சக்திச் செயற்றிட்டங்களின் வேலைச்சட்டகம் பற்றி இ.மி.ச. தற்போது ஆய்வு செய்வதுடன் சுற்றுச்சூழல் நேய அடிப்படையில் வளர்ந்துவரும் சக்திக் கேள்விக்கான தேவையை அடைவதற்கான ஒரு வழியாக "பசுமை நிதியிடல் முயற்சிகள்" ஊடாக அதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதன் சாத்தியத் தன்மையையும் ஆராய்கிறது.

## 7. எதிர்நோக்கப்பட்ட சவால்களும் அத்தகைய சவால்களைச் சமாளிப்பதில் பின்பற்றப்பட்ட மூலோபாயங்களும் எதிர்காலத்திற்கான பரிந்துரைகளும்.

### 7.1 கிரயத்தைப் பிரதிபலிக்கக்கூடிய விதிப்பனவின் அவசியம்

PUCSL அங்கீகரித்த முறையியலின்படி, கிரயத்தைப் பிரதிபலிக்கக்கூடிய விதிப்பனவொன்று அறிவிக்கப்படாததால், இ.மி.ச. வருடாந்தம் நிகர நிதி இழப்புகளைச் சந்தித்து வருகிறது. 2016 – 2021 யூன் மாதம் வரையான காலப்பகுதியில் இ.மி.ச. இனால் அடையப்பெற்ற திரண்ட நிதி இழப்பு இல.ரூபா 263,054 மில்லியன் ஆகும். செயற்பாட்டு நிகர காசுப் பாய்வு எதிர்மறையாக இருப்பதுடன் வெளிவாரியான நிதியுதவி வழங்கப்படாதுவிடின், பிரதான வணிக நடவடிக்கைகளுக்கான மூலதனத்தை இ.மி.ச. இனால் திரட்ட முடியாதிருக்கும். இந்த நெருக்கடியான நிதி நிலைமையானது பிரதானமாக எண்ணெய் மற்றும் நிலக்கரியைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவைப்படும் குறுங்கால தொழிற்படு மூலதனத்திற்கு நிதியளிப்பதற்காக நீண்டகால கடன் பெறுகைகளை பெற்றுக்கொள்ள இ.மி.ச. இனை நிர்ப்பந்திக்கிறது. 2021 மே 31 இல் பிரதானமாக செலுத்த வேண்டிய மீதிகளின் திரண்ட மொத்தத் தொகை இலங்கை ரூபா 317 பில்லியனாக இருந்தது. இந்த நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதுவிடின், 2025 ஆம் ஆண்டிற்குள் மொத்தக் கடனானது இலங்கை ரூபா 750 பில்லியனைத் தாண்டும் என உள்ளக ஆய்வொன்று சுட்டிக் காட்டுகிறது. CPC இடமிருந்து எரிபொருளுக்கான திருத்தப்பட்ட விலைகள் விநியோகிக்கப்படுமிடத்து, வறட்சியான காலநிலை நிலவும் காலப்பகுதியில் எண்ணெய்யின் பாவனை அதிகரிப்புடன் இந்த நிலைமை மேலும் மோசமடையும். இ.மி.ச. இன் தற்போதைய நிதி நிலைச் சூழலில், IPP மற்றும் NCRE வழங்குநர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் தீர்ப்பது சவாலானதாக இருக்கிறது என்பதுடன் இது அரசாங்கத்தின் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக் கொள்கையைப் பரிதிப்படையவும் செய்யும்.

எனவே, பின்வருமாறு விதிப்பனவை அதிகரிப்பதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது : சக்திக் கட்டணத்தை ரூபா 2.50 /kWh இனாலும், நிலையான கட்டணத்தை 35% இனாலும், கேள்விக் (தேவை) கட்டணத்தை 35% இனாலும் அதிகரித்தல்.

மற்றபடி, ஒழுங்குபடுத்துநர் (PUCSL) மூலமாக பரிந்துரைக்கப்பட்ட மானியம், தேசிய பாதீட்டில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன் தனது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அந்த மானியம் மாதாந்த அடிப்படையில் இ.மி.ச. இற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

### 7.2 அரசாங்கக் கொள்கைகள்

மின்வலுச் செயற்றிட்டங்கள் நீண்ட கர்ப்ப காலத்தைக் கொண்டவை. எனவே முன்கூட்டியே, அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடங்கத் தேவையான திகதிக்கு முன்பே திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. மின்வலு விரிவாக்கத்திற்கான திட்டங்களுக்கும்கூட குறிப்பிடத்தக்களவு காலம் எடுக்கிறது. இதனால், அரசாங்கத்தின் கொள்கைகள் தெளிவானதாகவும் உறுதியானதாகவும் இருத்தல் வேண்டும். மாற்றமடைகின்ற மற்றும் ஒவ்வாத அரசாங்கக் கொள்கைகள், பயன்பாட்டுத் திட்டமிடல்

மற்றும் செயற்றிட்ட நிறைவேற்றத்திற்கு முன்னால் பாரிய சவால்களையும் இடர்களையும் உருவாக்குகின்றன.

தற்போது, நிலக்கரி மின்வலு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், எதிர்கால மின்வலு அபிவிருத்திகள் பற்றிய அரசாங்கத்தின் உறுதியான முடிவு வழங்கப்படும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாங்கக் கொள்கை மாற்றங்கள் காரணமாக மின் வலையமைப்பு விரிவாக்கத் திட்டங்களுக்குத் தேவையான அங்கீகாரங்களும் தாமதிக்கப்படுகின்றன. எனவே, கிரயப் பயனுறுதிமிக்க தடங்கலற்ற மின்வலு வழங்கலை உறுதி செய்வதற்கான மின் பிறப்பாக்கல் அபிவிருத்திகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு உடனடியாகப் பின்பற்றப்பட வேண்டிய மின்சாரத் துறை மீதான ஒரு உறுதியான அரசாங்கக் கொள்கை தேவைப்படுகிறது.

### 7.3 அரச நிறுவனங்கள் மூலம் இ.மி.ச. இற்கான வருமதிகளும் சென்மதிகளும்

இ.மி.ச. ஒழுங்குபடுத்தப்படாத வணிகம் ஒன்றாக பல்வேறு அரச நிறுவனங்களுக்கும் அவசரகால மின்வலுப் பொறிகளை வாடகைக்கு விடுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் போன்ற சேவைகளையும் மின் தூக்கிகள் மற்றும் காற்று பதனப்படுத்தும் பொறிகளின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளையும் வழங்குகிறது. எவ்வாறாயினும், அந்த அரச நிறுவனங்கள் சேவைகளைப் பெற்றுக் கொண்டதும் அச்சேவைகளுக்கான கொடுப்பனவைச் செய்யாத பழக்கத்தைக் கொண்டுள்ளன. இடங்கள் மற்றும் சூழ்நிலைகளின் முக்கியத்துவம் காரணமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளுடன் இ.மி.ச. இத்தகைய சேவைகளை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. செலுத்தப்படாதுள்ள திரண்ட தொகை அண்ணளவாக ரூபா 297.11 மில்லியனாகும்.

அதே சமயம், 2021 மே மாத இறுதியில், அரச நிறுவனங்களால் செலுத்தப்படாதுள்ள மொத்த மின் கட்டண திரண்ட நிலுவை ரூபா 255.94 மில்லியன் ஆகும்.

மேலும் இ.மி.ச. இன் கொழும்பு நகரக் கிளையிலுள்ள GI அலகு, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் உள்ளக கம்பியிடுதல் மற்றும் அதனோடிணைந்த உபகரணங்களின் பராமரிப்புக்குப் பொறுப்பாக இருக்கிறது. இந்தப் பணிகளுக்கான கொடுப்பனவுகளும்கூட நிலுவையில் இருப்பதுடன் 2021 யூன் மாத முடிவில் அதன் திரண்ட தொகையாக ரூபா 634.73 மில்லியன் காணப்பட்டது.

எனவே, மேற்படி நிலுவைத் தொகைகளை (ஏறத்தாழ ரூபா 1,187.78 மில்லியன்) இ.மி.ச. இற்குச் செலுத்துவதற்காக தேசிய பாதீட்டின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

# லங்கா இலெக்ட்ரிசிற்றி கம்பனி லிமிற்றட்

## 1. அறிமுகம்

வ/ப லங்கா மின்சார (தனியார்) கம்பனி (லெகோ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் கீழ் மேற்கு கரையோரப் பிரதேசத்திலுள்ள கம்பனிக்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள முன்னணி பொருளாதார வலயமான நீர்கொழும்பு முதல் காலி வரையான பிரதேசங்களில் மின்சாரத்தை விநியோகிக்கும் முதன்மைக் குறிக்கோளுடன் 1983 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். அதனைத்தொடர்ந்து 2009 இன் 20 ஆம் இலக்க மின்சார சட்டத்தினால் கம்பனிக்கு விநியோக உரிமம் வழங்கப்பட்டதன் மூலம் லெகோ பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தல் தளத்திற்கு கொண்டுவரப்பட்டது.

### தூரநோக்கு

புத்தாக்கமிக்க, சுற்றாடல் தோழமையுள்ள வணிகத்தினூடாக மக்களின் வாழ்விற்கு வெளிச்சத்தை வழங்கி மகிழ்வுறுதல்

### இலட்சியநோக்கு

தொடர்ச்சியான புத்தாக்கத்தினூடாக சமூகத்திற்கு மிகச்சிறந்த எரிசக்தி தீர்வுகளை வழங்குதல்

### விழுமியங்கள்

தொடர்ச்சியான முயற்சி, நிலைபேறான தன்மை மற்றும் பதவியணியின் ஊடாக புத்தாக்க சேவைகளை வழங்கி எமது வாடிக்கையாளர்களை ஆச்சரியப்படுத்துதல்.

### மைய நிபுணத்துவங்கள்

எரிசக்தி துறையிலுள்ள பல்லின அனுபவங்களின் ஊடாக மேம்படுத்திய பொறியியல், ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் என்பன கம்பனியின் நிபுணத்துவங்களாக காணப்படுவதுடன் எமது தூரநோக்கு மற்றும் குறிக்கோள்களிற்கு அமைவாக பல்லினப்படுத்திய செயற்பாடுகளில் கம்பனி முதலீட்டினை மேற்கொள்ளும்.

### கம்பனியின் குறிக்கோள்கள்

- கம்பனியின் செயற்பாடுகள் குறித்து ஆர்வமுள்ள தரப்பினர்களின் விழப்புணர்வு உரியவாறும் வெளிப்படையாகவும் காணப்படுவதனை உறுதிசெய்தல் மற்றும் உபாயமுறை பல்லினப்படுத்தல்களில் ஈடுபடுதல்
- ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் சர்வதேச சேவை நியமங்களிற்கு அமைவுறும் வகையில் விநியோகச் சேவையினை முன்னேற்றுதல்
- ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக கம்பனியின் தொழில்நுட்ப இயலுமையினை அதிகரித்தல்
- விரயத்தினைக் இழிவுபடுத்தி வணிகத்தின் இலாபத்தன்மை, வினைத்திறன், உள்ளகச் செயன்முறைக் கட்டுப்பாடு மற்றும் உபாயவழி முதலீடுகளை மேம்படுத்துதல்
- தேசிய மற்றும் சர்வதேச நியமங்களிற்கு அமைவுறும் வகையிலான ஆரோக்கியமான வேலைச் சூழலொன்றின் ஊடாக உற்பத்தித்திறன், இயலுமைகளைக் கொண்டமைந்ததும் தூண்டப்பட்ட மற்றும் ஒருவரையொருவர் மதிக்கின்ற ஊழியப்படையொன்று இருப்பதனை உறுதிப்படுத்தல்.

## 2 2021 இல் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம்

சம்பந்தப்பட்ட தரப்பினர்களிற்கான எமது உயர்தரமான சேவைச் செயலாற்றல் மற்றும் பொறுப்புணர்வை கம்பனியின் அடைவுகள் காட்டுகின்றன.

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 பாதீடு | 2021 யூன் உள்ளபடி யானது |
|---|---|---|---|---|---|---|
| பாவனையாளர் | 551,123 | 562,412 | 568,250 | 580,184 | 612,056 | 582,134 |
| விற்பனைகள் GWh ரூபா மில். | 1518 | 1,570 | 1,646 | 1,624 | 1,740 | 1,740 |
| வருமானம் ரூபா மில். | 29,930 | 30,947 | 32,461 | 30,709 | 38,782 | 16,052 |
| விநியோக இழப்பு ( 11 Kv) % | 2.7 | 2.27 | 1.61 | 1.34% | 3.99% | 2.92% |
| பாவனையாளர் / ஊழியர் விகிதம் | 351 | 358 | 370 | 392 | 408 | 394 |
| செயலாற்றல் அளவீட்டுச் சுட்டெண்களின் நம்பகத்தன்மை (SAIDI) (மணி/பாவனையாளர்/ஆண்டு) | 41.9 | 39.1 | 34.7 | - | | |

### 2021 யூன் இல் உள்ளவாறு சொத்துக்களின் பகிர்வு அறிக்கை

| சொத்துக்களின் வகை | அளவீட்டு அலகு | 2021 இல் ஆரம்ப மீதி | 2020 யூன் இல் செயலாற்றுகை | 2021 யூன் இல் மிகுதி |
|---|---|---|---|---|
| 11 kV UG | Km | 72.042 | 0.460 | 72.502 |
| 11 kV OH/DC | Km | 14.489 | - | 14.489 |
| 11 kV OH/SC | Km | 161.311 | 0.936 | 162.247 |
| 11 kV OH/SC+LV | Km | 846.938 | 0.232 | 847.170 |
| விநியோக / உப நிலை. 11 kV | NO | 2,474 | 11 | 2,485 |
| விநியோக / உப நிலை. 11 KV இயலளவு | kVA | 398,938 | 2,880 | 401,818 |
| மொத்த / உப நிலை. 11 kV | NO | 1,982 | 26 | 2,008 |
| மொத்த / உப நிலை. 11 kV இயலளவு | kVA | 561,503 | 6,600 | 568,103 |
| சுவிட்சிங் நிலை.- LBS & Nu-Lec | NO | 552 | 4 | 556 |
| - LBC | NO | 613 | 6 | 619 |
| 11 kV தன்னியக்க மீள்முடுகை | NO | 23 | - | 23 |
| 11 kV பகுதியாக்கம் | NO | 7 | (3) | 4 |
| LV விநியோக முறைமை 1 PH/SC | km | 41.107 | (0.522) | 40.585 |
| LV விநியோக முறைமை 2 PH/SC | km | 1.960 | 0.477 | 2.437 |
| LV விநியோக முறைமை 3PH/SC | km | 3,501.565 | 12.030 | 3,513.595 |
| LV விநியோக முறைமை 3PH/DC | km | 27.981 | - | 27.981 |
| பாவனையாளர் சேவை வழிகள் | NO | 596,822 | 5,398 | 602,220 |
| இ.மி.ச. முதற்தர /உப நிலை. (லெகோ சேவை) | NO | 36 | - | 36 |
| இ.மி.ச. முதற்தர /உப நிலை. இயலளவு | MVA | 435 | 5 | 440 |
| இ.மி.ச. மின்மானிக் கொள்வனவு PT.S | NO | 38 | 1 | 39 |

### செயற்திட்டங்கள் மற்றும் செயன்முன்னேற்றம்

#### செயற்பாடுகள்

- கம்பனியின் விரிவாக்கல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் வாடிக்கையாளர்களின் கேள்வி மற்றும் முன்னேற்றகரமான வழங்கல் நம்பகத் தேவைப்பாடுகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. அவை ஒவ்வொரு கிளையினாலும் மேற்கொள்ளப்படுகின்ற தொடர் செயற்பாடுகளாகும்.
- விநியோக இழப்புக்களை தொடர்ச்சியாக குறைத்து வழங்கல் வினைத்திறனை முன்னேற்றுதல்
- மின்தடையின் போது வருகைதரும் காலம் மற்றும் பழைய நிலைக்கு சீரமைக்கும் காலத்தை குறைப்பதில் தொடர்ச்சியான அபிவிருத்தி.
- புதிய மின் இணைப்புக்களிற்கான செயன்முறைக் காலம் உள்ளிட்ட பாவனையாளர் சேவைக் கோரிக்கைக் காலத்தை குறைத்தல்.

### அபிவிருத்திகள்

- கம்பனிக்குச் சொந்தமான மின் தளத்தை ஸ்மார்ட் தளமாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஸ்மார்ட் மின்மானிகள், வலைதள கண்காணிப்பு சாதனங்கள் மற்றும் தானியங்கி சுவிட்சுகள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்கான ஸ்மார்ட் கிரிட் தளம் நிறுவப்பட்டு இயக்கப்படுகின்றது.
- ஸ்மார்ட் மின்மானிகள், வலைதள கண்காணிப்பு கருவிகள் மற்றும் தானியங்கி சுவிட்சுகள் போன்ற ஸ்மார்ட் சாதனங்களை நிறுவுதல் இடம்பெற்று வருகின்றது.
- கம்பனியின் உள்ளக செயற்பாடுகள் தன்னியக்கமாக காணப்படுவதுடன் தாள்களற்ற அலுவலகக் எண்ணக்கருவை நோக்கி நகர்கின்றன. அனைத்து வாடிக்கையாளர் சேவைகளும் இணையதள அடிப்படையிலான பயன்பாடுகளுக்கு திறக்கப்பட்டுள்ளன. “இ-பில்லிங்” முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன் அதில் பிரவேசித்து ஒரு வாடிக்கையாளர் மின்னஞ்சல் ஊடாக மின்பட்டியல்களை பெற்று பணம் செலுத்தலாம்.

- வலைதள கட்டுப்பாடுகளை தான்னியக்கமாக்குவதற்காக மேம்பட்ட விநியோக முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்படுகின்றது.
- புவியியல் தகவல் முறைமை தளம் நிறுவப்பட்டுள்ளதுடன் அனைத்து வலைதள சொத்துக்களும் இந்த தளத்திற்கு உள்வாங்கப்படுகின்றன. அனைத்து சேவை வாகனங்களும் இந்த தளத்திற்கு கையகப்படுத்தப்படுகின்றமையால் அனைத்து செயற்பாடுகளும் முகாமைக்கும் முடியுமாயின் வாடிக்கையாளர்களும் வெளிப்படையாக காணப்படும்.
- பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டுச் செயற்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட மைக்ரோகிரிட் செயற்திட்டத்தை செயல்படுத்துதல் தொடங்கப்பட்டதுடன் இது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய தொற்றுநோயின் விளைவிற்கு மத்தியிலும் தற்போது, 70% ஒட்டுமொத்த பௌதீக செயல் முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.
- நுகேகொட பரீட்சார்த்த நிலக்கீழ் கேபிளிங் செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டு, நிர்மாணித்து முடிக்கப்பட்டதுடன் இது நுகேகொட நகர மத்தியிலுள்ள மேல்நிலை நடுத்தர மின்னழுத்த வலையமைப்பை நிலக்கீழ் வலையமைப்பாக மாற்றியது.
- லெகோ வழங்கல் நம்பகத்தன்மை மற்றும் மூலாதார இயலளவு மேம்பாட்டிற்கான விநியோக முறைமை நம்பகத்தன்மை வலுப்படுத்தல் செயற்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. லெகோ இன் விநியோக மின்னழுத்தமாக 33kV ஐ அறிமுகப்படுத்த இதன்மூலம் எதிர்பார்க்கப்படுவதுடன் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக லெகோ வலையமைப்பு மூலாதாரத்திற்கு நேரடி 132/33 kV கிரிட் உப மின்நிலையங்களை இது அறிமுகப்படுத்துகிறது.
- நாரஹேன்பிட்டாவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள தலைமை அலுவலக கட்டிடத்தொகுதி நிர்மாண ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு வருவதுடன், இந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் நிர்மாணத்தை தொடங்குவதற்கு முகாமைத்துவம் எதிர்பார்க்கின்றது.
- காசு மற்றும் காசோலைகளை கையேற்கும் கியோஸ்க் இயந்திரங்களுடன் சுய-கட்டண மையங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் 24 மணிநேர கட்டண சேகரிப்பு தற்போது இடம்பெறுகின்றது.
- AMI மற்றும் ஸ்மார்ட் மின்மானி தொடர்பான உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளின் சேவை தரத்தை மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு ஸ்மார்ட் மின்மானி தரவு முகாமைத்துவ நிலையம் 2021 செப்தெம்பர் இறுதியில் நிறுவப்பட உள்ளது.

## 3 நிதி நிலைமை

2021 யூன் 30 இல் முடிவடைந்த காலத்திற்கான இலாப நட்டக் கூற்று வருமாறு.

| முடிவடைந்த காலத்திற்கு | பாதீடு 2021 ரூபா '000 | 2021 யூன் 30 (வரைபு) ரூபா '000 | 2021 திசெ. 31 (உள்ளபடியான + எதிர்வுகூறல்) ரூபா '000 | 2021 திசெ. 31 (கணக்காய்வு செய்யப்பட்ட) ரூபா '000 |
|---|---|---|---|---|
| **வருமானம்** | 38,780,814 | 16,052,467 | 32,104,935 | 30,709,215 |
| விற்பனைக் கிரயம் | (29,218,885) | (11,769,602) | (25,039,204) | (24,596,359) |
| **மொத்த இலபம்** | **9,561,929** | **4,282,865** | **7,065,731** | **6,112,855** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 1,785,864 | 1,627,816 | 1,891,996 | 922,496 |
| செயற்பாட்டுச் செலவினம் | (2,943,532) | (1,221,368) | (2,685,035) | (2,575,292) |
| நிர்வாக செலவினம் | (3,815,422) | (1,342,814) | (3,188,675) | (2,875,719) |
| செயற்பாட்டு இலாபம் | 4,588,840 | 3,346,500 | 3,084,017 | 1,584,341 |
| நிதி வருமானம் | 665,404 | 238,612 | 477,224 | 867,193 |
| நிதிக் கிரயம் | (87,155) | (10,337) | (60,674) | (142,541) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **5,167,089** | **3,574,776** | **3,500,567** | **2,308,993** |
| வருமான வரிச் செலவினம் | (1,446,785) | (1,000,937) | (980,159) | (626,655) |
| **ஆண்டுக்கான இலாபம்** | **3,720,304** | **2,573,838** | **2,520,408** | **1,682,338** |

2021 யூன் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று வருமாறு.

| | யூன் 2021 ரூபா "000 | திசெ. 2020 ரூபா "000 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 13,788,611 | 13,675,416 |
| நிதிச் சொத்துக்கள் | 10,838,875 | 10,838,875 |
| ஏனைய சொத்துக்கள் | 2,056,120 | 2,152,456 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்** | 26,683,606 | 26,666,747 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| சரக்கிருப்புகள் | 2,719,917 | 2,804,761 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 11,548,692 | 8,262,660 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 8,488,288 | 9,178,713 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 923,600 | 431,801 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | 23,680,497 | 20,677,935 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 50,364,103 | 47,344,683 |
| **உரிமைத்துவமும் பொறுப்புகளும்** | | |
| **உரிமைத்துவம்** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 1,145,067 | 1,145,067 |
| ஒதுக்கங்கள் மற்றும் நிறுத்திவைத்த உழைப்புகள் | 36,061,923 | 33,537,300 |
| **மொத்த உரிமைத்துவம்** | 37,206,990 | 34,682,367 |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | |
| வட்டிகொண்ட பெறுகைகள் | 94,393 | 94,393 |
| பிற்போட்ட பொறுப்புகள் | 6,089,978 | 5,995,803 |
| ஓய்வூதிய நலப் பொறுப்புக்கள் | 1,487,149 | 1,478,148 |
| | 7,671,520 | 7,568,344 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 4,276,225 | 4,624,583 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 1,209,367 | 469,390 |
| **மொத்த நடைமுறை பொறுப்புகள்** | 5,485,592 | 5,093,972 |
| **மொத்த பொறுப்புகள்** | 13,157,113 | 12,662,316 |
| **மொத்த உரிமைத்துவமும் பொறுப்புக்களும்** | 50,364,103 | 47,344,683 |

## 4 எதிர்கொண்டுள்ள சவால்களும் அந்தச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள உத்திகளும்

- நிலவுகின்ற தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பாதிடப்பட்ட முன்னறிவிப்பு விற்பனையுடன் ஒப்பிடும்போது உண்மையான விற்பனை குறைந்துள்ளது. இருப்பினும், கம்பனிக்கு தற்போதைய மேந்தலைச் செலவுகளைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

- தொற்றுநோய் காலத்தில் கம்பனியின் வியாபாரக் கடன்பட்டோர் நிலைமை படிப்படியாக அதிகரித்துள்ளது. நிலவும் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, பெரும்பாலான வணிக நடவடிக்கைகள் தடைபட்டதுடன், அதன் விளைவாக, மின்சார வாடிக்கையாளர்களுக்கு அரசு சலுகைகளை வழங்கியது. லெகோ நுகர்வோர் மின் துண்டிப்பை தவிர்த்தமை காரமாண வியாபார கடன்பட்டோரில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

- 2020 ஏப்ரல் முதல் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டன. இதன் காரணமாக கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கம்பனியின் மொத்த வியாபார வருமதி மீதிகள் கனிசமாக அதிகரித்துள்ளது. தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் தற்போதைய நிலுவையில் உள்ள மீதிகள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு லெகோ நடவடிக்கை எடுத்துள்ளதுடன் பட்டியல்களைத் தீர்ப்பதற்கான தவணை முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம் வணிகங்கள் நிலுவையில் உள்ள மின் கட்டணங்களை அவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் தீர்க்க முடியும். இந்த வாடிக்கையாளர்களுக்கான மின்துண்டிப்பு நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முகாமைத்துவம் ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், இது படிப்படியான மின்துண்டிப்பு நடவடிக்கையாக காணப்படும்.

- மின்சார மானி வாசித்தல்களைப் பெறுதல் மற்றும் மின் பட்டியலுக்கான கட்டணத்தை அறவிடுதல் ஆகியன தொற்றுநோய் சூழ்நிலையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

## 5 2022 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள்

- வினைத்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துவதில் ஸ்மார்ட் தளத்தின் தீர்வை அமுல்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- உள்ளக வினைத்திறன் அதிகரிப்பை அடைவதற்காக வணிக செயல்முறை மறு பொறியியல் செயல்முறை பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- உயர் கட்டுப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மை மூலம் வணிகத் திட்டத்திலுள்ள இலக்குகளை அடைவதற்கு செயன்முறை தன்னியக்க பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- மின்வலு முறைமை நம்பகத்தன்மை வலுப்படுத்தும் செயற்திட்டம் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்படும். இந்த செயற்திட்டத்திற்கு முக்கியமாக ஆ.அ.வங்கி நிதியளிக்கும். எதிர்பார்க்கப்படும் செலவு சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்பதுடன் இச்செயற்திட்டம் 2026 ஆம் ஆண்டுக்குள் பூரணப்படுத்தப்படும்.

- தலைமை அலுவலக நிர்மாண செயற்திட்ட வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதனால் தலைமை அலுவலக கட்டிடம் 2024 க்குள் குடியமர்வதற்கு தயாராக காணப்படும்.

# எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட்

## அறிமுகம்:

1980 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட எல்டிஎல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டெட், தற்போது அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் 67 பார்க் வீதி , கொழும்பு 2 இல் அமைந்துள்ளது. நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இக்கம்பனி அதன் கூட்டுறவுப் பயணத்தில் தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருப்பதோடு, அதன் பொறியியல் சிறப்பின் ஊடாக, இலங்கை மற்றும் வெளிநாடுகளில பல இலக்குகளை அடைந்திருந்ததோடு, மின்சக்தித் துறையில் உச்சத்ததை அடைந்து இதன் மூலம் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட, ஒரு புகழ் பெற்ற மற்றும் மின்சக்திக் கைத்தொழில் துறையில் முன்னணி வகிக்கும் ஒரு கம்பனியாக மாறியுள்ளது. இக்கம்பனி இது வரையில் மேற்கொண்டது போல, அதன் வர்த்தகத்தை. இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள மின்சக்தித் துறையின் மின்னுற்பத்தி, மின்சக்தி உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மின்சக்தி விநியோக மின்மாற்றிகளின் தயாரிப்பு, சூடான மின்முலாமை பதனப்படுத்தல் (Hot Dip Galvanizing), போன்ற பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வெற்றிகரமாக தனது உறபத்திப் பொருட்களையும் மற்றும் தயாரிப்புக்களையும் பன்முகப்படுத்தியிருந்தது. தகுதி வாய்ந்த / அனுபவமுள்ள பொறியியல் உயர்தொழில் உத்தியோகத்தர்களையும் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களையும் கொண்ட மின்சக்தித் துறை பொறியியல் பணிகளின் களத்தில் உள்ள பரந்த அனுபவத்தையும் மற்றும் அறிவையும் ஆதரவாகக் கொண்டு இக்கம்பனி, தைரியமாக சர்வதேச மின்சக்தித் துறை சந்தைகளுக்குள் ஊடுருவியதேடு, இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அப்பால் வெளிநாடுகளிலும் வெற்றிகரமாக EPC ஒப்பந்தங்களை ( பொறியியல், கொள்முதல், மற்றும் நிர்மாணம்) மேற்கொண்டது.

தற்போது எல்டீஎல் ஹோல்டிங்ஸ் இலங்கையின் பாரிய சுயாதீன மின்னுற்பத்தியாளராக விளங்குவதோடு. தேசிய மின் தொகுப்புக்கு 300 மெவோ இற்கும் அதிகமான மின்சக்தியை வழங்குகின்றது. எல்டீஎல் ஹோல்டிங்ஸ் முழுமையாக தன்னியக்கப்பட்ட மின்முலாம் பூசும் மின்நிலையம், மின்செலுத்துகை கோபரங்கள், ஏனைய கைத்தொழில்கள் மற்றும் உயர்வான சர்வதேச தர நிர்ணயங்களுக்கு ஏற்ப ஒரு மணித்தியாலத்திற்கு 6.2 மெட்ரிக் தொன் வெளியீடொன்றை உற்பத்தி செய்யும் கொள்திறனையும் வழங்குகின்றது.

லக்தனவி கம்பனி லிமிட்டட் எல்டீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார் கம்பனி) கம்பனியின் துணை நிறுவனங்களில் ஒன்றாக விளங்குவதோடு, ஆரம்பத்தில் 350 மெவோ திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு / டீசல் மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலோ அல்லது நாட்டின் தொற்று நோய் நிலைமை வழமையான நிலைமைக்கு மாறினால், அதற்கு முதலிலோ தேசிய மின்தொகுப்புக்கு சேர்த்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு உள்ளடங்கலாக அதன் குழு சிறந்த பயிற்சி பெற்ற, ஒழுக்காற்றுடைய, அர்ப்பணிக்கக் கூடிய குழுவொன்றாக உள்ளதோடு. அவர்களின் நிரந்தரத் தன்மை, வளவுடனும் சக்தியுடனும் ஒன்றிணைந்த எமது வளங்களை அதிக பட்சமாக பயன்படுத்துவதன் மூலம் கண்டுபிடிப்புக்கள் மற்றும் உயர் தொழில்நுட்பத்தை தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டிலும் மற்றும் சர்வதேச ரீதியிலும் நிறுவன ரீதியான இலக்குகளை சிறந்த முறையில் பூர்த்தி செய்வதன் மூலம் எல்டீஎல் குழுவின் அடுத்து வரும் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல ஊக்கத்துடன் இருக்கிறது.

இக்கம்பனி பல ஆண்டுகளாக அதன் தனித்துவமான செயலாற்றுகையின் காரணமாகவும் மற்றும் பொறியியல் சிறப்பிற்காகவும் வலயத்தின் சிறந்த சுயாதீன தயாரிப்பாளருக்கான மதிப்பு மிக்க தங்க விருது உட்பட பின்வருவன உள்ளடங்கலாக பல்வேறு விருதுகளை பெற்றுக் கொண்டுள்ளது:

- இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 2015 இற்கான பொறியியல் சிறப்பு விருதை வெற்றி கொள்ளல்.
- தென் கொரியாவில் இடம் பெற்ற சிறந்த செயலாற்றுகைக்கான 2016 ஆசியாவின் மின்சக்தி விருதை வெற்றி கொள்ளல்.
- லக்தனவி கம்பனி உரிய முறையில் கடனைச் செலுத்தியதன் காரணமாக கடனைப் பெற்றுக் கொண்டதற்கான தகைமை தொடர்பாக Fitch Rating Agency இனால் பகிரங்கமாக காட்டப்பட்டுள்ளதோடு, அது AA”(lka) என தரப்படுத்தப்பட்டுள்ளதோடு, அது AAA கடன் தரப்படுத்தலுக்கு மாத்திரமே ஒரு படி கீழே நகர்ந்துள்ளது.







**பங்கிலாபக் கொடுப்பனவுகள் :**

எல்டீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியினால்) 1980 ஆம் ஆண்டிலிருந்து கடந்த நான்கு தசாப்தங்களுக்குள் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, ரூபா 16 பில்லியனை விட அதிகமான திரண்ட பங்கிலாபக் கொடுப்பனவொன்றை மேற்கொள்வதன் மூலம் இலங்கை மின்சார சபையின் நிதிப்பாய்ச்சலுக்கு பாரிய ஒரு பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. அதே போல, கம்பனி தனது வெற்றியை வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் ரூபா 33 பில்லியனுக்கும் அதிகமான தேறிய சொத்துக்களைப் பதிவு செய்துள்ளது. கம்பனியின் ஊழியர்களை பங்குதாரர்களாக மாற்றுவதற்கு கம்பனியினால் 2001 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப, 2005 ஆம் ஆண்டில், வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் உரித்தாக்கப்பட்டிருந்த பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக கம்பனிக்குச் சொந்தமான வளங்களை அதிகபட்சம் பயன்படுத்துவதன் மூலம் கம்பனியிடமுள்ள இலாபத்தை மேலும் விருத்தியடையச் செய்தது.

350 மெவோ திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையினால் அழைக்கப்பட்ட கேள்வி மனுவிற்கு கம்பனியின் முழுமையாகச் சொந்தமான துணைக் கம்பனியொன்றும் மற்றும் மின்நிலைய செயற்பாட்டுப் பிரிவான லக்தனவி கம்பனி விலைக்குறிப்பீடொன்றைச் சமர்ப்பித்தது. லக்தனவி கம்பனியினால் முன் வைக்கப்பட்ட விலைக் குறிப்பீடு குறைவான விலைகளைக் கொண்ட விலைக் குறிப்பீடாகக் கருதப்பட்டு அது 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதோடு, அதன் மூலம் அரசாங்கத்திற்கும். மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் பின்வரும் நன்மைகள் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

1. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து கொள்முதல்களும் நாட்டிற்குள் உள்ள வளங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படுவதோடு. நிதியானது வெளிநாடுகளுக்கு வெளியேற்றப்படுவதை குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைக்க முடியும். எனவும் எதிர்பார்கப்படுகின்றது
2. லக்தனவி கம்பனியினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்ட அனுபவமுள்ள பொறியியலாளர்கள், திறனுள்ள தொழிலாளர்கள் மற்றும் ஏனைய பதவியணிகளை உள்ளடக்கிய குழு கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவார்கள். இதன் காரணமாக நாட்டின் பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதனையும் குறைக்கக் கூடியதாக இருக்கும்.
3. நாட்டில் இருக்கும் வேலையின்மை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களிலிருந்து இது வரையிலும் இந்நிறுவனம் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் இளம் பொறியிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றது.
4. எல்டீஎல் ஹோல்டிங்க்ஸ் (தனியார் ) கம்பனியினால் ஈட்டப்பட்ட பங்கிலாபத்தின் மூலம் இலங்கை மின்சார சபை நன்மையடையலாம்.

**வெளிநாட்டுக் கருத்திட்டங்கள்:**

வெளிநாடுகளின் நீர் மற்றும் அனல் மின் நிலையங்களின் செயற்பாடுகளுக்கான கேள்வி மனுக்களை பெற்றுக் கொள்வது தொடர்பாக இக்கம்பனி வெற்றிகரமான பெறுபேறுகளை அடைந்தாலும் கூட, இலங்கை மத்திய வங்கியின் அந்நியச் செலாவணித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக குறிப்பாக வங்காளதேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டங்களின் முன்னேற்றத்துக்கு ஓரளவு தடையாக உள்ளது.

எமது கம்பனியினால் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட இந்தியாவின் சுவிச்ஜியர் தயாரிப்புக் கம்பனியொன்றான ஏசியாடிக் இலக்ட்ரிகல் என்ட் சுவிச்ஜியர் கம்பனி (Asiatic Electrical & Switchgear Company (PTE) Ltd ) இக்கம்பனியினால் நியமிக்கப்பட்ட அனுபவமுள்ள பிரதான நிறைவேற்று உத்தியோகதர் ஒருவரின் நிர்வாகத்தின் கீழ் செயலாற்றுகையை மேம்படுத்திக் கொண்டது. ஏசியாடிக் இலக்ட்ரிகல் என்ட் சுவிச்ஜியர் கம்பனியினால் எமது கம்பனியின் மின்சக்தித் துறையின் அபிவிருத்தித் தொழிற்பாடுகளுக்கான கேள்வி தொடர்ச்சியாக பூர்த்தி செய்யப்படுவதனால் அக்கம்பனியை பெற்றுக் கொள்வதும் எமது கம்பனிக்குக் கிடைக்கப் பெற்ற பாரிய ஒரு நன்மையாகும்.

**வெளிநாட்டுத் துணைக்கம்பனிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற பங்கிலாப வருமானங்கள்:**

கம்பனியின் 2020/21 நிதியாண்டின் செயலாற்றுகை தொடர்பான கலந்துரையாடலின் போது துணைக்கம்பனியை வெற்றிகரமாக செயற்படுத்துவதன் மூலம் கம்பனிக்கு ஐஅடொ 4,489258 பங்கிலாப வருமானமொன்றை ஈட்டக் கூடியதாக இருந்தது. அதனை பின்வருமாறு வகைப்படுத்தமுடியும்:

| | | |
|---|---|---|
| 1. | லக்தனவி பங்லா பவர் லிமிட்டட், வங்காளதேசம் | .. ஐஅடொ. 897,190 |
| 2. | பெனி லங்கா பவர் லிமிட்டட் வங்காளதேசம் | .. ஐஅடொ 3,592,068 |
| | மொத்தம் | ஐஅடொ **4,489,258** |

இந்நாட்டில் மாத்திரமல்லாது வெளிநாடுகளிலுமுள்ள வர்த்தக வாய்ப்புக்களுக்குள்ள அனைத்து மின்சக்திச் சாத்தியப்பாடுகளையும் பயன்படுத்துவதற்காக எல்டீஎல் கம்பனியினால் பல்வேறு துணைக் கம்பனிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சகல வியாபாரங்களையும் பொருத்தமான முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக பல பிரிவுகளாக அதன் வர்த்தகத்தினை பன்முகப்படுததலானது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 2021 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகையும் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டங்களும்

**2021 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை நிதிப் பிரிவின் சிறப்பம்சங்கள் உள்ளடங்கலாக எல்டீஎல் ஹோல்டிங்ஸ் கம்பனிக் குழுவின் செயலாற்றுகை**

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டின் நிதிச் செயவாற்றுகை மற்றும் பிரதான செயற்பாட்டின் சுருக்கம் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. : -

| காலப்பகுதி | நிதியாண்டு 2021 ஜனவரி/ ஆகஸ்ட் | நிதியாண்டு 2020 ஜனவரி/ ஆகஸ்ட் | நிதியாண்டு 2019 ஜனவரி/ ஆகஸ்ட் |
|---|---|---|---|
| **விற்பனைத் திரும்பல்** | **(ரூபா. மில்லியன்)** | **((ரூபா. மில்லியன்)** | **((ரூபா. மில்லியன்)** |
| பல்வேறு சேவைகள் - தயாரிப்பு | 6,994 | 6,397 | 5,947 |
| மின்னுற்பத்தி | 11,213 | 6,861 | 6,439 |
| நிர்மாண சேவைகள் | - | - | 294 |
| **மொத்தம்** | **18,207** | **13,259** | **12,680** |
| **மொத்த இலாபம்** | | | |
| பல்வேறு சேவைகள் - தயாரிப்பு | 3,290 | 3,134 | 2,679 |
| மின்னுற்பத்தி | 3,056 | 3,119 | 1,835 |
| நிர்மாண சேவைகள் | - | - | 76 |
| **மொத்தம்** | **6,346** | **6,253** | **4,591** |

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட எட்டு மாத காலப்பகுதிக்கு (2021 ஜனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை ) பதிவு செய்யப்பட்ட கம்பனியின் மொத்த ஒருமுகப்படுத்தப்பட்ட விற்பனைத் திரும்பல் மற்றும் மொத்த இலாபம் ஆகியனவற்றை முன்னைய ஆண்டின் குறிப்பிட்ட காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் முறையே 37.31% மற்றும் 01.49% ஆக வளர்ச்சியடைந்துள்ளது.

முன்னைய ஆண்டின் "எரிசக்தி உற்பத்தியுடன்" ஒப்பிடுகையில் 63.4%மாக குறிப்பிடத்தக்க விருத்தியொன்றை பதிவு செய்துள்ளது. ஆயினும், முன்னைய ஆண்டில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் 02.02% வீழ்ச்சியொன்றை காட்டுகின்றது.

## 1.0 மின் நிலையங்களின் செயற்பாடுகளும், பராமரிப்பும்

### 1.1 கெரவலப்பிட்டிவிலுள்ள யுகதனவி மின்நிலையம்

| ஸ்தாபிக்கப்பட்ட மின்நிலையம் | யுகதனவி மின் நிலையம், கெரவலப்பிட்டிய, இலங்கை |
|---|---|
| மொத்த மின்நிலைய கொள்திறன். | 300 மெவோ |
| GT/ST வழங்குனர் | GE பிரான்ஸ்/ஐக்கிய அமெரிக்கா |
| இயந்திரத்தின் மாதிரி | GT – Frame 9E, ST SC5 |
| மாற்று மின்மாற்றியின் வகை | GE 9A5 |
| வடிவமைப்பு | 2:2:1 |
